வாராந்த சஞ்சிகை

# சுடர் ஒளி

டிசம்பர் 10 - 16 2014

பக்கம் 24

விலை 30/-

# ஒரே குட்டை மட்டை



உப்ஹார
ஓய்வு பெற்றவர்களுக்கான கடன் திட்டம்



ரூபா ஒரு இலட்சத்துக்கான தவணைக் கட்டணம் ரூ.1, 609 இலிருந்து*

வாழ்வாதாரமளிக்கும் - உற்சாகமூட்டும் - நிம்மதியான வாழ்க்கை

| | | |
|---|---|---|
| ரூபா ஒரு மில்லியன் வரையிலான கடனுதவி.* | உத்தரவாதமளிப்பவர்கள் தேவையில்லை. | ஆகக்குறைந்த வட்டி. |
| ஆகக்குறைந்த தவணைக் கட்டணம். | மரணத்தின்போது தங்கி வாழ்பவருக்கு நட்டயீட்டுக் கொடுப்பனவு.* | வங்கியொன்றினால் வழங்கப்படும் அதிகூடிய ஒய்வுக் கடன்.* |

*நிபந்தனைகளுக்குட்பட்டது.

ஓய்வு பெற்றவர்களுக்கு ... வேண்டி ஆகக்குறைந்த வட்டி ... உறுதிப்படுத்தப்படும் மாபெரும் வெகுமதி.

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
0112 832577

ශ්‍රී ලංකා විශ්‍රාම
இலங்கை ஓய்வு
Sri Lanka Pensions
ஓய்வூதியத் திணைக்களம்

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

SDBL
சணச அபிவிருத்தி வங்கி
தேசத்தின் முன்னோடி

Reg. No: PB 62PQ    Fitch rating BB+(lka)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலையா? வாலா?

அணித்தலைவராகச் செயற்பட கைக் கெட்டிய வாய்ப்பு வாய்க்கெட்டாத நிலை இந்தியாவின் விராட் கோஹ்லிக்கு ஏற்பட்டுள்ளது. ஆஸ்திரேலியாவுக்குச் சென்றுள்ள இந்திய அணி பங்கு பெறும் முதலாவது போட்டியில் தனிப்பட்ட காரணங்களுக்காக விலகினார் அணித்தலைவர் டோனி. இதனால் விராட் கோஹ்லியே இந்திய அணியை முதலாவது டெஸ்ட் போட்டியில் வழிநடத்த இந்தியக் கிரிக்கெட் சபை தேர்வு செய்தது. இதனால் முதலாவது போட்டியில் தன்னுடைய முழுத் திறனையும், புதிய வியூகங்களையும் பயன்படுத்தி டோனி இல்லாவிட்டாலும் அணியை வழிநடத்த நான் இருக்கிறேன் என்று காட்ட விராட் கோஹ்லிக்கு ஒரு அருமையான சந்தர்ப்பம் வாய்த்திருப்பதாக கிரிக்கெட் அவதானிகள் கருதினர். ஆனால் இந்த நிலையில் எதிர்பாராத விதமாக் உள்ளூர் போட்டி ஒன்றில் ஆஸ்திரேலிய வீரரான ஹியூக்ஸ், பவுன்ஸர் பந்தால் தாக்குண்டு உயிரிழந்தார். இதனால் உலகெங்கிலும் உள்ள கிரிக்கெட் வீரர்களுக்கு ஏற்பட்ட மன உளைச்சல் காரணமாக பல போட்டிகள் இரத்துச் செய்யப்பட்டன அல்லது பிற்போடப்பட்டன. அப்படிப் பிற்போடப்பட்ட போட்டிகளில் ஆஸ்திரேலிய - இந்திய அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியும் அடக்கம்.

போட்டி பிற்போடப்பட்டதால் தன்னுடைய சொந்தப் பணியை முடித்துக் கொண்டு இந்திய அணித்தலைவர் மகேந்திர சிங் டோனி , திட்டமிட்டபடி இந்திய அணியுடன் இணைந்துவிட்டதால், முதலாவது டெஸ்ட் போட்டிக்கு அவரே தலைமை தாங்கவுள்ளார். தலை இருக்கும் போது வால் ஆட முடியாதல்லவா.






# குமுறும் ஶ்ரீசாந்த்

ஐ.பி.எல் சூதாட்ட விவகாரம் சூடுபிடித்து வருகின்ற நிலையில் இந்தியக் கிரிக்கெட் சபை தனக்கு அதிகமாக அநீதி இழைத்துவிட்டதாக ஆயுள்காலத் தடை விதிக்கப்பட்ட ஶ்ரீசாந்த் புலம்ப ஆரம்பித்துள்ளார்.

6 ஆவது ஐ.பி.எல். போட்டியில் சூதாட்டத்தில் ஈடுபட்டதாகத் தெரிவித்து ராஜஸ்தான் றோயல்ஸ் அணியை சேர்ந்த ஶ்ரீசாந்த், அங்கீட் சவான், அஜீத் சண்டிலா ஆகியோருக்கு ஆயுள் தடை விதிக்கப்பட்டது.

இதனால் இவர்களின் கிரிக்கெட் வாழ்வின் இறுதித்தருணமாக தடை விதித்த அந்த நிமிடம் மாறியது. அது மட்டுமல்லாது இவர்கள் மீது பொலிஸார் தொடர்ந்த வழக்கு நீதிமன்றத்தில் தற்போது நடந்து வருகிறது.

அது ஒருபுறமிருக்க தடையால் வீட்டில் முடங்கிய ஶ்ரீசாந்த் திரைப்படத்தில் நடிக்கப் போவதாக செய்திகளும் வெளியாகத்தான் செய்தன. இந்த நிலையில்தான் 'சூதாட்ட விவகாரத்தில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையால் நான் மிகவும் பாதிக்கப்பட்டேன். எனக்கு அதிகமாக அநீதி இழைக்கப்பட்டுள்ளது. எனக்கு எதிராக எந்தவிதமான் ஆதாரமும் இல்லை. ஆனாலும் எனது தலைவிதியை 5 நிமிடத்திலேயே முடிவு செய்து விட்டார்கள். என்றாலும் நான் நிரபராதி என்பதை நிரூபிப்பேன்' என்று ஒருபுறம் புலம்பலும் மறுபுறம் சவாலுமாகக் கூறுகிறார் ஶ்ரீசாந்த்.

# வேண்டாம் பவுன்சர்

பவுன்சர் பந்து வீச்சால் உயிரிழந்த ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் பிலிப் ஹியூக்ஸுக்காக பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் ஒரு பவுன்சர் பந்து கூட வீசாமல் அஞ்சலி செலுத்தியுள்ளது நியூசிலாந்து கிரிக்கெட் அணி.

நியூசிலாந்து-பாகிஸ்தான் இடையேயான மூன்றாவது டெஸ்ட் சார்ஜாவில் நடந்து கொண்டிருந்த சமயத்தில் தான் பிலிப் ஹியூக்ஸ் உயிரிழந்தார்.

அவரின் மரணச் செய்தி கேட்ட இரு நாட்டு வீரர்களும் கடும் மன உளைச்சலுக்கு ஆளாகினர்.

இதையடுத்து நியூசிலாந்து பயிற்சியாளரின் அறிவுரையின்படி பாகிஸ்தானுடனான 2ஆவது இன்னிங்ஸில் பவுன்சரே வீசாமலும், தமது 2 ஆவது இன்னிங்சில் வீரர்கள் சதம் அடிக்கும்போது துடுப்பைத் தூக்கி கொண்டாட்டத்தை காண்பிக்காமலும் ஹியூக்ஸ்சுக்கு அஞ்சலி செலுத்த நியூசிலாந்து வீரர்கள் முடிவு செய்தனர்.

அத்துடன் ஹூயூக்ஸின் நினைவாக நியுசிலாந்து வீரர்கள் அனைவரின் ஆடையிலும் பி.ஹெச். என ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது. குறித்த இன்னிங்ஸில் 1135 பந்துகள் வீசப்பட்டன. அதில் ஒன்று கூட பவுன்சர் கிடையாது. மேலும் நியூசிலாந்தின் வில்லியம்சன் 50, 100, 150 ஓட்டங்கள் எடுக்கும் போது துடுப்பை உயர்த்தவில்லை. அதேபோன்று மெக்கலம், 100, 200 ஓட்டங்களை எடுக்கும் போதும் துடுப்பை உயர்த்தவில்லை.

மாறாக தனது இரட்டைச் சதத்தை ஹியூக்சுக்கு சமர்ப்பிப்பதாக அறிவித்திருந்தமை நியூசிலாந்து வீரர்களின் மனித நேயத்தை எடுத்து காட்டியது.

காரணம் வெற்றிபெற்றேயாக வேண்டும் என்ற சூழ்நிலையிலும் நியூசிலாந்து பந்து வீச்சாளர்கள் பவுன்சர் வீசவில்லை எனினும் பாகிஸ்தானை ஒரு இன்னிங்ஸ் மற்றும் 80 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி அந்த டெஸ்ட் போட்டியை தன தாக்கி நியூசிலாந்து வெற்றி பெற்றமை கிரிக்கெட் ரசிகர்களுக்கு ஆனந்தத்தை அளித்தது.

தொகுப்பு : கோகுலன்



# சாதனை மேல் சாதனை



இந்திய வீரர் டிராவிட் மற்றும் ஆஸ்திரேலிய வீரர் பொண்டிங்க் ஆகியோரை ஓரங்கட்டிவிட்டு சர்வதேச போட்டிகளில் அதிக அரைச்சதம் அடித்த வீரர்களில் இலங்கை அணியின் நட்சத்திர வீரர் சங்கக்கார மூன்றாவது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

சுற்றுப்பயணம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள இங்கிலாந்து அணிக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில் மஹேலவுடன் ஜோடி சேர்ந்த சங்ககார ஆட்டமிழக்காமல் 67 ஓட்டங்களைக் குவித்தார். இதன் மூலம் 147 அரைச்சதங்களைப் பெற்று அனைத்து வடிவமான சர்வதேச போட்டிகளிலும் அதிக அரைச்சதம் பெற்ற மூன்றாவது வீரராக பதிவாகினார்.

அதனை தொடர்ந்து இரு அணிகளுக்கும் இடையிலான மூன்றாவது போட்டியில் சங்கக்கார 13 ஓட்டங்களை பெற்ற வேளை ஒரு நாள் போட்டியில் 13 ஆயிரம் ஓட்டங்களை கடந்த 4 ஆவது வீரர் என்ற சிறப்பையும் பெற்றார்.

அதனை தொடர்ந்து பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 21 ஓவர்கள் முடிவில் 136 ஓட்டங்கள் எடுத்திருந்த போது அந்த அணியின் இரண்டாவது விக்கெட்டாக சங்கக்காரவின் கையில் சிக்கினார் குக். இதன் மூலம் ஒரு நாள் போட்டியில் 472 பேரை ஆட்டமிழக்க செய்து அதிக வீரர்களை ஆட்டமிழப்பு செய்த விக்கெட் காப்பாளர் என்ற உலக சாதனைக்கு சொந்தகாரராக இருந்த கில்கிறிஸ்டின் சாதனையை முறியடித்தார் சங்ககார.

இவ்வாறு பல நட்சத்திரங்களின் சாதனைகளை இங்கிலாந்து தொடரில் ஓரங்கட்டிகொண்டு முன்னேறிவரும் சங்க்காரவுக்கு அவரின் ரசிகர்கள் சமூக வலைத்தளங்களில் வாழ்த்துக்களை தெரிவித்து மகிழ்ச்சியை வெளிப்படுத்திவருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புலிகளால் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட 80 பேரைத் தேடுகிறோம் என்ற பெயரில் அரசாங்கம் புலிகளுக்கு எதிரான சாட்சிய தேடுதலில் தன்னை ஈடுபடுத்தியிருக்கின்றது. இந்த ஆய்வில் அரச பகுப்பாய்வு பிரிவினர், ராஜரட்ட பல்கலைக்கழகம் மற்றும் ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக தொல்லியல் துறையினர், தொல்பொருள் திணைக்களம், தடயவியல் ஆய்வுப் பிரிவினர், புலனாய்வுப் பிரிவினர், பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் ஆகிய பல அமைப்புகள் முல்லைத்தீவில் புலிகளுக்கு எதிரான ஆதாரங்களைச் சோடிக்கும் பணியில் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றனர்.**

# சிங்கங்கள் சொல்லும் வரலாறு

- அனுஷ்கன்



சர்வதேச போர்க்குற்ற விசாரணையில் இருந்து எப்படித் தப்பலாம் என அரசாங்கம் ரூம் போட்டு யோசிக்க தொடங்கியிருக்கிறது. வெளியுலகுக்குத் தெரியவராது என்ற மமதையில் வன்னி பெரு நிலப் பரப்பில் முள்ளிவாய்க்காலிலும், நந்திக்கடலிலும் இலங்கை இராணுவத்தினர் அரங்கேற்றிய படுகொலைகள் சர்வதேச ஊடகங்களில் வெளிவந்ததால், இலங்கை அரசு மாபெரும் இக்கட்டு நிலைக்குள் சிக்கியிருந்தது. இலங்கை அரச படைகள் மீது போர்க்குற்ற விசாரணை தேவை என்ற கருத்தை இந்த ஊடகங்கள் வெளியிட்ட பதிவுகள் பரவலாக ஏற்படுத்தியிருக்கின்றன. அத்துடன் இலங்கையில் உள்ள சிறைச்சாலைகளிலும், இராணுவ முகாம்களிலும் விசாரணை என்ற பெயரில் தாம் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டதான சாட்சியங்களை புலம்பெயர்ந்து, அரசியல் தஞ்சம் கோரியிருக்கும் பல பெண்கள் சர்வதேச ஊடகங்களிலும் வெளிநாட்டு தூதரகங்களிலும் பட்டவர்த்தனமாக்கியுள்ளனர். இவையும் இலங்கை அரசின் மதிப்பை சர்வதேச அளவில் நிர்வாணப்படுத்தியிருந்தன. இவற்றை முற்றாக மறுதலிக்க முடியாத அளவுக்கு ஆதாரங்கள் பலமாக இருப்பதால் சர்வதேச சுயாதீன விசாரணையில் தம்முடைய போர்க்குற்றங்கள் நிரூபிக்கப்பட்டுவிடுமோ என்ற அச்சம் இலங்கை அரசிடம் நிறையவே இருக்கின்றது. என்ன செய்தேனும் இந்தப் பொறியில் இருந்து தப்பும் வழி குறித்தே அதிகார பீடத்தின் சிந்திப்புகள் தொடர்கின்றன அந்தளவுக்கு இலங்கை மீதான சர்வதேச பார்வையின் மூர்க்கம் தினம் தினம் அதிகமாகி கொண்டே இருக்கின்றது.

'வன்னி பெரு நிலப்பரப்பில் ஒரு மோட் டார் குண்டை கூட எமது படைகள் பொது மக்கள் மீது ஏவவில்லை. திட்டமிட்ட முறையில் மனிதாபிமான படை நட வடிக்கையையே மேற்கொண்டோம்.பொதுமக்களின் உயிரிழப்பை மட்டுப்படுத்தும் விதத்தில் படை நடவடிக்கையை மேற்கொண்டதால் தான் படை நடவடிக்கை தாமதமானது. அப்படியும் யாராவது உயிரிழந்திருந்தால் அது நிச்சயம் புலிகளாகவே மாத்திரமே இருக்க முடியும்' என்றே அரசு முதலில் சொல்லி வந்தது. பின்னர் அரசின் கருத்தை மறுதலிக்கும் விதத்தில் சர்வதேச ஊடகங்கள் பொதுமக்கள் மீது பீரங்கி தாக்குதல்கள், பல்குழல் எறிகணை தாக்குதல்கள் இடம்பெற்ற சாட்சியங்களை வெளியிட்டு அரசுக்கு கடுப்பை ஏற்படுத்தியிருந்தன. அதனால் தமது முன்னைய கருத்தில் இருந்து சற்றுப் பின் வாங்கிய அதிகார பீடம் 'புலிகள் மக்களின் இருப்பிடங்களுக்கு அருகில் நின்று தாக்குதல் நடத்தினார் கள். ஆகவே படையினர் பதில் தாக்கு தல் நடத்தும் போது பொதுமக்கள் சிலரும் சிக்கியிருக்கலாம்' என்று சுருதியை மாற்றிப் போட்டது. எனினும் அரசின் இந்தப் பூச்சுற்றலும் நீண்ட காலத்துக்கு எடுபடவில்லை.

இருப்பினும் படையினர் திட்டமிட்ட முறையில் மாபெரும் இனவழிப்பில் ஈடுபட்டன என்பதற்கான புதிய ஆதாரங் கள் வெளியாகியதால் வெலவெலத்துப் போன அரசு, 'ரத்தம் சிந்தாமல் போரை நடத்த முடியாது' எனக் கூறி ஒரு குறித்த எண்ணிக்கையானோரே இறுதிப் போரில் கொல்லப்பட்டனர் என்று ஒரு பட்டியலையும் வெளியிட்டது.ஆயினும் போர்க்குற்றம் தொடர்பில் உள்ளக விசாரணையை மட்டுமே செய்ய முடியும் எனவும், ஒருபோதும் இலங்கையின் விவகாரத்துக்குள் வெளியார் தலையிடமுடியாது எனவும் வீம்புக்கு சண்டித்தனம் செய்துவருகிறது இலங்கை.

இந்தச் சண்டித்தனப்போக்கே சர்வதேச விசாரணைப் பொறிக்குள் இலங்கையை இழுத்துச் சென்றிருக்கிறது. இலங்கை அரசு என்ன தான் சர்வதேச விசாரணைக்கு ஒத்துழைக்காத போக்கை கடைப்பிடித்தாலும், உள்ளுக்குள் சர்வதேச விசாரணை என்பது அரசின் நித்திரையை குழப்பும் ஒன்றாகவே மாறியிருக்கிறது.

'தமது கைகள் சுத்தமானவை என்றால் எதற்கு இலங்கை பயப்பட வேண்டும்? நாங்கள் இலங்கை அரசிடம் அனுமதி எடுக்க வேண்டிய தேவையில்லை' என ஐ.நா. மனித உரிமை ஆணையாளரே அறிக்கையிட்டு இருப்பது விசாரணையின் முடிவு பற்றி அரசின் அச்சத்தை அதிகப்படுத்தியிருக்கிறது. அத்துடன் ஐ.நா.வை பின்னின்று இயக்கும் அமெரிக்காவுக்கும் இலங்கைக் கும் இடையிலான உறவுநிலையை , சீனா-இலங்கை நட்பு பாதித்து வருவதால் அரசின் போர்க்குற்ற விசாரணை காய்ச்சல் இன்னும் அதிகமாகியிருக்கிறது

எனவே எல்லாப்படுகொலைகளுக்கும் புலிகள் மீது பழியை போட்டு விட்டோ அல்லது அரச படையை விட புலிகள் தான் அதிகளவான மனித உரிமை மீறலிலும், போர்க்குற்றங்களிலும் ஈடுபட்டவர்கள் என காட்டி தான் தப்பித்து கொள்ள அரசு துடியாகத் துடிக்கிறது.எனவே புலிகளைப் படுகொலை வாதிகளாகக் காட்டுவதற்கான சாட்சியத் திரட்டலில் அரசு தீவிரமாக இறங்கியிருக்கிறது. ஆனாலும் புலிகளுக்கு எதிரான சாட்சியங்கள் அரசின் கைவசம் இல்லாததால் சாட்சிகளை உருவாக்கும் நடவடிக்கைகள் சூறாவளி வேகத்தில் முடுக்கி விடப்பட்டுள்ளன.



இதன் ஒருகட்டமாகவே ஆவண திரட்டலை மேற்கொள்ள பொது நிர்வாகத் திணைக்களம், தொகை மதிப்பீட்டுத் திணைக்களம் என்பவற்றை அரசு களமிறக்கியிருந்தது. இதன் மூலம் மூடிய வினாக்களை உள்ளடக்கிய கேள்விப் பத்திரம் ஒன்றைத் தயாரித்து அரச படைகளின் மீதான குற்றத்தை சந்தேகத்துக்கு இடமாக்கி, புலிகள் மீதான பழியை ஆதாரப்படுத்தும் நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட்டிருந்தது. அதாவது தமிழ் மக்களின் விரலைக் கொண்டே அவர்களின் கண்ணையே குத்தும் செயற்பாடே இது.

மறுபக்கத்தில் உள்ளக விசாரணையை நடத்துகிறோம் எனக் காட்ட ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றும் அமைக்கப்பட்டிருந்தது. ஆனால் அரசு நினைத்ததற்கு எதிர் மாறாகவே எல்லாம் நடந்து முடிந்தன. ஆணைக்குழு முன்னால் சாட்சியமளித்த பலர் தமது உறவுகளை அரச படையினரும் அவர்களுடன் இணைந்த ஈ. பி. டி. பி., கருணாகுழு போன்ற அமைப்புகளுமே பிடித்துச் சென்றதாக துணிச்சலோடு சொன்னார்கள். இதனால் சொந்தச் செலவில் தனக்குத் தானே சூனியம் வைத்ததைப் போலவே.ஆணைக்குழு விவகாரமும் நடந்து முடிந்தது. எனவே வேறு வழியில் ஏதாவது செய்யலாம் என்ற நினைப்பே புலிகளுக்கு எதிரான சாட்சியங்களை வன்னியில் தேடும் நிலைக்கு அரசை தள்ளியிருக்கிறது.

இரண்டு தசாப்தங்களுக்குமுன்னர் பலாலியில் இருந்து இரட்மலானை நோக்கி சென்ற பயணிகள் விமானத்தை புலிகள் சுட்டு வீழ்த்தியதான கதைகளை கடந்த வருடம் இலங்கை தூசு தட்டி, அந்த விமானத்தின் பாகங்களையும், இறந்தோரின் உடல்களையும் தேடுவதாகக் கூறி பெரும் பணத்தையும், நேரத்தையும் செலவிட்டது. ஆயினும் அதுவும் பிசுபிசுத்துப் போனது.இப்போது அதே பாணியில் முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு ,வள்ளிபுனம் பகுதியில் புலிகளின் முகாம்கள் இருந்ததாகக் கூறப்படும் இடங்களில் புதிய ஆதாரங்களை வலிந்து உருவாக்க அரசு களமிறங்கியிருக்கிறது.

புலிகளால் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட 80 பேரைத் தேடுகிறோம் என்ற பெயரில் அரசாங்கம் புலிகளுக்கு எதிரான சாட்சிய தேடுதலில் தன்னை ஈடுபடுத்தியிருக்கின்றது. இந்த ஆய்வில் அரச பகுப்பாய்வு பிரிவினர், ராஜரட்ட பல்கலைக்கழகம் மற்றும் ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக தொல்லியல் துறையினர், தொல்பொருள் திணைக்களம், தடயவியல் ஆய்வுப் பிரிவினர், புலனாய்வுப் பிரிவினர், பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் ஆகிய பல அமைப்புகள் முல்லைத்தீவில் புலிகளுக்கு எதிரான ஆதாரங்களைச் சோடிக்கும் பணியில் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றனர். முடிவை முதலே அறிவித்து விட்டு தொடங்கப்படும் இத்தகைய ஆய்வுகளை சர்வதேசம் ஏற்றுக்கொள்ளுமா என்பது வேறுகதை. என்றாலும் மான் வந்து தான் வேட்டையாடப்பட்டதை சொல்லாத வரையில் மானை வேட்டையாடும் சிங்கங்கள் சொல்லுவதே வரலாறு என்பது இலங்கையின் தலைவிதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளும் சிறுவர் போராளிகளும்



2007ஆம் ஆண்டின் முடிவில் அமைப்பில் இணைவதற்கான வயது 18 ஆக மாற்றப்பட்டுவிட்டது. யூனிசெப்பும் சர்வதேச ஊடகமும் விருப்பமின்றி விடுதலைப்புலிகளின் மாற்றத்தை ஏற்கத்தொடங்கினர். சமாதானச் செயலகத்தின் இணையத்தில் யூனிசெப்பின் சிறுவர் போராளிகள் பட்டியலை மறுதலித்து உண்மையான நிலவரத்தை அட்டவணையிட்டுத் தொடர்ச்சியாக அறிக்கைகள் எழுதினேன். விடுதலைப்புலிகளின் சிறுவர் போராளிகள் என்ற குற்றச்சாட்டுக்கு யூனிசெப்பின் பட்டியலே சர்வதேசத்தின் ஆதாரமாக இருந்து வந்தது. இதை மறுதலித்து இறுதியாக நான் எழுதிய பட்டியல் உண்டு.

எனது கருத்தின்படி சிறுவர் போராளிகளை அமைப்பில் இல்லாமல் செய்யும் வேலைத்திட்டத்தை முன்னின்று செயற்படுத்தியவர் தமிழ்ச் செல்வனே. அவரே குடும்பத்துக்கு ஒருவரை இணைக்கும் திட்டத்தையும் செயற்படுத்தினார். அமைப்புக்கு ஆட்சேர்க்கும் நடவடிக்கைகள் முழுவதையும் தனது கட்டுப்பாட்டுக்குள், அதாவது அரசியற்துறையின் கையில், வைத்திருந்தார். நவம்பர் 2007இல் அவர் கொல்லப்பட்ட பின்னர் விடுதலைப்புலிகளின் ஏனைய துறைகளிலிருப்பவர்களும் சிறுவர்களை இணைக்கிறார்கள் என்ற முறைப்பாடுகள் சில வந்தன. அது எமக்குப் பெரிய தலையிடியாக இருந்தது. ஏனெனில் முன்போல் இணைத்தவர்களை அடையாளப்படுத்தவும் இணைக் கப்பட்டவர்களை விடுவிக்கவும் இருந்த அரசியல்துறை சார்ந்த வழிகள் இப்போது போதாமல் இருந்தன. 2008ஆம் ஆண்டு இறுதியில் யூனிசெப் உட்பட்ட ஐ.நா அமைப்புகளும் ஏனைய சர்வதேச நிறுவனங்களும் வன்னியிலிருந்து பின்வாங்கியபோது விடுதலைப்புலி உறுப்பினர்கள் மிகவும் ஆத்திரமடைந்தார்கள். யூனிசெப்பின் சிறுவர் போராளிகளை நிறுத்தும் செயற்பாட்டைப் பற்றிய கடுமையான விமர்சனங்களும் அதை எதிர்க்கும் மனப்பாங்கும் மேலோங்கியது. வன்னியிலுள்ள அத்தனை சிறுவர்களையும் ஒரு இனப்படுகொலைக்குள் கைகழுவிவிட்டுப் பின்வாங்கும் இவர்கள் எதற்காக சிறுவர் போராளிகளைப் பற்றி அத்தனை கரிசனை காட்டினார்கள் என்ற வாதம் மீண்டும் மீண்டும் முன்வைக்கப்பட்டது. இதற்கெதிராக நாங்கள் வாதாடினோம். புதிய அரசியல்துறைப் பொறுப்பாளர் நடேசனும் எங்களுக்கு ஆதரவு தந்தார். சிறுவர் பாதுகாப்பு ஆணையத்தின் சிறுவர் போராளிகள் சார்ந்த வேலைகள் யுனிசெப்பின் பின்வாங்கலுக்குப் பின்னும் தொடர்ந்தன. தொடர்ச்சியான குண்டுவீச்சுகள் எமது வேலைக்குத் தடங்கலாக இருந்தது. கிளிநொச்சி இடப்பெயர்வின் பின் என்னால் இந்த வேலைத் திட்டத்தில் பங்கெடுக்க முடியவில்லை. எனக்குத் தெரிந்தமட்டில் இதன்பின் சிறுவர் பாதுகாப்பு ஆணையத்தின் வேலைகள் மிகவும் பலவீனமடைந்துவிட்டன.

**நியூசிலாந்தில் வாழும் ஈழத்தமிழர்களில் ஒருவர். கணினித்துறையில் பயிற்சி பெற்றவர். நோர்வே அனுசரணையுடன் வந்த போர் நிறுத்த ஒப்பந்த காலத்தில் வன்னியில் உருவாக்கப்பட்ட வடகிழக்கு மனித உரிமைச் செயலத்தில் தொண்டரடிப்படையில் பணியாற்ற வன்னிக்குச் சென்றார். இறுதி போர் வரை முள்ளிவாய்க்காலில் இருந்து ஐசிஆர்சி கப்பலில் வெளியேறி மெனிக் பாம்முகாமில் அடைக்கப்படும் வரை ஈழத்தில் இருந்தார். இவர் ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்த மலரவன் என்னும் மாவீரரின் "போர் உலா" என்னும் நூலை பெங்குவின் பதிப்பகம் மே 2013ல் வெளியிட்டுள்ளது.**

சிறுவர் பாதுகாப்பு மையத்தில் எனக்குக் கிடைத்த அனுபவங்கள் மிகவும் பெறுமதியானவை. ஆட்சேர்ப்புப் பற்றி விடுதலைப்புலி உறுப்பினர்களுடன் ஆழமாகக் கலந்துரையாடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. சிறுவர் போராளிகளாக இணைந்தவர்களின் குடும்பங்களைச் சந்தித்து அவர்களின் பின்னணியையும் என்னால் அறிய முடிந்தது. சர்வதேசத்தின் சிறுவர் போராளிகள் என்ற தனிவிடய பிரச்சாரத்தின் நியாய அநியாயங்கள் பற்றியும் என்னால் அறிய முடிந்தது. தனிவிடய பிரச்சாரம் மனித வாழ்க்கையின் ஒன்றோடொன்று இணைந்த பிரச்சினைகளையும் சிக்கல்களையும் புறந்தள்ளி ஒரு விடயத்தை மட்டும் பொதுப்படுத்திப் பிரச்சாரம் செய்வதாகும். அதனால் கிடைக்கக் கூடிய வெற்றி பற்றியும் அது ஏற்படுத்தக் கூடிய சிக்கல்கள் பற்றியும் என்னால் அறிய முடிந்தது. இவை ஒரு சாராரின் நியாமற்ற சுயநல தேவைகளைப் பூர்த்தி செய்ய ஏதுவாக இருப்பதையும் என்னால் அறிய முடிந்தது.

விடுதலைப்புலிகள் பல தவறுகளைச் செய்திருக்கிறார்கள். ஆனால் மேற்குலக அமைப்புக்கள் தொடர்ச்சியாக வர்ணித்ததைப் போல் விடுதலைப்புலிகள் ஒரு கொடிய அமைப்பல்ல. விடுதலைப்புலிகளை ஒழித்தால்தான் உலகம் நன்மையடையும் என்று கூட இவர்கள் வர்ணித்திருக்கிறார்கள். புலத்துத் தமிழரின் உதவியுடனும் வேறு எவரினதும் உதவியுமில்லாமலும் கொடூரமான லங்கா அரசை மட்டுமே விடுதலைப்புலிகள் எதிர்த்தார்கள். அவர்கள் சர்வதேச மட்டத்தில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தாலும் தம் இலக்கை நோக்கி வெற்றிகரமாக முன்னேறிக் கொண்டிருந்தார்கள். முழு உலகையும் எதிர்த்து அதையும் வெற்றி கொள்வார்கள் போலத் தோன்றியது. விடுதலைப்புலிகள் பற்றிய இத்தகைமையே உலகில் இன்று நிலவும் ஒழுங்கைக் குலைப்பதாக இருந்தது. அடைக்கப்பட்ட ஆட்டுமந்தைகளில் ஒன்று படலைத் திறந்து வெளியேற அறிந்துகொண்டால் அதைச் சுடுவதைத் தவிர வேறு வழியில்லை. இல்லாவிட்டால் ஆட்டுமந்தைகள் தொடர்ந்து வெளியேறத் தொடங்கிவிடும். படலைத் திறக்க தெரிந்த ஆடுதான் விடுதலைப்புலிகள். அவர்களை அழிப்பதைத் தவிர வேறு வழியில்லை. ஈழத்தமிழர்கள் செய்த தியாகங்களிலும் பார்க்க மிகக் குறைவான தியாகங்களுடன் எத்தனையோ தேசங்கள் தம் தனிநாட்டுக் கோரிக்கையை அடைந்திருக்கின்றன. அவர்களின் வெற்றிக்குக் காரணம் அவர்களின் கோரிக்கை உலகின் இராணுவ-அரசியல்-பொருளாதார கோளத்துடன் ஒத்துப்போனமையே.

வன்னியில் விடுதலைப்புலிகளின் கீழ் அதிசயிக்கத்தக்க பல சமூக மாற்றங்கள் ஏற்பட்டிருந்தன. காந்தியும் அம்பேத்கரும் பெரியாரும் எட்டாத வெற்றியை வன்னியில் விடுதலைப்புலிகள் எட்டினார்கள். தெற்காசியாவில் வியாபித்திருக்கும் சாதி எண்ணங்கள் வன்னியில் அழிக்கப்பட்டன. பெண் விடுதலைக்கான முன்னோட்டங்கள் அங்கு உருவாகியிருந்தன. போராட்ட உணர்வை மக்கள் இதயங்களில் ஏற்றி அங்கு மக்கள் ஒன்று கூட்டப்பட்டிருந்தார்கள். தமிழரும் தெற்காசிய மக்களும் பலனடையக் கூடிய இன்னும் சில சமூக மாற்றங்களுக்கான சாத்தியங்களை வன்னி தன்னுள் கொண்டிருந்தது. இது இப்போது அழிக்கப்பட்டுவிட்டது. இன்று ஏதேனும் ஒரு அற்புதத்தால் தமிழீழம் தனி நாடாகப் பிறந்தாலும் அன்று வன்னி தன்னுள் கொண்டிருந்த நம்பிக்கைகளையும் சாத்தியங்களையும் இனிவரக் கூடிய தமிழீழத்தால் மீட்டெடுக்க முடியாது.

இந்திய விடுதலைப் போராட்டத்தின் போது பாரதியால் எழுதப்பட்ட இந்தக்கவிதை அன்று வன்னியின் இன்றைய நிலைமையை துல்லியமாகப் பிரதிப்லிக்கிறது இதை வாசிக்கும் போதெல்லாம் அன்றைய வன்னிக்காக நான் அழுகிறேன்.

சுதந்திரப் பயிர்<br>
தண்ணீர் விட்டோ வளர்த்தோம்<br>
சர்வேசா இப்பயிரை<br>
கண்ணீரால் காத்தோம்<br>
கதுகத் திருவுளமோ<br>
எண்ணமெல்லாம் மெய்யாக<br>
எம்முயிரினுள் வளர்ந்த<br>
வண்ண விளக்கிது<br>
மடியத் திருவுளமோ<br>
ஓராயிரம் வருடம்<br>
ஓய்ந்து கிடந்த பின்னர்<br>
வராது போல் வந்த<br>
மாமணியை தோற்போமோ<br>
மாதரையும் மக்களையும்<br>
வன் தன்மையால் பிரிந்து<br>
காதல் இளைஞர்<br>
கருத்தழிதல் காணாயோ<br>
மேலோர்கள் வெஞ்சிறையில்<br>
வீழ்ந்து கிடப்பதுவும்<br>
நூலோர்கள் செக்கடியில்<br>
நோவதும் காண்கிலையோ<br>
எண்ணற்ற நல்லோர்<br>
இதயம் புழுங்கி இரு<br>
கண்ணற்ற சேய் போல்<br>
கலங்குவது காண்கிலையோ

**(முற்றும்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குளவி கொட்டுவதிலிருந்து மண் சரிவு வரை சம்பவம் நடந்தவுடன் இத்தகைய தொழிற் சங்கத்தினர் சிலர் வருவார்கள். சிறு உதவிகள் செய்வார்கள். பெரும் வாக்குறுதிகளை வழங்குவார்கள். அவற்றைப் பத்திரிகைகளில் படம் பிடித்துப் போடுவார்கள். அத்துடன் விடயம் முடிந்து விடும்.**

**- ஆஷாத்**




கடந்த வாரம் மண் சரிவு ஏற்படக் கூடிய இடங்கள் எனக் கருதப்படும் பகுதிகளை ஆய்வு செய்யப் பூனரா லைப் பகுதிக்குச் சென்ற கட்டட ஆய்வுத் திணைக்களப் பணியாளர்களை குளவி கள் விரட்டி விரட்டிக் கொட்டி விட்டன. இவர் கள் உள்ளூர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். இவர்களில் ஒருவர் கடுமையாகப் பாதிக் கப்பட்ட நிலையில் நுவரேலியா மருத்து வமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

மலையகத்தில் கொழுந்து பறிக்கும் பெண்களும், ஏனைய தொழிலாளர்களும் அடிக்கடி இடம்பெறும் இப்படியான சம்பவங்களின் போது பாதிக்கப்படவே செய்தனர். இதன் போது கொழுந்து பறிக்கும் சில பெண்கள் உயிரிழந்தும் உள்ளனர்.

உழைக்கும் அப்பாவித் தொழிலாளர் களை விரட்டி விரட்டி . கொட்டித்தீர்த்து வேதனை கொடுத்த குளவிகள் இப்போது அரசாங்க அதிகாரிகளையும் பதம் பார்க்க ஆரம்பித்து விட்டன. இன்று வரை இந்த அவலத்தைத் தடுத்து நிறுத்த எவருமே எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

தோட்ட நிர்வாகங்கள் அவை தனியார் தோட்டங்களாக இருந்தாலென்ன அரச தோட்டங்களாக இருந்தாலென்ன எந்த ஒரு உரிய நடவடிக்கைகளும் எடுப்பதில்லை. மாறாக அவர்கள் மேற்கொள்ளும் சட்ட விரோத நடவடிக்கைகளாலேயே இப்படியான அசம்பாவிதங்கள் ஏற்படுகின்றன எனத் தொழிலாளர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

அதாவது தோட்ட நிர்வாகங்கள் அங்குள்ள உயர்ந்த மரங்களைத் தறித்து நல்ல விலைக்கு விற்று விடுகின்றன. அதனால் குளவிகள் வேறு வழியின்றி. கீழிறங்கி தேயிலைச் செடிகளில் கூடு கட்டுகின்றன. அவை தொழிலாளர்கள் அருகில் செல்லும் போது கலைந்து விரட்டி விரட்டி கொட்டுகின்றன.

இப்படியான குளவித் தாக்குதலின் போது சிலர் உயிர் துறக்கும் துரதிர்ஷ்டங்களும் நிகழும். இதனால் அந்தக் குடும்பம் ஒரு உயிரைப் பலி கொடுத்த சோகத்தோடு. குடும்பத்துக்காக உழைக்கும் ஒருவரை இழந்ததால் வாழவே கஷ்ரப்பட்டும் நிலை தோன்றுகின்றது. அதே வேளையில் குளவிகளால் கொட்டப்பட்டு சிகிச்சை பெற்று வீடு திரும்புபவர்கள் மருத்துவமனையில் தங்கியிருந்ததால் தங்கள் வேதனத்தை இழக்க வேண்டியிருக்கும். இதனால் அவர்கள் தமது நாளாந்த தேவைகளை நிறைவு செய்யப்பல சிரமங்களை எதிர் கொள்ள வேண்டியுள்ளது.

மலையகத்தில் குளவிகளின் கொட்டுத லின் பின்னால் இவ்வளவு அவலங்கள் புதைந்து கிடக்கின்றன என்பது பற்றி எவரும் கவலைப் படுவதில்லை.



தோட்ட நிர்வாகங்கள் அந்த மலையக மக்களின் உழைப்பைக் குறைந்த கூலியில் கறப்பதில் மட்டுமே அக்கறை செலுத்தி செயற்படுகின்றன. அவர்களுக்குப் பல்வேறு வழிகளில் அழுத்தம் கொடுத்தால் மட்டுமே சில விடயங்களைச் செய்வார்கள்.

ஆனால் தொழிற்சங்கங் கள் தொழிலாளர்கள் நலன்களைப் பாதுகாக்கவே உருவாக்கப்பட்டன. அதற்காகவே தொழிலாளர் உழைப்பில் மாதாந்தம் சந்தாப்பணம் அறவிடுகின்றனர். எனவே தொழிலாளர்கள் முகம் கொடுக்கும் இன்னல்கள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுப்பது அவர்களின் பொறுப்பாகும்.

குளவி கொட்டுவதிலிருந்து மண் சரிவு வரை சம்பவம் நடந்தவுடன் இத்தகைய தொழிற்சங்கத்தினர் சிலர் வருவார்கள். சிறு உதவிகள் செய்வார்கள். பெரும் வாக்குறுதிகளை வழங்குவார்கள். அவற்றைப் பத்திரிகைகளில் படம் பிடித்துப் போடுவார்கள். அத்துடன் விடயம் முடிந்து விடும். தொழிற்சங்கத்தினரின் நிரந்தரத் தீர்வு இதுதான். மக்களின் பிரச்சினைகளுக்கான நிரந்தரத் தீர்வு காண எந்த ஒரு நடவடிக்கையும் அவர்கள் எடுப்பதில்லை.

அண்மையில் பதுளையில் மண் சரிவில் பாதிக்கப்பட்ட மக்கள் பெரும் அவலத்தின் மத்தியில் கைவிடப்பட்ட தொழிற்சாலை ஒன்றில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். போதிய மலசலகூட வசதிகள் கூட அவர்களுக்கு வழங்கப்படவில்லை. ஒரு பகுதி மக்களை மீண்டும் அபாயகரமான பகுதிகளில் சென்று குடியிருக்கும் படி அதிகாரிகள் மிரட்டுகின்றனர். கொஸ்லந்தை மீரியாபெத்த பேரழிவின் ஒரு மாத நிறைவையொட்டி மக்கள் மலையகமெங்கும் செங்கொடிப் போராட்டங்களை நடத்தினர். பல இடங்களில் அஞ்சலி நிகழ்வுகளையும் நடத்தினர். கொழும்பு மட்டக்களப்பு மாவட்டங்களிலும் சில இடங்களில் அஞ்சலி நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

இவை தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் மட்டுமே அஞ்சலி செலுத்தியதுடன் அந்த நிகழ்வுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கினர். அவர் ஒரு ஊடகவியலாளர் என்ற அடிப்படையில் ஊடகங்களிலும் அஞ்சலி நிகழ்வுகளை ஒளி, ஒலி பரப்பி அந்த மக்களின் அவலத்தையும் சம்பந்தப்பட்டவர்களின் பொறுப்பினையும் உலகின் கண்களுக்குக் கொண்டு வந்தார்.

ஆனால் பாரம்பரிய மலையகத் தலைமைகள் இந்த நிகழ்வுகள் தொடர்பாக எந்த வித ஆதரவையும் வழங்கவில்லை. ஆனால் அவர்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு காணி வழங்குவது பற்றியும், வீடு கட்டிக் கொடுப்பது பற்றியும் அறிக்கைகளை மட்டுமே விடுத்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால் அந்தக் காணி வழங்கல், வீடு கட்டல் தொடர்பில் ஒரு துரும்பைக் கூட அவர்கள் நகர்த்துவதாகக் காணோம்.

நிலைமை இப்படியிருக்க, கடந்த வாரம் பூண்டுலோயாவில் ஏற்பட்ட மண் சரிவில் வீட்டுக்குள் உறக்கத்திலிருந்த ஒரு தாயும் மகளும் உயிரிழந்துள்ளனர். இன்னொரு இடத்தில் கற்பாறை உருண்டு விழுந்ததில் ஒரு வீடு முற்றாகவே சேதமடைந்ததுள்ளது.

இது தொடர்பில் மக்களின் பணத்தில் தொழிற் சங்கம் நடத்துபவர்கள் , இந்த மக்களின் வாக்குகளில் நாடாளுமன்றம் சென்று அமைச்சுப் பதவிகளை பெற்றுக் கொண்டவர்கள் அந்த மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அழுத்தங்களை கொடுப்பதில்லை.

மீரியபெத்தையில் பாதிக்கப்பட்ட மக்களை தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் சந்தித்துச் சில உதவிகளைச் செய்ய முன் வந்த போது அதற்கெதிராக செந்தில் தொண்டமான் கொதித்தெழுந்தது நினைவிருக்கலாம்.

அதாவது அந்த மக்களின் தேவைகளை அவர்களும் நிறைவேற்ற மாட்டார்கள். வேறு எவராவது செய்ய முன்வந்தாலும் அனுமதிக்க மாட்டார்கள்.

காலம் காலமாக அந்த மக்களை அடிமைகளாக வைத்து அவர்களின் உழைப்பைச் சுரண்டும் தோட்ட நிர்வாகங்களுக்கும் இந்தத் தொழிற்சங்கத் தலைமைகளுக்கும் என்ன வித்தியாசம் இருக்க முடியும்?

இப்படிப்பட்டவர்கள் அந்த மக்கள் குளவிகளால் கொட்டப்படுவதை பற்றியோ உயிரிழப்பதைப் பற்றியோ அக்கறைப்படுவார்களா?

ஆனால் அதே குளவிகள் தங்களையோ அல்லது அரச அதிகாரிகளையோ கொட்டினால் மாத்திரம் குய்யோ முறையோ என்று கூச்சலிட்டு. ஏதோ சுனாமியே வந்துவிட்டது போல படம் காட்டுவார்கள். வடிவேலு சொல்வது போல ' மற்றவனுக்கு வந்தால் தக்காளிச் சட்னி. தனக்கு வந்தால் ரத்தம்' என்கிற நிலைதான் மலையகத்துக்குப் பொறுப்பான அரசியல்வாதிகள். அதிகாரிகளிடத்தே இருக்கின்றது.

**காலம் காலமாக அந்த மக்களை அடிமைகளாக வைத்து அவர்களின் உழைப்பைச் சுரண்டும் தோட்ட நிர்வாகங்களுக் கும் இந்தத் தொழிற்சங்கத் தலைமைகளுக்கும் என்ன வித்தி யாசம் இருக்க முடியும்?**
**இப்படிப்பட்டவர்கள் அந்த மக்கள் குளவிகளால் கொட்டப்படு வதை பற்றியோ உயிரிழப்பதைப் பற்றியோ அக்கறைப் படுவார்களா?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் ஒளி

வாராந்த சஞ்சிகை

sudarolijaffna@gmail.com

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 021 567 7609


# எய்யப்படும் ஆச்சரிய அஸ்த்திரங்கள்

இலங்கை அரசியலில் எதிர்வரும் நாள்களில் ஆச்சரியப் படத்தக்க பல நிகழ்வுகள் அரங்கேறப்போகின்றன. இவை யொன்றும் மந்திரத்தால் நிகழப்போகின்றவையல்ல. மாறாக ஜனாதிபதித் தேர்தலில் வாக்குகளை அள்ளுவதற் காக இப்போதைய ஜனாதிபதியாக உள்ள மகிந்த ராஜபக்ஷ தன்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி செய்யப் போகின்ற சித்துவிளையாட்டுக்களே அவை. அதில் ஒன்று தான் கடந்தவாரம் திடீரெனக் குறைந்த எரிபொருளின் விலை.

ஏற்கவே சர்வதேச சந்தையில் மசகு எண்ணெயின் விலை திடீரெனச் சரிவடைந்திருந்தது. வழமையாக மசகு எண் ணெயின் விலை உயர்வடையும்போது அதே கணத்தில் எரிபொருளின் விலையை உயர்த்தப்பழகிய இலங்கை அரசு மசகு எண்ணெயின் விலை சரிவடையும்போது மாத்திரம் விலைக்குறைப்பைச் செய்யப் பின்னடித்தது. ஏனெனில் ஜனாதிபதித் தேர்தல் நடப்பதற்கு சில நாள்களுக்கு முன்னதாக இந்த விலைக்குறைப்பைச் செய்தால் மக்களை போலி மயக்கத்துக்குள் ஆழ்த்தி வாக்குகளைக் கவரமுடியும் என்பதே திட்டமாக இருந்தது. ஆனால் அரசே எதிர்பாராத வகையில் கட்சித் தாவல்கள் அறம்புறமாக நடப்பதால் எரிபொருள் விலைகளின் உயர்வை முற்கூட்டியே அறிவிக்க வேண்டிய கட்டாயம் வந்துவிட்டது.

கட்சித் தவால்களுக்கும் எரிபொருள் விலைக்குறைப்புக் கும் என்ன சம்பந்தம்? சம்பந்தம் இருக்கத்தான் செய்கிறது. எப்படி சிறிலங்கா சுந்திரக்கட்சியில் இருந்து செயலாளர் மைத்திரி வெளியேறி அரசுக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தாரோ அதேபோன்று ஐக்கிய தேசியக்கட்சி யின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்காவை தன்பக்கம் இழுத்து அதிரடி கொடுக்க நினைத்திருந்தார் மகிந்த. ஒரு செயலாளரின் வெளியேற்றத்தை இன்னொரு செயலாளரின் உள்வருகை இட்டு நிரப்பிவிடும் என்பதால் தன்னுடைய அரசியல் பலம் தளம்பல் அற்ற நிலையில் இருக்கும் என்பதே மகிந்தவின் கணக்காக இருந்தது. ஆனால் இந்தச் சதுரங்கக்களத்தில் எதிரணியின் வியூகம் எவருமே கணிக்க முடியாதபடி மகிந்தவின் காய்களை பல்வேறு திசைகளில் இருந்தும் வெட்டியாடத் தொடங்கியது.

மாற்றம் ஒன்று வேண்டும் என்ற அலை மக்களிடம் இருப் பதால் நிச்சயம் மைத்திரியே வெல்வார் என்ற எண்ணத் திலேயே ஆளும் தரப்பு உறுப்பினர்கள் எதிர்த்தரப்புக்குப் பாய்ந்து வருகின்றனர். இதனால்தான் எதிரணி மகிந்தவின் காய்களை வெகுசுலபமாக வெட்டியாட முடிகிறது. எனவே அந்த விம்பத்தைத் தகர்த்து மீண்டும் தானே ஜனாதிபதி யாக வருவேன் என்ற நிலைப்பாட்டை மக்களுக்கு மட்டுமல் லாது. தனது கட்சி உறுப்பினர்களுக்கும் புரிய வைக்க வேண்டிய கட்டாயம் மகிந்தவுக்கு வந்தது. எனவேதான் அரசு மீதான மக்கள் அபிமானத்தை அதிகரிக்கச் செய்து வெற்றிமாயையை அவசரமாக உண்டுபண்ணவேண்டிய நிலை உருவானது. அந்த மாயைகளில் ஒன்றுதான் எரி பொருள் மற்றும் சமையல் வாயு விலைகுறைப்பு.

இப்படியான தந்திரங்களை செய்வதற்கு தாமதப்படுத்தி னால் ஏற்கனவே மதில்மேல் பூனைகளாக இருந்த உறுப் பினர்களையும் தக்கவைத்துக்கொள்ளமுடியாமல் போய் விடும். அதனால் சலுகை அஸ்த்திரங்களை மாமன்னர் எய்யத் தொடங்கிவிட்டார். எரிபொருள் விலைக்குறைப்பு என்ற முதல் அஸ்த்திரம் எய்யப்பட்டுவிட்டது. இன்னும் நிறைய அஸ்த்திரங்கள் எய்வதற்காகக் காத்திருக்கின்றன. இந்த அஸ்த்திரங்கள் எல்லாம் எதிராணியின் மார்பைத் துளைக்குமா அல்லது பூமராங் போல எய்தவரையே திருப்பிவந்து தாக்குமா? என்று அறிய ஜனவரி 9 மட்டும் காத்திருக்க வேண்டும்.

# சாத்தியமற்ற சவால்

**- ஹரிஷ்**

எதிர்வரும் 8 ஆம் திகதி நடைபெறவிருக்கும் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறுவதற்கான காய் நகர்த்தல்களில் ஆளும் தரப்பும், எதிர்த்தரப்பும் முட்டி மோதத் தொடங்கிவிட்டன. இருதரப்பிலும் மாறி மாறி கட்சிதாவும் படலங்களைச் சரளமாக காணக்கூடியதாக இருக்கிறது. 'முதல் நாள் அரச தரப்பில் இருந்து முட்டை அப்பம் சாப்பிட்டு விட்டு மறு நாள் பொது எதிரணிப் பக்கம் தாவும் காலப்பகுதியில் கட்சித் தாவல்களைப் பற்றிக் கதைக்க முடியவில்லை' என சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் புலம்பும் அளவுக்கு யதார்த்த அரசியல் பரபரப்பாக மாறியிருக்கிறது. தற்சமயம் யார் எந்தக் கட்சியில் இருக்கிறார் என்பதை ஊகித்துக்கூட அறிய முடியாத அளவுக்கு மக்கள் குழம்பிப்போய் இருக்கின்றனர்.

'அரசில் இருந்து எதிரணிக்குத் தாவுபவர்கள் பற்றி என்னிடம் நிறையக் கோப்புகள் இருக்கின்றன . ஆனால் அவற்றைப் பயன்படுத்த மாட்டேன்' என மறைமுகமாகக் கட்சி தாவுபவர்களை மிரட்டியிருக்கிறார் ஜனாதிபதி. இந்த உரை மதில்மேல் பூனையாக இருக்கும் சில அமைச்சர்களை அடக்கி வைக்கும் பொருட்டு நிகழ்த்தப்பட்டது என்பது எந்த வித ஆய்வுகளும் தேவையற்ற வெளிப்படையான உண்மை.

அரசுக்கு இவ்வளவு காலம் கொடி, குடை, ஆலவட்டம் ஏந்தியவர்கள் பல்டி அடித்து, திடீர் ஞானதோதயம் வந்தவர்கள் போல அரசுக்கு எதிரான கருத்துக்களை வெளியிட்டு வருவது நாம் இலங்கையில் தான் வாழ்கிறோமா என்ற சந்தேகத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருக்கிறது.

அரசின் அடிவருடும் பணியைச் செவ்வனே செய்து. அமைச்சுப் பதவியைப் பெற்ற பல அமைச்சர்களும் கூட இப்போது அரசை விமர்சிப்பதை சர்வ சாதாரணமாகக் காணக்கூடியதாக இருக்கின்றது. அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் பொது மேடையொன்றில் வைத்தே 'ஐயோ ஜனாதிபதி எதுவும் செய்ய நிதி தருகிறார் இல்லை' எனக் கண்ணீர் விட்டு அழுத சம்பவமும் நடந்தேறியிருக்கிறது. அத்துடன் காமெடி நாயகனாக வலம் வந்த அமைச்சர் மேர்வின் சில்வாவும் ஆங்காங்கே அரசாங்கத்தை கண்மூடித்தனமாகத் தாக்கிப் பேசும் செயலில் ஈடுபட்டு வருகின்றார். மறுபக்கத்தில் ஆளும் தரப்பை அனுசரித்து, அமைச்சர் பதவிகளை தக்கீ வைத்த முஸ்லிம் அரசியல்வாதிகள், தேர்தல் நேரத்தில் மட்டும் தமது வீரத்தைக் காட்டும் பணிகளில் மும்முரமாக இறங்கியிருக்கின்றனர். அமைச்சர் றிசாட் பதியுதீனோ 'இரு தரப்பும் கூப்பிட்டு கதைக்கிறார்கள். ஆனால் நான் இன்னும் முடிவெடுக்கவில்லை' என மீனுக்கு தலையும் பாம்புக்கு வாலும் காட்டும் செயற்பாடுகளில் இறங்கியிருக்கிறார்.

தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி, அமைச்சுப்பதவி என ஆசை காட்டி சில முஸ்லிம் தலைவர்களைத் தனது காலடிக்குள் கொண்டுவர அரசு படாதபாடு படுகின்றது. அதற்கு சில முஸ்லிம் அரசியல் வாதிகள் சம்மதம் சொல்லி பேரத்தை வெற்றிகரமாக முடித்துள்ளனர். பள்ளிவாசல்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களையும், அதற்கு காரணமான சூத்திரதாரிகளையும் பதவி மோகத்தில் மறந்து அரச விசுவாசிகளாக இந்த முஸ்லிம் அரசியல்வாதிகள் மாறிப்போய்விட்டனர்.

மறுபக்கத்தில் மலையக மக்களைப் பிரதி நிதித்துவ படுத்தும் தலைவர்களோ தொடர்ந்தும் மலையக மக்களின் அவல வாழ்வுக்கு காரணமானவர்களை ஆதரியுங்கள் என கோரிக்கை விடுத்து வருகின்றனர். இப்படியெல்லாம் தேர்தல் அரங்கு தினம் தினம் சூடு பிடித்து வரும் நிலையிலேயே வடக்குத் தமிழர்களை முட்டாள்களாக மாற்றி அவர்களின் வாக்குகளைச் சுவீகரிப்பதற்கான மறைமுகத் திட்டங்களை ஆளும் தரப்பும் , எதிரணிகளும் திரை மறைவில் தீட்டி வருகின்றன

இந்தநிலையில் தமிழ் மக்களைப் பிரதி நிதித்துவப்படுத்தப்படும் தமிழ் தேசிய கூட்டமைப்பை எப்படி தம் பக்கம் சாயவைப்பது என்ற போட்டியில் இறங்கியிருக்கின்றனர் ஜனாதிபதி வேட்பாளர்கள். ஒரு பக்கத்தில் தமிழ் மக்களுக்கு ஐஸ் வைப்பதிலும் மறுபக்கத்தில் சிங்கள மக்களிடம் வாக்கு வங்கியை தக்க வைக்க இனவாதத்தையும் பேசுவதில் இரு தரப்பிலும் ஆர்வம் காட்டப்பட்டிருக்கின்றது. இதையே ஹெல உறுமயவுடனான ஒப்பந்த சந்திப்பில் பிரதான வேட்பாளர் மைத்திரி பால சிறிசேன ' சமஷ்டி ஒருபோதும் வழங்கப்படமாட்டாது. பௌத்தமே ஆட்சி மதமாக இருக்கும்' எனவும் கூறியிருந்தார். இதன் மூலம் தென்னிலங்கையில் யார் தலைமைப் பொறுப்பை ஏற்றாலும் அவர்கள் சிங்கள இனவாதிகளைத் திருப்திப்படுத்தும் பணியிலேயே ஈடுபடுவார்கள். மாறாக தமிழ் மக்களின் உரிமைக் கோரிக்கையை அவர்கள் காது கொடுத்து கேட்க விரும்பவில்லை என்ற உண்மை தேர்தலுக்கு முன்னரே தெரிந்துவிட்டது. எனவே தமிழ் மக்கள் மிக முக்கியமான முடிவொன்றை ஜனாதிபதித் தேர்தலில் எடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அது என்ன முடிவென்று சிந்தித்துச் செயற்பட கட்சி பேதங்களை மறந்து தமிழ்க்கட்சிகள் தீர்க்கமாக முடிவு செய்து. மக்களுக்கு தெளிவு படுத்தி. தமிழர்களின் எதிர்காலத்தை தக்க வைக்க வேண்டும். ஆனால் ஒற்றுமையாகச் செயற்படுவதென்பது ஒருபோதும் தமிழ் அரசியல்வாதிகளுக்குச் சாத்தியமற்ற சாபமல்லவா.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரே குட்டை மட்டை

- ஊழியான்

உலக நாடுகளை இன்று இரண்டு சக்திகள் ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கின்றன. ஒன்று இனவாதம். மற்றையது மதவாதம். இந்த இரண்டு வாதங்களும் எல்லா நாடுகளிலும் சேர்ந்து இருப்பதில்லை.

துரதிர்ஷ்டவசமாக அன்று முதல் இன்றுவரை இலங்கையினைப் பொறுத்த வரையில் இரண்டு சக்திகளும் ஒன்றுசேர்ந்து இந்த நாட்டின் அரசியலை தீர்மானித்துக் கொண்டிருக்கின்றன .

சிங்களவர்களே இலங்கைக்கு உரியவர்கள் என்கின்ற இனவாதமும், பௌத்தமே நாட்டின் பூர்வீக மதம் என்ற மதவாதமும் ஏனைய இனங்கள் மீதும் மதங்கள் மீதும் தங்களுடைய கட்டுப்பாடுகளையும், நெருக்குவாரங்களையும், வன்முறைகளையும் கட்டவிழ்த்துக் கொண்டிருக்கின்றன.

அதாவது தங்களுடைய இனமும்,மதமுமே முதன்மையானது. அதனையே எல்லோரும் பின்பற்ற வேண்டும் என்ற நிலைப்பாடு சிங்கள பௌத்த கடும் போக்காளர்களிடையே நிலவும் ஒரு எண்ணக்கரு.இந்த எண்ணக்கருவினால் எத்தனையே அழிவுகளை இன்னும் சிறுபான்மை இனத்தவர்களும், மதத்தவர்களும் சந்தித்துக் கொண்டிருக்கின்றனர்.

இப்படிப்பட்ட சிங்கள, பௌத்த அடிப்படை எண்ணக்கருவில் தங்கியுள்ள இலங்கையின் ஜனாதிபதித் தேர்தலில் இப்போதைய ஜனாதிபதி மஹிந்தவுக்கு எதிராகக் களமிறங்கப் போகும் பொதுவேட்பாளர் யார் என்று தெரியாமலே இதுவரை காலமும் இருந்தது. ஆனால் தனது போட்டியாளர் யார் என்று அறிந்த போது மஹிந்த கூட்டணியினரின் தலையில் பேரிடி வீழ்ந்தது. எதிர்பாராத இடியைப் பரிசளித்துவிட்டு, பொதுவேட்பாளர் என்ற கதிரையினை அலங்கரித்தார் அதுவரை காலமும் மஹிந்தவின் எடுபிடி அமைச்சர்களில் ஒருவராக இருந்த மைத்திரிபால சிறிசேன.

ஆனால் பொதுவேட்பாளராகக் களமிறங்கிய பின்னரும் தான் மஹிந்தவாதிகளின் கொள்கையையே தொடர்ந்தும் பின்பற்றப்போவதை தன்னுடைய அறிவிப்புகள் மூலம் மைத்திரி உணர்த்தி வருகின்றார். இலங்கைத் தமிழர்கள் விவகாரம்

> **இராமன் இல்லாவிட்டால் இராவ ணன் என்ற கணக்கின் படி, மஹிந்த வைக் கூட்டமைப்பு நிராகரித்தால் மைத்திரியைத்தானே அவர்கள் ஆதரிக்க வேண்டும் என்று கருதப்பட்டது. ஆனால் மைத்திரி கக்கிவரும் இன, மதவாதக் கருத்துக்களால் மைத்திரிக்கான ஆதரவை வழங்குவது தொடர்பில் கூட்டமைப்பால் தெளிவான முடிவொன்றை எடுக்க முடியாதுள்ளது.**

தொடர்பில் மைத்திரி வெளியிட்ட கருத்துக்கள் அவரின் எதிர்காலப் போக்குகள் எப்படியிருக்கப் போகின்றன என்பதற்கு மிகச்சிறந்த உதாரணம்.

'நான் ஆட்சிக்கு வந்தால் தமிழர்களின் சமஷ்டிக் கோரிக்கையினை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமாட்டேன். அதுமட்டுமல்லாமல் பௌத்த சாசனத்துக்கும்,பௌத்த மதத்துக்குமே என்றும் முன்னுரிமை அளிப்பேன். ஒருபோதும் மாகாணங்களுக்கு இப்போதுள்ள அதிகாரங்களை விட மேலதிக அதிகாரங்களை வழங்கச் சம்மதியேன்' என்று தெரிவித்துள்ளார். தானும் மஹிந்தவுக்கு சற்றும் சளைக்காத சிங்கள, பௌத்தப் பேரினவாதியே என்பதை இதன் மூலம் மைத்திரி சிங்கள மக்களுக்கும், பௌத்தர்களுக்கும் நிரூபிக்க முனைகின்றார்.

இலங்கையில் நீடித்து வரும் இனப் பிரச்சினைக்கு சமஷ்டி முறையிலான தீர்வு வழங்க வேண்டும் என்பதே தமிழ்த் தலைவர்களின் நெடுநாளையக் கோரிக்கையாக இருந்து வருகின்றது.

ஆனால் ஆட்சிக் கட்டிலில் அமரும் சிங்கள தலைவர்கள் யாரும் அந்த சமஷ்டிக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளாமல் ஏமாற்றி வந்ததால், ஒருகட்டத்தில் தமிழர்கள் தமக்கெனச் சுதந்திரமான தனிநாடு ஒன்றை உருவாக்கும் 3 தசாப்தங்களாக ஆயுதப் போரில் குதிக்கநேர்ந்தது. ஆனால் அந்தப்போராட்டம் ஈவிரக்கமின்றி 2009 முள்ளிவாய்க்காலில் தோற்கடிக்கப்பட்டது. இதன் பின்னர் மீளவும் அரசியல் பாதையூடாகவே தமக்கான உரிமையைப் பெற்றுக் கொள்ளவேண்டிய நிலை தமிழர்களுக்கு ஏற்பட்டது.

இதனால் மீண்டும் சமஷ்டி முறையிலான தீர்வு தமிழ் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தி வருகின்றனர் தமிழ் அரசியல் தலைவர்கள். சமஷ்டி முறை யிலான அதிகாரப் பகிர்வு என்பது தமிழர்களின் விருப்பமாக மட்டுமன்றி, சர்வதேசத்தினதும் விருப்பமாக இருப்பது நமக்கு ஒருவகையில் அனுகூலமான விடயம். ஆயினும் வழமை போல சர்வதேசத்தின் இந்த ஆசையையும் கணக்கிலெடுக்கவில்லை மஹிந்த அரசு. மஹிந்தவைப் போலவே தானும் ஜனாதிபதியானால் சமஷ்டி முறையிலான தீர்வினை வழங்குமாறு எந்த சக்தியாவது நிர்ப்பந்தித்தால் தான் அதற்கு ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை என்று மைத்திரி உறுதிபடக் கூறியுள்ளார்.



வழமையாகவே அண்மைக்காலமாக அரசுக்கு எதிரான நிலைப்பாட்டிலேயே கூட்டமைப்பு இருந்தது. இருந்து வருகின்றது. அதனாலேயே கடந்த ஜனாதிபதித்தேர்தலில் மஹிந்தவுக்கு எதிராகக் களமிறங்கிய பொன்சேகாவுக்கு கூட்டமைப்பு ஆதரவளித்தது.எனினும் இரண்டாவது முறையும் தமிழ் மக்களின் வாக்குகள் இல்லாமலேயே மஹிந்த முடிசூடிக் கொண்டார்.

இப்படிப்பட்ட அரசியல் களத்தில் இந்த முறை யாரை ஆதரிப்பது என்று தமிழர்களின் பெரும்பான்மை ஆதரவைக் கொண்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதுவரை முடிவு செய்யவில்லை.கடந்தமுறை தமிழர்கள் பொன்சேகாவுக்கு வாக்களித்த போதும், அதற்கு முன்னைய தடவை ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணித்த போதும் சிங்கள மக்களின் வாக்குகளால் முடி சூடிக் கொண்ட தைரியத்தில் 'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவு எனக்குத் தேவையில்லை' என்று மஹிந்த ராஜபக்ஷ வெளிப்படையாகவே சொல்லிவிட்டார். அவர் அப்படிச் சொல்லாவிட்டாலும் கூட கூட்டமைப்பு ஒருபோதும் மஹிந்தவை ஆதரிக்கும் முடிவை எடுக்கப்போவதில்லை.

இராமன் இல்லாவிட்டால் இராவணன் என்ற கணக்கின் படி, மஹிந்தவைக் கூட்டமைப்பு நிராகரித்தால் மைத்திரியைத்தானே அவர்கள் ஆதரிக்க வேண்டும் என்று கருதப்பட்டது. ஆனால் மைத்திரி கக்கிவரும் இன, மதவாதக் கருத்துக்களால் மைத்திரிக்கான ஆதரவை வழங்குவது தொடர்பில் கூட்டமைப்பால் தெளிவான முடிவொன்றை எடுக்க முடியாதுள்ளது. எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பொதுவேட்பாளரான மைத்திரிக்கு சில நிபந்தனைகளின் அடிப்படையில் ஆதரவை வழங்க முன்வரலாம். சமஷ்டித் தீர்வு வழங்கல், மாகாணங்களுக்கான காணி, பொலிஸ் அதிகாரங்கள் போன்ற கோரிக்கைகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுக்கக் கூடும் என்ற விடயம் மைத்திரிக்கு முதலே தெரிந்திருக்க வேண்டும். அதனால் தான் போலும் கூட்டமைப்பு நிபந்தனை விடுக்க முதலே தான்முந்திவிட்டார் மைத்திரி. இதனால் இப்போது நிபந்தனை அடிப்படையில் கூட மைத்திரியைக் கூட்டமைப்பு ஆதரிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மஹிந்தவை விடவும் துணிச்சலான இனவாத, மதவாதக் கருத்துக்களை முன்வைத்தால் மாத்திரமே சிங்கள மக்களின் வாக்குகளைப் பெற முடியும். எனவே தமிழர்களுக்கு ஆதரவாகக் கதைத்து ஒட்டுமொத்த சிங்கள மக்களின் வாக்குகளை இழக்க மைத்திரி ஒன்றும் மடையர் அல்லர். எனவேதான் ஒன்றுக்கும் உதவாத(அப்படித்தான் பேரினவாதிகள் நினைக்கிறார்கள்) தமிழர்களின் வாக்குகளைப் பெறுவதை விடவும் ஆட்சியமைக்கத் தேவையான -உபயோகமான- சிங்கள மக்களின் வாக்குகளைக் குறிவைத்து காய் நகர்த்தத் தொடங்கியுள்ளார் மைத்திரி. அதனால் தான் கூட்டமைப்பின் ஆதரவை அவர் எதிர்பாராமல் செயற்படுகின்றார். கடந்தமுறை போர்வெற்றி நாயகராகச் சிங்கள மக்கள் மத்தியில் உயர்ந்து நின்ற சரத் பொன்சேகா, தோற்றமைக்கான காரணங்களில் ஒன்றாக, கூட்டமைப்பு அவரை ஆதரித்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது. கூட்டமைப்போடு கைகோர்த்துள்ள பொன்சேகா . தமிழர்களுக்கு தனிநாடு வழங்கப்போகிறார் என்று மஹிந்த தரப்பு அவிழ்த்துவிட்ட பரப்புரை சூறாவளியாக மாறி பொன்சேகாவின் அரசியல் இருப்பையே ஆட்டங்காணவைத்துவிட்டது.இந்தச் சம்பவத்தில் இருந்து பாடம் கற்றுக்கொண்டதாலோ என்னவோ தன்னுடைய எதிரிகள் தமிழர்கள் என்பது போலவே மைத்திரி நடந்து கொள்ளத் தொடங்கியுள்ளார்.

இலங்கை அரசியலில் எவர் தமிழ் மக்களுக்கு எதிராக அதிகமாக கருத்துக்களை வீசுகின்றார்களே அவர்களே சிங்கள மக்கள் மத்தியில் அவதார புருஷர்கள். அதைத் தான் அன்று முதல் இன்று வரை ஆட்சி செய்துகொண்டிருக்கும் ஒவ்வொரு ஆட்சியாளரும் செய்துவந்தனர்.

உண்மையில் அது சிங்கள மக்களின் பிழை என்று கூற முடியாது. சிங்கள மக்களை அப்படிப்பட்ட மனநிலைக்குள் பேரினவாத அரசியல்வாதிகளும், பேரினவெறி கொண்ட ஊடகங்களும் அத்தகைய நச்சுவிதைகளை சிங்கள மக்களிடையே ஆழவிதைத்து விட்டன.

எதற்காக தமிழ் மக்கள் போரட்டத்தை தொடங்கினார்கள்.அவர்களுடைய தேவை என்ன என்பன போன்ற விடயங்களை சிங்கள் ஊடகங்களோ, சிங்கள அரசியல்வாதிகளோ எடுத்துக் கூறுவதற்கு எப்போதும் தயாராக இருந்ததில்லை. இத்தகைய பேரினநச்சு அரசியல் பின்புலத்தில் வளர்ந்தவர்தான் மைத்திரி. எனவே அப்படித் தோற்றம் பெற்ற மைத்திரி தமிழ் மக்களுக்கு எதையும் கொடுத்துவிட முன்வரமாட்டார்.மஹிந்தவும், மைத்திரியும் பேரினவாதத்தின் இருவேறு விம்பங்கள் என்பதைத் தவிர வேறெந்த வித்தியாசமும் இல்லை. எனவே மைத்திரி வந்தால் எங்களுக்கும் விடிவு என்ற கானல் நீரை இனியும் தமிழர்கள் நம்பத் தயாராக இல்லை.அதனால் தான் இந்த முறை ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமிழ் மக்கள் அக்கறையற்றுக் காணப்படுகின்றார்கள் போலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணமும் போர்க்கால ரீவி யுகமும்



- ஞாபகன்

(கடந்த வாரத் தொடர்ச்சி)

ஒரு நாள் மகாபாரதம் பார்த்துக் கொண்டிருக்கையில், ஆளரவம் கேட்டுத் திரும்பினால் வரவேற்பறையின் யன்னலூடு சிலபல தலைகள் தெரிந்தன. இராணுவத்தினர் சிலர் வெளிய நின்று பார்த்துக் கொண்டிருந்தார்கள். முடிந்ததும், என்னிடம் சிறிய பாத்திரம் எடுத்துவரச் சொன்னார்கள். வீட்டுத் தோட்டத்தில் தக்காளி, பச்சைமிளகாய் பறித்துக் கொண்டுவந்து அதில் வெட்டிப் போட்டு, சிறிது உப்பும் சேர்த்து ஒரு உடனடி சம்பல் தயாரித்து வீட்டு முற்றத்தில் அமர்ந்து சப்பாத்தி யுடன் சாப்பிட்டார் கள். மீண்டும் சற்று நேரத்தில் ஆரம்பமான விசுவாமித்திரர் தொடரையும் அப்படியே யன்னலூடு நின்று பார்த்துவிட்டுத் திரும்பினார் கள். பிறகு இந்திய இராணுவம் வெளியேறிய பின், தொண்ணூறாம் ஆண்டில் மகாபாரதப் போர் தொடங்கும் முன்னரே எங்கள் போர் ஆரம்பித்து விட்டது. யாழ்ப்பாணத்தில் மின்சாரம் நின்று போக, எல்லா வீட்டுத் தொலைக்காட் சிப் பெட்டிகளும் உறங்கு நிலைக்குச் சென்றுவிட்டிருந்தன.

யாழ்ப்பாணத்தில் படம் போடுவதென்பது மிகப்பெரிய கொண்டாட்டமாக இருந்த காலகட்டம் ஒன்றுண்டு. மின்சாரம் இல்லாத தொண்ணூறு முதல் தொண்ணூற் றைந்து வரையான காலப்பகுதி அது. ரீவி போடுவது என்பது ஒரு சடங்கு, சம்பிரதாயம் மாதிரி ஆகிப்போனது. உறவினர் வீடுகளில் திருமணம், பூப்பு நீராட்டு விழாக்களில் தொடர்ந்து இரண்டு மூன்று நாள்களுக்கு ஜெனரேற்றர் வாடகைக்கு எடுத்து படம் போடுவார்கள். அதுவும் அந்தக் காலப்பகுதியின் இறுதிநாள்களில் பலவிதமான கட்டுப்பாடுகளும் இருந்ததாகக் கேள்வி. அதற்காகவே கண்துடைப்புக்காக இயக்கப் படக் கசெட்டும் எடுப்பார்கள். ஆரம்பகாலத்தில் மண்ணெண்ணை யில் இயங்கும் நீர் இறைக்கும் பம்ப் உடன் வீட்டுக் கிணற்றில் பொருத்தப்பட்ட மோட்டாரை இணைத்து ஒரு உள்ளூர் ஜெனரேற்றர் தயாரித்து இயக்கப்பட்டன. பின்னர் ஜெனரேற்றர்கள் பாவனையி லிருந்தன. இரவு வெகுநேரம் தொடர்ந்து பார்க்கக் கூடாதென்று சட்டம் இருந்ததோ என்னவோ தெரியவில்லை. சத்தம் அதிகம் போடாத சிறிய ஜெனரேற்றர் எடுத்து, அதையும் கிடங்கு வெட்டி அதற்குள் வைத்து இயக்கியவர்களும் உண்டு.

இவ்வாறான விசேட தினத் திரையிடுகையில், அதற்கென்றே சில படங்கள் உண்டு. அவற்றைத் தவிர்க்க முடியாது. இங்கு பிரதான பார்வையாளர் கள் பெண்கள். அவர்களுக்கான தெரிவு மிக முக்கியமானது. எண்பதுகளில் இரட்டைப்பின்னல் போட்டுக் கொண்டு பாடசாலைக்குப்போன அக்காமாரின் மனங்கவர்ந்த ஹீரோவாகப் பிரபு விளங்கினார். இப்போதும் கேட்டு உறுதிப்படுத்திக் கொள்ளலாம். அதேபோல பெரிய அக்காக்களுக்கு கார்த்திக்கும். அந்த அக்காக்களுக்காக பொன்னுமணி. அநேகரின் கனவுநாயகனாக இருந்த பிரவுவின் சின்னத்தம்பி பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. கொப்பி என்றழைக்கப்பட்ட வீடியோக் கசெட் எடுக்கப் போகும்போதே, கடைக்காரர் சின்னத்தம்பி கொப்பியைக் கேட்காமலே எடுத்து வைத்துவிடுவார். ரீவியே இல்லாமல் படம்போட்டாலும், சின்னத்தம்பி இல்லாமல் படம் போடவே முடியாது என எல்லோரும் நம்பினார்கள். அதுபோல கொஞ்சம் சின்ன அக்காக்களுக்கு மன்னன். ஆண்களுக்காக கண்டிப்பாக எஜமான், சின்னக் கவுண்டர் இடம்பெறும். அன்றைய குழந்தைகளுக்காக விசேடமாக தென்னிந்திய ஸ்பில்பேர்க்'(?) இராமநாராயணனின் துர்க்கா காட்சியுமு[...] என்று சொ[...] சிங்காரவேலன்தான். மகாநதி, குணா பற்றியெல்லாம் யாரும் பேசியே நான் பார்த்ததில்லை. ஒருவகையில் யோசித்தால், படம் பார்ப்பதே சந்தோஷமாக இருக்க எனும்போது சிங்காரவேலன் சரியான தெரிவுதான்! அபூர்வமாக ஒருமுறை கைதியின் டைரி படம் பார்த்தேன். மிகப்பிடித்திருந்தது. அதுதான் நான் முழுமையாகக் கவனித்துப் பார்த்த, மிகப்பிடித்த கமல் படமாக இருந்தது.

வவுனியா, வன்னியின் 96, 97களின் இடம்பெயர் இடநெருக்கடிக் காலங்கள், யாழ்ப்பாணத்தின் 96களுக்குப் பின்னைய 99 வரையான மின்சாரமில்லா காலகட்டங்களில் படம் பார்ப்பது போலவே படம் கேட்பது என்பது அதனோடு இணைந்த ஒரு சம்பிரதாயம். ஒருவீட்டில் படம் ஓட்டுவித்தால் சுற்றுச் சூழலில் ஆறேழு வீடுகளுக்கு படம் கேட்கும். ஓரிரு குரல்கள் தொடர்ச்சியாக இடைவிடாமல் பேசுகின்றன. வெவ்வேறு தொனியில், ஏற்ற இறக்கங்களோடு, மூக்கை உறிஞ்சிக் கொண்டு, அழுதுகொண்டு, அரற்றிக் கொண்டு மொத்தத்தில் பேசிக்கொண்டேயிருப்பார்கள். சிறிது இடைவெளி கிடைக்கும்போது இசையமைப்பாளரின் லாலா லலலாலா கோரஸ் இசைக்கோர்வையை ஒலிக்க விடுவார். பின்னர் மீண்டும் பேச்சு. நாலு வீடு தள்ளியிருந்தே சொல்லிவிடலாம் இயக்குநர் விக்ரமன் படம் போகிறது என அன்றைய காலகட்டத்தில் கட்டாயம் பார்க்கப்படவேண்டிய படங்களாக அவையிருந்தன.

வெள்ளிக்கிழமை. தூர்தர்ஷன் காலத்தின் [...]ள். [...] இரவு ஒளியும் ஒலியும், பத்து மணிக்குத்திரைப்படம் ஒளிபரப்பப்படும் என்பதால் பரபரப்பாக தயாராகியிருப்போம். எட்டுமணி ஒளியும் ஒலியும் நிகழ்ச்சிக்கு ஆறு மணியிலிருந்தே நம் மக்கள் காத்திருக்க, முத்து முத்தாக நான்கு பாடல்கள் ஒலிபரப்புவார்கள். அது அநேகமாக விஜயகாந்த், சத்தியராஜ், பிரபு, கார்த்திக், சரத்குமார் பாடல்களாக இருக்கும். அந்த நேரத்தில் மின்சார வெட்டு இல்லாது முழுமையாகப் பார்க்க முடிந்தால் சாதிச்சுட்டம்டா என்றொரு திருப்தி!

இரவு பத்து மணிக்கு ஒரு படம் போடுவார்கள் பாருங்கள். அதைப் பார்ப்பதற்குத்தான் எத்தனை போராட்டங்கள், சோதனைகள். என்னதான், தொண்ணூற்றொன்பது ஜனவரியிலிருந்து ஒழுங்காக மின்சாரம் கிடைக்க ஆரம்பித்திருந்தாலும், பழக்க தோஷத்திலோ என்னவோ (என்ஜின் மாற்றுவதாகச் சொல்வார்கள்) இரவுகளில் ஒரு சிறிய மின்வெட்டு இருந்ததுண்டு. சரியாக ஒன்பது ஐம்பதுக்கு மின்வெட்டு ஏற்படும். சரியாகப் பத்து மணிக்கு சில நொடிகளுக்குமுன் மின்சாரம் வந்துவிடும். சில நேரங்களில் சரியான நேரத்துக்கு வராது. படம் தொடங்கிப் பத்து, இருபது நிமிடங்கள் கழித்து வரும். வெறுத்துப் போய் இருப்போம்.

மின்சாரம் சரியான நேரத்தில வந்துட்டால? ரீவி நிலையத்தினர் ஹிந்தியில் இருந்து, ஒளிபரப்பைத் தமிழுக்கு மாற்றி இருக்க மாட்டார்கள். இது அதைவிடக் கொடுமையாக இருக்கும். அப்போது ஒரு வெறி வரும் பாருங்கள் தமிழுக்காகப் போராடியே தீரவேண்டும் என்கிற தீவிரவாத சிந்தனை தோன்றும். ஏதோ ஒரு மொக்கையான ஹிந்திப் படத்தை இருபது நிமிடம் பார்த்துக் கொண்டிருக்க, திடீர் என்று தமிழுக்கு மாற்றுவார்கள். என்ன படம் என்பதே தெரியாது. அநேகமாக அப்படியான படம்தான் போடுவார்கள். சிறுவயதில் ரூபவாஹினியில் பார்க்கும்போதெல்லாம் சிலநொடிகள் ஒளிபரப்பில் மிக அரிதாக குளறுபடி நேர்ந்தாலே உடனே தடங்கலுக்கு வருந்துகிறோம் என்பார்கள். ஆனால் தூர்தர்ஷனில் அந்தமாதிரி மோசமான பழக்கமெல்லாம் கிடையாது. என்னதான் ஆனாலும், எவ்வளவு நேரம் தடங்கினாலும் அவர்கள் எதற்குமே வருந்தியதில்லை.

தெய்வ அனுக்கிரகத்தில்(?!) எல்லாமே சரியாக நல்லபடியாக நடந்தால், அது ஒரு தனித் திருவிழா! மகிழ்ச்சியாகப் பார்த்துக் கொண்டிருக்கையில், படத்தின் பெயர் வரும். வா ராஜா வா! வாழ்க்கையில் கேள்வியே பட்டிருக்காத படமாக இருக்கும். இருந்தாலும் தைரியத்தை இழந்துவிடாமல், மனசைத் தளரவிடாமல் இருக்கும்பட்சத்தில், படத்தின் தலைப்பைத் தொடர்ந்து பதின்மூன்று விளம்பரங்கள்.

முதலாவதாக வீக்கோ டெர்மரிக் அதே பழைய விளம்பரம். பத்து வருடத்துக்கு முதல் குளித்துக் கொண்டிருந்த அதே அன்ரிதான் இப்போதும் அதே இளமையோடு குளித்துக் கொண்டிருப்பார் அதாவது நாங்கள் மட்டும் வளர்ந்துவிட்டோம்! முதல் கட்ட விளம்பரங்கள் முடியும்போதே கண்ணைக் கட்ட ஆரம்பித்துவிடும். அதையும் தாண்டி, கொள்கைப்பிடிப்புடன் இருந்தால், ஒரு பத்து நிமிடம் விட்டு இன்னொரு பத்து விளம்பரம். இதில் பார்த்துக் கொண்டிருக்கும் பாதிப்பேர் அவுட்! ஒரு கட்டத்தில் படுமொக்கைப் படத்தின் வெப்பம் தாங்காமல் எல்லோருமே தூங்கி, சரியாக வணக்கம் போடும்போது எழுந்திருந்து பார்ப்பார்கள். அது மட்டும் எப்படியென்றே தெரிவதில்லை.

என்னதான் கிண்டல் செய்தாலும், எனக்கு சினிமாவையும், நல்ல படங்களையும் அறிமுகம் செய்தது தூர்தர்ஷன்தான். அதுவரை நான் பார்த்திருந்தது இந்தியனிலிருந்து

(15 ஆம் பக்கம் பார்க்க)

**யாழ்ப்பாணத்தில் படம் போடுவதென்பது மிகப்பெரிய கொண்டாட்டமாக இருந்த காலகட்டம் ஒன்றுண்டு. மின்சாரம் இல்லாத தொண்ணூறு முதல் தொண்ணூற்றைந்து வரையான காலப்பகுதி அது. ரீவி போடுவது என்பது ஒரு சடங்கு, சம்பிரதாயம் மாதிரி ஆகிப்போனது. உறவினர் வீடுகளில் திருமணம், பூப்பு நீராட்டு விழாக்களில் தொடர்ந்து இரண்டு மூன்று நாள்களுக்கு ஜெனரேற்றர் வாடகைக்கு எடுத்து படம் போடுவார்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அக்கினிக்குமரன்

# மூழ்கும் கப்பலும் பாயும் எலிகளும்



ஜனாதிபதித் தேர்தல் நாள் நெருங்கி வந்து கொண்டிருக்கும் இந்த நாள்களில் ஏனைய பரப்புரை நடவடிக்கைகள் ஒரு புறமிருக்க கட்சி தாவும் கைங்கரியங்களும் முனைப்புப் பெற்று வருகின்றன. இந்தக் கட்சித் தாவல்கள் ஆட்சியிலுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை பலவீனமடைய வைக்கும் அதே வேளையில் பரப்புரை நடவடிக்கையிலும் முக்கிய பங்கை வகிக்கின்றன. அரசாங்கக் கட்சியை விட்டு வெளியேறியோர் தாம் வெளியேறியமைக்கான காரணங்களாக சகோதரச் சர்வதிகாரம்,ஊழல் மோசடிகள், அதிகார துஷ்பிரயோகம், அமைச்சர்களுக்கான அதிகாரங்களைச் செயற்படுத்த முடியாத நிலைமைகள், ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்க வேண்டிய தேவை என்பவற்றை முன் வைக்கின்றனர்.அரச தரப்போ இதற்கு மாறாக அரசை விட்டு வெளியேறியவர்கள் துரோகிகள் எனவும் டொலர்களுக்கும் பவுண்களுக்கும் விலை போய் விட்டார்கள் எனவும், அரசை மாற்றும் சர்வதேசச் சதிக்குத் துணை போகிறார்கள் எனவும் குற்றம் சாட்டி வருகின்றது.

அதே வேளையில் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த சில பிரதேச சபை உறுப்பினர்கள் அரச தரப்புக்குப் பாய்ந்துள்ளமையையும் இந்தச் சமயத்தில் கவனத்தில் எடுக்காமல் விட முடியாது.

எப்படியிருப்பினும் கட்சியை விட்டு கட்சி பாயும் படலம் ஒரு அரசியல் கலாசாரமாக மாறிக் கொடி கட்டிப் பறக்கிறது. இது இலங்கையில் இன்று நேற்று ஆரம்பித்த ஒன்றல்ல. ஒரு கட்சியில் நின்று போட்டியிட்டு வெற்றி பெற்று விட்டு மக்கள் வழங்கிய ஆணையை மீறி இன்னொரு கட்சிக்குத் தாவும் முறை ஏற்கனவே பலமுறை இலங்கையில் அரங்கேறவே செய்துள்ளது.

ஒரு கட்சிக்குள் முரண்பாடுகள் உருவாகி அவை மெல்ல மெல்ல முனைப்புப் பெற்று அது வெடிக்கும் போது சம்பந்தப்பட்ட தரப்பினர் கட்சியை விட்டு வெளியேறினால் இதைத் தவறு என்று சொல்லி விட முடியாது. அது இயல்பானதும் கூட.

ஆனால் இலங்கையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற கட்சித் தாவல்களில் பெரும்பான்மையானவற்றில் பணம் , பதவி என்பனவே முக்கிய பங்கை வகித்தமையை அவதானிக்க முடியும்.

இலங்கையின் முதலாவது பெரும் கட்சித் தாவல் 1964ஆம் ஆண்டு இடம்பெற்றது. திருமதி.சிறிமாவோ பண்டாரநாயக்காவின் தலைமையில் அன்று ஆட்சியிலிருந்த அரசாங்கம் 'லேக்ஹவுஸ் " எனப்படும் ஏரிக்கரைப் பத்திரிகைக் குழுமத்தை தேசிய மயமாக்கும் சட்டத்தை நாடாளுமன்றத்தில் முன் வைத்தது. அந்தச் சட்டம் தொடர்பாக வாக்களிப்பு நடந்த நாளில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர் சி.பி.டி சில்வா தலைமையிலான 13 பேர் எழுந்து சென்று எதிர்கட்சி ஆசனங்களில் அமர்ந்து பிரேரணைக்கு எதிராக . வாக்களித்தனர். அதன் காரணமாக ஆட்சி கவிழும் நிலை ஏற்பட்டது.

ஒரு அரசாங்கத்தையே கவிழ்க்கும் ஒரு பெரும் கட்சித் தாவல், கடைசி நிமிடம் வரை வெளிவராமல் வெகு கச்சிதமாக நடத்தப்பட்டது. அதன் பின்னணியில் ஐக்கிய தேசியக் கட்சியும் சில வெளிநாட்டுத் தூதரகங்களும் பெருந்தொகைப் பணத்தைப் வாரியிறைத்துச் செயற்பட்டதாக அந்த நாள்களில் குற்றம் சுமத்தப்பட்டது.

அதற்குப் பின்பும் ஒரு சிலர் தாங்கள் கட்சிக்குள் புறமொதுக்கப்படுவதாகக் கூறி ஆளும் தரப்புக்கு மாறிப் பதவிகளையும் பெற்றுக் கொண்டதுண்டு.

ஆனால் 2005ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக் ஷ ஆட்சிக்கு வந்த பின்பு கட்சித் தாவல் என்பது மேலும் சக்தி பெற்ற ஒரு ஆயுதமாக மாற்றப்பட்டது. இந்தக் கட்சித் தாவல்கள் அரச தரப்பை ஒரு சர்வதிகார சக்தியாகப் பலப்படுத்திய அதே வேளையில் எதிர்கட்சிகளைப் பிளவுறச் செய்து பலவீனப்படுத்தியிருந்தன.

இந்தக் கட்சித் தாவல்களை வெற்றிகரமாக நடத்திய மந்திரக் கோலாக அமைச்சர் பதவிகளே விளங்கின. அதன் காரணமாக நூற்றுக்கும் மேற்பட்ட அமைச்சர்களைக் கொண்ட நாடாக இலங்கை 'பெருமை' பெற்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷ மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கொண்டு தன்னை ஒரு அசைக்க முடியாத சக்தியாகப் பலப்படுத்திக் கொண்டார்.

ஆனால் அந்த அதிகாரமும், அந்த அதிகாரத்தை அவர் பயன்படுத்திய முறையும் , எவரையுமே கணக்கில் எடுக்காத திமிர்த்தனப் போக்குமே இப்போது அவரை அசைய வைத்தது மட்டுமன்றி வீழ்த்தப்படக் கூடிய ஒரு சக்தி தான் மஹிந்த என்ற நிலைக்கும் தள்ளி விட்டன. எந்தக் கட்சித் தாவல் மூலம் அவர் ஒரு பெரும் சக்தியாகத் தன்னை மாற்றினாரோ அதே கட்சித் தாவல் இப்போது எதிர் மறையாக மாறி அவரை மிரட்ட ஆரம்பித்து விட்டது.

எதிரணியின் பொது வேட்பாளராக களமிறங்கியுள்ளவர் முன்னாள் சுகாதார அமைச்சர் மைத்திபால சிறிசேனா. இவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் என்பதுடன் பொலன்னறுவை, அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் மிகுந்த செல்வாக்குப் பெற்றவர். இவரின் பின்னணியில் இருப்பவர் முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் தலைவியுமான திருமதி சந்திரிகா விஜயகுமாரதுங்க. இவர் இரு பிரதமர்களின் மகள் என்பது மட்டுமன்றி சிங்கள மக்கள் மத்தியில் தனித்துவமான ஒரு ஆதரவுத்தளத்தைக் கொண்டவர். அத்துடன் இருமுறை ஜனாதிபதியாக இருந்தவர். எனவே இந்தக் கூட்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஆதரிக்கும் மக்களிடம் நல்ல பெறுபேற்றை மைத்திரிபால சிறிசேனாவுக்கு பெற்றுக் கொடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சி, சரத் பொன்சேகாவின் ஜனநாயகக் கட்சி என்பன பொது வேட்பாளருடன் இணைந்து செயற்படுவதென உறுதியாக நிற்கின்றன. ஜாதியஹெல உறுமய அரசை விட்டு வெளியேறியதுடன் மின்சார சபையில் இடம்பெற்ற 150 கோடி ஊழலை அம்பலப்படுத்தப் போவதாகவும் அறிவித்துள்ளது. அமைச்சர்களாகத் ராஜித சேனாரத்தின, நவீன் திசநாயக்கா உட்பட சில நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசை விட்டு வெளியேறி விட்டனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் , அகில இலங்கை மக்கள் காங்கிரஸும் எந்தப்பக்கம் சாய்வதென இது வரை எந்த முடிவும் எடுக்கவில்லை. அரசை ஆதரித்தால் முஸ்லிம் மக்களிடமிருந்து தனிமைப்படும் நிலை. வெளியேறினால் வேறு பல சிக்கல்கள். இதன் காரணமாக அவர்கள் எந்த ஒரு முடிவும் எடுக்க முடியாமல் தடுமாறிக் கொண்டிருக்கின்றனர்.

அரச தரப்பு என்ற கப்பலிலிருந்து எலிகள் எதிரணித் தரப்புக்கு பாய்ந்து கொண்டிருக்கின்றன.இரு கப்பல்களும் மோதுகின்றன. எது மூழ்கும் ,எது கரையேறும் என்று முடிவு செய்ய முடியாத நிலையில் பல எலிகள் தடுமாறுகின்றன.

அரச கப்பல் ஏற்கனவே ஓட்டை விழத் தொடங்கி விட்ட பழைய கப்பல். எதிரணிக்கு கப்பல் பழைய பலகையில் செய்யப்பட்டாலும் புதிய கப்பல். எது மூழ்கும் எது கரைசேரும் என்பதைப் பொறுத்தே பாயும் எலிகளின் எதிர்காலம் தங்கியிருக்கும் .







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எய்ட்ஸ்

## எதிர்கொள்ள முடியாத எதிரி



● எஸ்.வி.மேனகா

எச்.ஐ.வி தொற்றுக்கு ஆளான ஒருவர் நோய் எதிர்ப்பு சக்திகள் அவரது உடலில் இருக்கும் போது தனக்கு தொற்று இருப்பதை உணர முடியாது. இதனால் அவர் 10தொடக்கம் 15 வருடங்கள் பாலியல் உறவுகளை வைத்துக் கொள்வார். காலப்போக்கில் அவருக்கு உடலில் மாற்றங்கள் ஏற்பட்டு எச்.ஐ.வி தொற்று இருப்பது கண்டறியப்பட்டால் அவர் உறவுகளை வைத்துக் கொண்டவர்களது எதிர்காலமும் சீரழிந்து விடும். இதனால் ஆண்களால் பெண்களுக்கும் பெண்களால் ஆண்களுக்கும் எச்.ஐ.வி தொற்றுவது மட்டுல்ல ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுபவர்களுக்கும் இந்தத்தொற்று ஏற்படும்.

கலாசாரப் பிறழ்வுகள் போருக்குப் பின்னர் இலங்கையில் அதிகரித்துள்ளது . எங்கு பார்த்தாலும் சிறுவர் துஷ்பிரயோகம், வன்புணர்வு , கொலை என்ற செய்திகளே ஊடகங்களில் தினமும் வெளியாகிக் கொண்டு தான் இருக்கின்றன. இவ்வாறான சம்பவங்கள் ஆரம்ப காலங்களில் கொழும்பு போன்ற தலைநகரங்களில் மட்டுமே இடம்பெற்றாலும் தற்போது நாடளாவிய ரீதியில் மூலை முடுக்கெங்கும் நடந்தேறுகின்றன.

வடக்கு, கிழக்கு பகுதியில் 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் இவ்வாறான துஷ்பிரயோக சம்பவங்களை காண்பது என்பதே மிக அரிது. தப்பித் தவறி அப்படி ஒரு சம்பவம் இடம்பெற்றால் சம்பந்தப்பட்டவருக்கு வழங்கப்படும் அதியுச்சத் தண்டனை, ஏனையோரை அப்படியான பிறழ்வுகளைச் செய்ய அனுமதிக்காது. அவ்வாறு மிகக் கட்டுக் கோப்பாக இருந்த எங்கள் பிரதேசம் போருக்குப் பின்னர் , கலாசாரச் சீரழிவின் மையமாகவே மாறத் தொடங்கிவிட்டது.

சிறுவர் துஷ்பிரயோகம், வன்புணர்வு, கொலை என்பன மலிந்து போயுள்ளன. பெண்கள் சிறுவர்கள் சுதந்திரமாக நடமாட முடியாத காலம். காமுகர்கள் அலைந்து திரியும் காலம் இது. எங்கட அம்மா சொல்லுவா, முந்தி நாங்கள் இரவு 12 மணிக்கும் வந்திருக்கிறம்.ஒரு தம்பி கிட்டவரமாட்டான் ' என்று. ஆனால் இப்போது இரவு 7 மணி என்றால் வீட்டுக்குள் பதுங்கும் நிலை யில் தான் நாம் வாழ்ந்து வருகின்றோம்.

இப்போது பெண் பிள்ளைகள் வெளியே சென்றால் வீடு திரும்பும்வரை பெற்றோர் மடியில் நெருப்பைக் கட்டியவர்கள் போலவே பதற்றத்துடன் இருக்கவேண்டிய சூழல்.

கலாசாரச் சீரழிவென்ற பிசாசு ,அரக்கனையும் வலிந்து போய் கூட்டி வருகின்றது. இன்று இலங்கையில் எய்ட்ஸ் தொற்றுக்கு உள்ளவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கின்றது இந்தஎண்ணிக்கை வருடாவருடம் குறையாது கூடிக் கொண்டே செல்கின்றது. ஆரம்பகாலத்தில் வெளிநாட்டுக்குச் சென்று வந்தவர்களுக்கு மாத்திரமே எய்ட்ஸ் நோய் இருந்தது. ஆனால் இப்போது உள்ளூரில் உள்ளவர்களுக்கும் எய்ட்ஸ் தொற்று இருக்கின்றமை பரிசோதனைகள் மூலம் கண்டறியப்படுகின்றன.

### எப்படி நுழைந்தது எய்ட்ஸ்?

இலங்கையில் 1986 ஆம் ஆண்டு வெளிநாட்டவர் ஒருவர் எய்ட்ஸ் நோயாளியாக இனம் காணப்பட்ட நிலையில் 1987 ஆம் ஆண்டு வெளிநாட்டுக்கு சென்று வந்த ஒருவர் எய்ட்ஸ் நோயாளியாகக் கண்டறியப்பட்டார்.இவ்வாறு தான் இலங்கையில் தொடங்கியது எய்ட்ஸ் கலாசாரம். அன்றில் இருந்து இன்றுவரை சுமார் 1850ற்கும் மேற்பட்டவர்கள் இதுவரை எய்ட்ஸ் நோயாளராகக் கண்டறியப்பட்டுள்ளனர். அவர்களில் சுமார் 500 பேர் தற்போது சிகிச்சை பெற்று வருகின்றனர். எனினும் 'இவர்களுக்கு மட்டும் தான் எய்ட்ஸ் நோய் உள்ளது என எங்களால் அடித்துக் கூறமுடியாது. தற்போது இலங்கையில் 5000 மேற்பட்டவர்கள் எயிட்ஸ் நோய் உள்ளவர்களாக இருக்கலாம்' என மருத்துவ வட்டாரங்கள் அச்சம் வெளியிட்டுள்ளன.

### வடக்கிலும் எய்ட்ஸ்

வடக்கிலும் தற்போது எய்ட்ஸ் பரம்பல் அதிகரித்துள்ளது. இதுவரைக்கும் யாழ்ப்பாணத்தில் 13 பேரும் வவுனியாவில் 2 பேரும் இனங் காணப்பட்ட அதேவேளை முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை எச்.ஐ.வி தொற்றுள்ள எவரும் கண்டறியப்படவில்லை என மருத்துவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதற்காக அங்கு எய்ட்ஸ் நோய் உள்ளவர்கள் இல்லை என்று உறுதிபடக் கூறிவிட முடியாது. கண்டி , கொழும்பு உட்பட பல்வேறு மாவட்டங்களில் கண்டு பிடிக்கப்பட்ட எய்ட்ஸ் நோயாளர்களின் வாக்குமூலங்களின் படி கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் தாம் பாலியல் தொடர்புகளைப் பேணி வந்ததாகத் தெரிவித்துள்ளனர்.

எனவே கிளிநொச்சி , முல்லைத்தீவில் எச்.ஐ.வி தொற்றுக்கு இலக்கான நிலையில் பலர் இருக்கின்றார்கள் என்ற உண்மை வெளியாகியுள்ளது. எனினும் யாருக்கு அந்தத் தொற்று உள்ளது என்பது தான் தற்போது கேள்விக்குறி. இவ்வாறான நிலையில் திருமணம் உட்பட சில விடயங்களைக் குறித்த பகுதிகளில் செய்வதற்கு பின்னடிக்க வேண்டிய நிலை எதிர் காலங்களில் உருவாகலாம்.

யாழ்.மாவட்டத்தில் 2005 ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டுவரை எய்ட்ஸ் நோயாளிகள் என்று எவரும் இனங்காணப்படவில்லை. அதற்குப் பின்னர் 2012 ஆம் ஆண்டு 4 பேர் இனங்காணப்பட்டனர். இவர்களுள் 2 பேர் இறந்து விட்டனர். அதேபோல 2013 ஆம் ஆண்டு ஒருவர் இனங்காணப்பட்டார். ஆனால் இந்த வருடம் 13 பேர் இனங் காணப்பட்டுள்ளனர். இதிலிருந்து என்ன தெரிகின்றது என்றால் யாழ்ப்பாணத்தில் எய்ட்ஸ் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து கொண்டு செல்கின்றது என்பதே. இதேவேளை குழந்தைகள் மூவருக்கும் எச்.ஐ.வி இருப்பதற்கான அறிகுறிகள் உள்ளன. இருப்பினும் இதுவரை அவர்கள் எச்.ஐ.வி தொற்றுக்கு உள்ளானவர்கள் என உத்தியோக பூர்வமாகக் கூற முடியாதுள்ளது.

எச்.ஐ.வி பாதிப்புக்குள்ளானவர்கள் என்று வடக்கில் கண்டறியப்பட்டவர்கள் எவரும் தாமாக முன்வந்து பரிசோதனை மேற்கொண்டவர்கள் அல்லர். எமது பகுதியில் அவ்வாறான மனவலிமை எவரிடமும் இல்லை. இதற்குப் பல சமூகக் காரணங்களும் உள்ளன. இவர்கள் அனைவரும் வேறு நோய்களுக்கான பரிசோதனைகளுக்கு வந்தபோதே தற்செயலாக எச்.ஐ.வி தொற்றுக்கு இலக்கான விடயம் தெரிய வந்தது. அவ்வாறு தான் காசநோயின் தாக்கமும் யாழ்ப்பாணத்தில் அதிக வீதத்தில் தான் உள்ளது. இவர்களில் மூவர் எயிட்ஸ் தாக்கத்துக்கு உட்பட்டுள்ளார் என்பதும் அண்மையில் கண்டறியப்பட்டுள்ளது. அதனையடுத்து தற்போது எய்ட்ஸ் நோயாளர்களுக்கு காசநோய் பரிசோதனையும் காசநோய் உள்ளவர்களுக்கு எய்ட்ஸ் பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மேலும் கர்ப்பிணிகளுக்கும் எய்ட்ஸ் பரிசோதனை செய்யப்பட்டு வருகின்றது. நோயாளர்களின் அனுமதியுடனேயே இந்தப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

### அறை எண் 33

யாழ். போதனா வைத்தியசாலையில் 33 ஆம் அறைக்குச் சென்றால் எச்.ஐ.வி தொற்று தொடர்பிலான பரிசோதனைகள் மற்றும் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். இங்கு இனங்காணப்பட்டவர்களுக்கு சிகிச்சையும் சரியாக வழங்கப்படுகின்றது. மருத்துவ வசதிகள் அனைத்தும் இலவசமாகச் செய்ய முடியும். இங்கு எச்.ஐ.வி தொற்றுள்ளவர்கள் என இனம்காணப்படுபவர்கள் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்த சூழலிலேயே அவர்கள் எய்ட்ஸ் நோயாளர்கள் என்று கண்டறியப்பட்டனர். எம்முடைய சமூகத்தில் ஏய்ட்ஸ் தொடர்பான போதிய விழிப்புணர்வு இல்லாமையாலேயே இவ்வாறு எச்.ஐ.வியால் பாதிக்கப்பட்டவர்களை உடனடியாகக் கண்டுபிடிக்க முடியாமல், தற்செயலாகக் கண்டுபிடிக்க வேண்டியுள்ளது.

(21 ஆம் பக்கம் பார்க்க)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துச் சிறப்பியல்புகளும் அவனிடமிருந்தன. அதனால் அவன் ஒரு அற்புதமான இலட்சியவாதியாக வாழ்ந்தான். போராடினான். போர்க்களத்தில் வீரனாகவும். பொதுமக்களின் தோழனாகவும் எங்கும் எல்லாவற்றிலும் எல்லோரிடமும் அவனது ஆளுமையின் வீச்சு நிறைந்திருந்தது.கிட்டு ஒரு தனிமனித சரித்திரம். நீண்ட ஓய்வில்லாத புயலாக வீசும் எமது விடுதலை வரலாற்றில் ஒரு காலத்தின் பதிவு அவன்.நான் கிட்டுவை ஆழமாக நேசித்தேன். தம்பியாக, தளபதியாக நான் அவனை நேசித்தேன். எனது சுமைகளை தாங்கும் இலட்சியதோழனாக நான் அவனை நேசித்தேன். இது சாதாரண மனித பாசத்துக்கு அப்பாற்பட்டது.அதுவும் ஆன்மாவை உலுப்பிவிடும் ஒரு உணர்வுப்பூகம்பத்தை மனித மொழியில் விபரிக்கமுடியாது.அவனது மறைவு எனது ஆன்மாவை பிழிந்த ஒரு சோகநிகழ்வு. அதனைச் சொற்களால் வார்த்துவிட முடியாது

ஒலிக்கவில்லை. அவன் போராட்டத்தின் ஊடாகவே கற்றான். போராட்டத்தை அவன் செதுக்கியபோது தானும் சேர்ந்தே சுயமாக செதுக்கப்பட்டான். அதுவே அவனை வரலாற்றின் உச்சத்துக்குக் கொண்டும் சென்றது. அவன் அதுவரை வாழ்ந்திருந்த வாழ்வுக்கும் அவன் விடுதலைப்போராட்டத்துக்கு என்று புறப்பட்டு அண்ணையிடம் வந்த பின்னர் வாழ்ந்த வாழ்வுக்கும் உள்ள வித்தியாசம் மிகமிகப் பெரியது.

நடுத்தரக் குடும்பங்களைவிட வசதியான வாழ்வு. எந்தநேரமும் இவனில் செல்லம்கொஞ்சும் பாசமுள்ள அம்மா. அன்பான மூத்த சகோதரன் என்றிருந்த குடும்பம் அவனது. சாப்பாடு கொஞ்சம் நேரம் பிந்தியதற்கே தாயுடன் கோபித்து கொள்ளும் இவனே பயிற்சிக்களத்தில் 10,20 பேருக்கு சமைத்து உணவு பரிமாறுபவனாக தானாக ஏற்று வேலை செய்யும்போதுதான் கிட்டுவின்

போராட்ட அமைப்பில் என்ன வேலை என்றாலும் அது விடுதலைக்கானதுதான் என்பதில் அவன் உறுதியாக இருந்தான். விடுதலைக்கான களவேலையில்

**நான் கிட்டுவை ஆழமாக நேசித்தேன். தம்பியாக, தளபதியாக நான் அவனை நேசித்தேன். எனது சுமைகளை தாங்கும் இலட்சியதோழனாக நான் அவனை நேசித்தேன். இது சாதாரண மனித பாசத்துக்கு அப்பாற்பட்டது. அதுவும் ஆன்மாவை உலுப்பிவிடும் ஒரு உணர்வுப்பூகம்பத்தை மனிதமொழியில் விபரிக்கமுடியாது. அவனது மறைவு எனது ஆன்மாவை பிழிந்த ஒரு சோகநிகழ்வு. அதனைவி சொற்களால் வார்த்துவிட முடியாது**

இன்ன வேலைதான் செய்வேன் என்று முடிவெடுத்து வருபவன் போராளி அல்ல என்பது கிட்டுவின் கருத்தாக இருந்தது. அதற்காக எல்லா வேலைகளையும் செய்தான் முழுமனதுடன். விடுதலைக்

அவனின் இறுதி நாள்களில் 90களின் ஆரம்பத்தில் விடுதலைக்கான அங்கீகாரத்துக்கான ஒரு பெரிய முயற்சியில் தென்அமெரிக்காவின் மெக்ஸிக்கோ நாட்டில் நின்றபோது அந்த ஊன்று கோலுடன் அலைந்து அந்த மக்களின் இசை நுணுக்கங்களையும் சித்திரங்களையும் பற்றியும் தேடவைத்தது. இந்த உணர்வுதான் அவனை எப்போதும் முன்னோக்கி சிந்திக்கவைத்தது.

1985 ஏப்ரல்மாதம் யாழ் காவல்நிலையம் மீதான தாக்குதலை கிட்டு தலைமையேற்று நடத்தி முடித்த கையோடு அதன்பின் வந்த நாள்களில் யாழ். மண்ணில் சிங்களபடைகளின் குறுக்கும் நெடுக்குமான ரோந்துகள் இல்லாமல் போனது. இராணுவம் முகாம்களுக்குள் முடங்கிபோனது. மீட்கப்பட்ட முதல் தமிழ் மண்ணை கிட்டு தமிழர் வரலாற்றில் காட்டினான். இந்த நிகழ்வானது மிகப் பெரும் அளவில் விடுதலைப்போராளிகளுக்கு மன உறுதியையும் தமிழ் மக்களுக்கு விடுதலைப்போராட்டத்தின்மீது உரம்மிக்க நம்பிக்கையையும் கொடுத்தது. மிகமிகக் குறைந்த அளவிலான போராளிகளையும் குறைந்த சூட்டுதிறன்கொண்ட ஆயுதங்களையும் வைத்துக்கொண்டு இதனைச் சாதித்ததில் கிட்டு என்ற தளபதியின் பங்கு பெரியது. யாழ்.மாவட்டத்தில் அமைந்திருந்த சிங்கள முகாம்களில் இருந்து தினமும் வெளியேற முயற்சித்த படையினரை மறித்து திரும்ப அனுப்பும் களத்தில் எங்கெங்கும் கிட்டு நின்றதானது போராளிகளுக்கு பலமடங்கு வீரியத்தை தந்தது.

யாழ்.மண் விடுதலைப்போராளிகள் வசம் வந்த பின்னும் கிட்டு திருப்தி கொள்ளவில்லை. எந்த இராணுவ வெற்றியையும் அரசியல் ஆக்குவதன் மூலமே எமது மக்களுக்கான விழிப்புணர்வைக் கொண்டுவரலாம் என்பதால் இராணுவ ரோந்துகள் இல்லாத யாழ். மண்ணில் மக்கள் நீதி மன்றங்களையும், இணக்க சபைகளையும், சுயதொழில் ஊக்குவிப்பு களையும் இன்னும் பல கட்டமைப்பு களை நிறுவினான். அரசியல் வகுப்புகளையும், தெருநாடகங்களையும் நடத்தி எமது மக்களுக்குள் விடுதலைக் கனலை ஏற்றுவதில் முன்னின்று உழைத்தவன் அவன். யாழ். மாவட்டத்தில் முகாம்களுக்குள் இராணுவம் அடைபட்டதை வைத்தே ஒரு பெரிய ராஜதந்திர நகர்வையும் விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு பெருமிதமான பார்வையையும் கொடுப்பதற்காக அருணாவையும் காமினியையும் மீட்டு சிங்களதேசத்துடன் ஒரு கைதிகள் பரிமாற்றத்தை அழகாகச் செய்துகாட்டிய ராஜதந்திரமேதை கிட்டு. எல்லா ஆளுமைகளும் அவனுக்குள் ஒரே இரவில் வந்து குடியேறியவை அல்ல. அவன் அதற்காக நடத்திய தேடல்கள் மிக அதிகம். அதனால்தான் ஒரு ஆற்றல்மிக்க போர்வீரனாக இருந்த அவனால் ஒரு வரலாற்றுத் திருப்பத்தை ஏற்படுத்திய தளபதியாகவும் மாற முடிந்தது.

(17 ஆம் பக்கம் பார்க்க)

# கிட்டு: தளராத துணிவேறிய வேங்கை



1993ம் ஆண்டு ஜனவரி 16 ஆம்நாள் வங்கக்கடலில் கேணல் கிட்டு வீரகாவியமானபோது புலிகளின் தலைவர் பிரபாகரனால் விடுக்கப்பட்ட செய்தியில். இருந்த மிகமுக்கியமான வாக்கியங்கள் தான் மேலே உள்ளவை. தலைவர் சொல்லி இருப்பதுபோல கிட்டுவின் வரலாறு என்பது சொற்களால் வார்த்து முழுமையாக வெளிக்காட்டிவிடக் கூடியது அல்ல. புலிகளின் தலைவரின் ஆன்மாவையே பிழிந்ததாக கிட்டுவின் இழப்பு இருந்திருக்கிறது என்றால் அவருக்குள் எவ்வளவு தூரம் ஆழமாக அவ்ன் பதியம் போட்டு இருந்திருக்கிறான். மனிதமொழியில் கூறப்பட்டிருந்த உறவுமுறைக்கெல்லாம் அப்பாற்பட்டதான அந்த உறவு எப்படி பிணைந்தது? இன்றும்கூட தாண்டிசெல்லவும், இட்டு நிரப்பவும் முடியாத பெரும் இடைவெளியாகவே கிட்டுவின் இடம் இருக்கின்றது. ஒரு இனத்தின் விடுதலைக்கான களப்பயணத்தில் கிட்டு வகித்த காலத்தின் பதிவு பாத்திரம் எத்தகையது என்று பார்க்கும்போதுதான் கிட்டுவின் வரலாறு வியப்புடன் விரிகிறது.

அவனது வரலாறுமுழுதும் ஆளுமையின்வீச்சும்.அற்புதமான அறிவுத்தேடலும்.மண்டியிடாத வீரமும்.கட்டுக்குலையாத உறுதியும் நிறைந்தே இருக்கின்றது. போராட்டத்துக்காக அவன் வந்தபோது இத்தனை ஆளுமை நிறைந்தவனாகவோ இத்தனை அற்புதங்கள் நிகழ்த்தக்கூடியவனாக இருந்தான்

விடுதலைக்காக எதையும் எந்த வேலையையும் செய்யத் தயங்காத குணம் தெரிந்தது. விடுதலைப்புலிகளின் முதலாவது ஒழுங்குபடுத்தப்பட்ட பயிற்சிமுகாம் 1979 இல் மாங்குளம் பண்ணையில் தலைவரின் நேரடிக் கண்காணிப்பில் ஆரம்பமானபோது யார் சமையல் என்ற தலைவரின் கேள்விக்கு பதிலாக தானே முன்வந்து அந்த வேலையைச் செய்ய ஆரம்பித்தில் இருந்து இறுதி நேரத்தில் வங்கக்கடலில் நின்றதுவரை கிட்டு எந்த வேலையையும் விடுதலைக்காகச் செய்வதில் பின்னின்றது இல்லை. 79 இல் மட்டும் அல்லாமல் 1983 இலும் இவனே பயிற்சிமுகாம் சமையல். 83 இல் கிட்டு புலிகள்அமைப்பின் ஒரு முக்கிய உறுப்பினன். தலைவருக்கு அடுத்த வரிசையில் ஐந்து பேரில் ஒருவனாக இருந்தவன். அப்படி இருந்தும் 1983 இல் புதியவர்களான பொட்டு, விக்ரர், லிங்கம் போன்றவர்களுக்கான பயிற்சி முகாமில் யார் சமைப்பது என்ற கேள்விக்கும் தானே முன்வந்து சமையல்பகுதியின் பொறுப்பை ஏற்றான். பயிற்சிக்கு வந்த புதிய உறுப்பினர்களுக்கு அதிர்ச்சியாக இருந்தது. அங்கு கிட்டு சமையல் வேலையில் நின்றதை பார்க்க. அவர்கள் அந்தப் பயிற்சியில் கற்ற எல்லாவற்றையும் விட கிட்டுவைப் பார்த்துக் கற்றுக் கொண்டது விடுதலைக்காக என்ன வேலை என்றாலும் அதை முழுமனதுடன் செய்யவேண்டும் என்பதாகும்.

காக என்னவெல்லாம் செய்யமுடியுமோ அவ்வளவற்றையும் தனது வாழ்நாள் முழுதும் தேடித்தேடிச் செய்து கொண்டே இருந்தவன் கிட்டு. 81, 82களில் தலைவருடன்போய் தமிழகத்தில் நிற்கவேண்டிய ஒரு தேவை ஒன்று ஏற்பட்டபோது அதற்கும் போனான். அங்கும்போய் சும்மா நிற்காமல் அந்த நாள்களையும் விடுதலைக்கான ஏதாவது ஒன்றுக்கு பயன்செய்ய விரும்பினான். என்றாவது ஒருநாள் விடுதலைப் போராட்டம் வளர்ச்சி அடையும்போது அதற்கு தேவையான புகைப்பட நுணுக்கங்களையும், புதிய வர்ண அச்சு முறையாக அப்போது இருந்த லித்தோ அச்சுமுறையையும் தலைவரின் அனுமதியுடன் மதுரையில் படித்தான். அடுத்தவேளை சாப்பாட்டுக்கே சிரமமான அந்த மதுரை நாள்களில் இதனைப் படிக்கவேண்டும் என்றும் அதனை விடுதலைப்போராட்டத்துக்கு என்றாவது ஒருநாள் பாவிக்க முடியும் என்றும் இவன் சிந்தித்தது இன்றும் அதிசயமாகவே இருக்கிறது. இந்தத் தேடலும், விடுதலையை பெற்றுவிடுவதற்கு தேவையான அனைத்தையும் தேடித் தேடி எமது இனத்துக்கு பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற துடிப்பும்தான் கிட்டுவின் மிகப்பெரிய வேலையாக காலங்காலமாக இருந்திருக்கிறது. இந்த தேடலானது அவன் அமைப்பில் இணைந்த 1979 இல் மாங்குளம் பண்ணையில் பழைய 38 ரவை களுக்கு மீள்பாவிப்புக்கு மருந்திடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருப்பு மூட்டிய இலியானா




இடுப்பழகி என்று சொன்னாலே நினைவுக்கு வருபவர் இலியானாதான். அவர் ' செக்ஸ் வைத்துக் கொண்டால், நம் உடம்பு நல்ல ஆரோக்கியமாக இருக்கும்' என்று ஒரு பேட்டியில் கூறிவிட, தி ரையுலகமே பதறிப்போனது. அவரது கொடும்பாவியை இந்துத்துவக் கட்சிகள் எரிக்குமளவுக்கு அந்தச் சர்ச்சை நீடித்தது. இந்த நிலையில் தனியார் தொலைக்காட்சி நேர்காணல் ஒன்றில் ' 16 வயது இருக்கும்போதே என் தந்தையுடன் செக்ஸ் பற்றி பேசியுள்ளேன்' என்று நெருப்பை பற்ற வைத்துள்ளார் இலியானா. இதனால் என்னென்ன போராட்டங்கள் வெடிக்கப்போகின்றனவோ என்று இலியானாவை வைத்துப் படமெடுக்கும் தயாரிப்பாளர்கள் கலக்கத்தில் இருக்கிறார்கள்.

சிம்பு, நடிக்கும் 'வாலு படத்தில் வரும் ஒரு பாடலில் சிம்பு, மீனா, சிம்ரன், இவர்களோடு பழம்பெரும் நடிகை சௌகார்ஜானகி ஆகிய நான்கு பேரும் சேர்ந்து நடனம் ஆடுகிறார்களாம். இந்த வித்தியாசமான முயற்சி படத்தின் முக்கிய விடயமாகப் பேசப்படும் என்று சொல்கிறார் சிம்பு.



# என்ன ஒரு ஆட்டம்

# தரையில் அனுஷ்கா

"நான் சூப்பர் ஸ்டார் ரஜினியுடன் ஜோடிசேரும் அளவுக்கு சினிமாவில் உயர்ந்துவிட்டேன். புகழ், பணம் சேர்ந்தாலும் நான் மாற மாட்டேன். கர்வம், அகங்காரம், பொறாமை இந்த மூன்றையும் எப்போதும் என்னுடன் சேர்த்ததே இல்லை.



எனக்கு தலைக்கனம் வரவில்லை. சினிமாவில் நான் சிறந்த நடனக்காரி இல்லை.

'பிரமாதமான நடிகையும் இல்லை. ஆனாலும் கமரா முன்னால் நூறு சதவிகித உழைப்பைக் கொடுக்க வேண்டும் என்ற உத்வேகத்தில் உழைக்கிறேன். நான் உயரத்தில் பறக்கவில்லை. என் கால்கள் தரையில் தான் இருக்கின்றன" என்று சொல்லி இருப் பவர் யார் தெரியுமா? லிங்கா படத்தில் ரஜினியோடு நடிக்கும் அனுஷ்கா தான்.



# நானும் ரவுடிதான் தொடங்கியது

தனுஷ் தயாரிப்பில் விஜய் சேதுபதி, நயன்தாரா நடிக்கும் 'நானும் ரவுடி தான்' படத்தின் படப்பிடிப்பு தொடங்கியது.

இந்த ஆண்டு தொடக்கத்தில் நடைபெற்ற விருது வழங்கும் நிகழ்ச்சியில், விஜய் சேதுபதியிடம் இங்குள்ள நடிகைகளில் 'சூது கவ்வும்' படத்தின் பின்னணி இசையில் யாரைக் கூடத்த ஆசைப்படுகிறீர்கள்? என்ற கேள்விக்கு அவர் எந்த வித யோசனையும் இல்லாமல் கூறிய பதில் நயன்தாரா.

இதனைத் தொடர்ந்து இருவரையும் ஒன்றாக இணைத்து படம் தயாரிக்க திட்டமிட்டார் தனுஷ்.

அனிருத் நாயகனாக நடிக்க, 'போடா போடி' இயக்குநர் விக்னேஷ் சிவன் இயக்கவிருந்த 'நானும் ரவுடி தான்' படத்தை விஜய் சேதுபுதி, நயன்தாரா நடிக்க, தான் தயாரிக்க இருப்பதாக தனுஷ் அறிவித்தார்.

ஜோர்ஜ் வில்லியம்ஸ் ஒளிப்பதிவு, அனிருத் இசை என படத்தின் தலைப்பு வடிவமைப்பு உள்ளிட்ட அனைத்தையுமே தனது டுவிட்டர் பக்கத்தில் அதிகாரப்பூர்வமாக தனுஷ் வெளியிட்டார். ஆனால் படப்பிடிப்பு எப்போது என்பது மட்டும் தெரியாமல் இருந்தது.

இந்தநிலையில் டிசம்பர் 3 ஆம் திகதி முதல் 'நானும் ரவுடி தான்' படத்தின் படப்பிடிப்பு சென்னையில் தொடங்கி நடைபெற்று வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுத்தப்பணியில் த்ரிஷா



பிரதமர் மோடி தொடங்கிவைத்த தூய்மை இந்தியா திட்டத்தில் டிசெம்பர் 3 ஆம் திகதி தன்னையும் இணைத்துக் கொண்டார் நடிகை த்ரிஷா.

ஸ்வச் பாரத் அல்லது தூய்மை இந்தியா என்ற பிரதமர் நரேந்திர மோடியின் புதிய விழிப்புணர்வை மக்கள் இயக்கமாக அவர் மாற்ற தீவிர முயற்சி மேற்கொண்டுள்ளார். இந்தத்திட்டத்தில் பல்வேறு திரையுலகினர் இணைந்து வருகிறார்கள்.

பிரதமர் மோடியின் அழைப்பை ஏற்று இந்தத்திட்டத்தில் தன்னுடைய பிறந்த நாளன்று தன்னை இணைத்துக் கொண்டார் கமல்ஹாசன். கடந்த புதன்கிழமை த்ரிஷாவும் இதில் தன்னை இணைத்துக் கொண்டார்.

சென்னை அருகே உள்ள முடிச்சூர் என்ற கிராமத்தில் ஒரு விலங்குகளுக்கான மையத்தில் சுகாதாரத்தை மேம்படுத்தும் பணியை சுற்றுச்சூழல் அமைப்பு ஒன்று மேற்கொண்டது. இந்த நிகழ்ச்சியில் கலந்துக் கொண்டு , தூய்மை இந்தியா திட்டத்தில் தன்னையும் இணைத்துக் கொண்டார் த்ரிஷா.

இந்த பூமி நமக்கு மட்டுமே உரியது அல்ல. இதர ஜீவன்களும் நம்முடன் வாழ வேண்டும். அவை வாழ தகுதியான சுத்தமான, சுகாதாரமான சூழ்நிலையை அமைத்து தருவது நம் பொறுப்பு என்று கூறினார் த்ரிஷா.

# பெருந் தன்மை



'ஹீட் ஹீட்' புயல் பாதித்த பகுதிகளில், நிவாரண நடவடிக்கைகளுக்கு நிதி திரட்டுவதற்காக தெலுங்குப் பட உலகினர் ஹைதராபாத்தில் ஏற்பாடு செய்த நட்சத்திர கலை விழாவில், கமல்ஹாசன் பங்கேற்றார். 'சிவாஜி படத்தில் இடம்பெற்ற 'வாஜி வாஜி வாஜி என் ஜீவன் நீ சிவாஜி' பாட்டுக்கு நடனம் ஆடினார் ஸ்ரேயா. ஆந்திர திரையுலக நிகழ்வில் தமிழ் சினிமா பிரபலங்கள் பங்கேற்று தங்களின் பெருந்தன்மையை வெளிப்படுத்தியுள்ளனர்.

# மீராவின் கணக்கு

**தமிழில் பார்த்தி என்ற புது நடிகருக்கு ஜோடியாக 'விஞ்ஞானி படத்தில் நடித்து சினிமா உலகில் மீள்பிரவேசம் கொடுத்த மீரா ஜஸ்மின் அடுத்து மலையாளத்தில் 'இதினும் அப்புறம்' என்ற படத்தில் வில்லன் நடிகர் ரியாஸ் கானுக்கு ஜோடியாக நடிக்கிறார். இந்தப்படத்தின் மூலம் மீண்டும் திரையுலகில் முன்னணி இடத்துக்கு உயரலாம் என மீரா ஜஸ்மின் கணக்குப் போடுகிறாராம்.**

# சவால்

'மெட்ராஸ் பட நாயகி கேத்தரீன், இப்போது அனுஷ்கா நடித்துவரும் 'ருத்ரம்மாதேவி படத்தில் முக்கியமான கதாபாத்திரத்தில் நடிக்கிறார். படத்தில் இருவரும் சேர்ந்து நடனமாடுவது போன்ற காட்சி. ஒவ்வொரு அசைவுக்கும் தான் நன்றாக ஆடியிருக்கிறேனா என்று கேட்ட அனுஷ்கா எடுத்த காட்சியை திரையில் பார்த்து திருப்தியான பிறகுதான் அடுத்த காட்சிக்கு செல்லும் அளவுக்கு நடனத்தில் 'கடும் சவால் கொடுத்தாராம் கேத்தரீன். அவ்வளவுக்கு நடனத்தில் அனுஷ்காவுக்கு சவால் கொடுத்திருக்கிறார் கேத்தரீன்.



# நியாயமா?



**ஆர்யா, சந்தானம், தமன்னா நடிக்க எம். ராஜேஷ் இயக்கும் படத்துக்கு 'வாசுவும் சிவாவும் ஒன்னா படிச்சவங்க என்று பெயர் வைத்துள்ளார்கள். 'ஆல் இன் ஆல் அழகுராஜா' படத்தில் சந்தானம் புகை பிடிப்பது போன்ற காட்சிகள் இடம் பெற்று சர்ச்சை எழுந்த நிலையில் இந்தப் படத்தில் புகை பிடிக்கும் காட்சி இருக்காது என்கிறார் ராஜேஷ். ஆனால் படத்தின் தலைப்பை சுருக்கமாகச் சொன்னால் வி.எஸ்.ஓ.பி. என்ற மதுபானத்தை நினைவூட்டுகின்றதே. இது மட்டும் நியாயமா ராஜேஷ்?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பள்ளிக் கூடம் போகலாமா?

பள்ளிக் கூடம் போகலாமே
சின்ன பாப்பா -நிறைய
பிள்ளைக ளோட பழகலாமே
சின்ன பாப்பா!

ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம்
சின்ன பாப்பா -கல்வித்
தோட்டம் அந்த பள்ளிக் கூடம்
சின்ன பாப்பா!

பள்ளிக் கூடம் திறந்தாச்சு
சின்ன பாப்பா -உனக்கு
நல்ல நேரம் பிறந்தாச்சு
சின்ன பாப்பா!

வீட்டுச் செய்தி கதைகள் பேசி
பொழுது போக்கலாம் -அட
ஏட்டுக் கல்வி பாடம் கூட
எழுதிப் பார்க்கலாம்!

உடலும் மனமும் வளர்வதற்கு
சின்ன பாப்பா -ஏற்ற
இடமே இந்தப் பள்ளிக் கூடம்
சின்ன பாப்பா!

பள்ளிக் கூடம் போகலாம் வா
சின்ன பாப்பா -நிறைய
பிள்ளைக ளோட பழகலாம் வா
சின்ன பாப்பா!

## காகமும் மதனியும்



கா... கா.... என்று கத்திக்கொண்டு அந்தக் காகம் பறந்து வந்தது. அருகிலுள்ள மரக் கிளையில் அமர்ந்தது. மதனி அந்தக் காகத்தைப் பிடிக்க ஓடினாள். உடனே அது பறந்தது. மதனி திரும்பி வந்தாள் அந்தக் காகம் மீண்டும் அங்கு வந்து நடந்தது. மதனி தான் தின்று கொண்டிருந்த வடையைப் பிய்த்துக் காகத்துக்குப் போட்டாள் காகம் வேகமாக ஓடி வந்தது. வடையைக் கொத்திக் கொண்டு பறந்தோடியது. மதனிக்கு அந்தக் காகத்தைப் பிடிக்க வேண்டும் என்ற ஆசை எழுந்தது. வெகுநேரம் காத்திருந்தாள். அந்தக் காகம் மீண்டும் வரவேயில்லை. இரண்டாம் நாள் அந்த இடத்துக்கு, அதே நேரத்துக்கு அந்தக் காகம் வந்தது. அங்கும் இங்கும் நடந்தது. இன்று அந்தக் காகம் கைக்கு எட்டும் தொலைவுக்குள் நடந்து வந்தது. மதனி தன்னிடம் இருந்த நிலக்கடலையை காகத்தின் முன் வீசினாள். காகம் தலையைச் சாய்த்துச் சாய்த்துப் பார்த்துக் கொண்டே ஒவ்வொரு கடலையாகக் கொத்தித் தின்றது. மதனி அருகில் சென்றதும் உடனே பறந்தோடியது. மூன்றாம் நாளும் அந்தக் காகம் அந்த இடத்துக்கு, அதே நேரத்துக்கு வந்தது. இன்று அச்சப்படாமல் காகம் மதியின் அருகில் வந்தது. மதனியின் கையை ஆவலோடு பார்த்தது. மதனி வீட்டுக்குள் சென்று அரிசியை எடுத்து வந்து போட்டாள். காகம் பொறுமையாக ஒவ்வொரு அரிசியாகப் பொறுக்கித் தின்றது. மதனி காகத்தைப் பிடிக்க எழுந்தாள். காகம் பறந்தோடியது. ஒவ்வொரு நாளும் காகம் சரியான நேரத்துக்கு வந்தது. மதனியும் காகமும் நண்பர்களானார்கள். மதனி சொல்லுவதைக் கேட்டுக் காகம் புரிந்து கொண்டது போலத் தலையை ஆட்டும். சரியான நேரத்துக்கு வரும் காகத்தைக் கண்டு மதனி வியந்தாள். காகத்தால் எப்படி முடிகிறது? மணிக்கூடு இல்லை, பேசத் தெரியாத, எழுதத் தெரியாத, ஆனால் சரியான நேரத்துக்கு அந்தக் காகம் எப்படி வந்து போகிறது. மதனி வியந்தாள். தனது நண்பனான காகத்தைப் போல, தானும் சரியான நேரத்துக்குப் பள்ளிக்குச் செல்வது, அனைத்து வேலைகளையும் சரியான நேரத்தில் தொடங்குவது என முடிவு எடுத்துக் கொண்டாள். சரியான நேரத்துக்குப் பள்ளிக்கு வந்து அனைத்தையும் முறையாகச் செய்யும் மதனியை அனைவரும் பாராட்டினார்கள்.

## வெள்ளரிக்காய்




01. நாவறட்சியை விரட்டுவ
தோடு பசியையும் உண்டாக்கும்
உடலைக் குளிர வைக்கும்
03. இரத்தத்தில் சிவ
பணுக்களை உருவாக்குப்
பொட்டாசியம் மிகுதியா
இருக்கும்.
04. ஈரல், கல்லீரல் இவற்றில்
சூட்டைத் தணிக்கும் இந்த
பாகங்களில் ஏற்படும் நோய்
தணியும்.
05. வெள்ளரிக்காயை உண்
ணுகையில் பசிரசம் என்னுப்
விசேஷ ஜீரண நீர் சுரக்கிறது
இதனால் செரிமானம் தீவி
மாகும். பசி அதிகரிக்கும்.
06. மலத்தைக் கட்டுப்படுத்துப்
பித்தத்தைக் குறைக்கும்.
07. சிறுநீரகக் கோளாறுகளை
சரி செய்கிறது. எரிச்சலை
கட்டுப்படுத்துகிறது.




## மஹாத்மா காந்தி சொன்னவை

- எத்தனை குழப்பங்கள் இருந்தாலும் உண்மையை பேசும் மன உறுதி வேண்டும். பொய் நிலைத் திருக்கமுடியாது உண்மை என்றாவது ஒருநாள் வெளிப்பட்டே தீரும்.
- உனக்கு நீயே நீதிபதியாக இருக்க கற்றுக்கொள். தனக்கு தானே நல்லவனாக வாழ்வதில் தான் உண்மையான மகிழ்ச்சி உள்ளது.
- புகழ், இகழ் இந்த இரண்டிலிருந்தும் யாராலும் தப்ப முடியாது. கடமையை மிகச்சரியாக செய்பவர்கள் புகழ் வந்தாலும், இகழ் வந்தாலும் இரண்டையும் ஒன்றுபோல ஏற்றுகொள்ளும் மனப் பக்குவத்தை பெறுகின்றனர்.
- சத்தியத்தை தெய்வமாகக் கருதி வணங்குவதே சிறந்த மார்க்கமாகும்.
- மனிதன் வேறு அவனது செயல் வேறு . நற்செயலை புகழ்வோம், தீய செயல்களை இகழ்வோம். ஆனால் செய்தவன் நல்லவனாக இருந்தால் மதிப்பளிப் போம். தீயவனானால் இரக்கம் காட்டுவோம்



## புதுமைத் தகவல்கள்

© பறவை இனங்களில் ஆந்தையின் முட்டை மாத்திரமே உருண்டை வடிவில் இருக்கும்.
© இரவு வேளைகளிலும் ஒக்சிசனை வெளிப்படுத்தும் தாவரங்கள் துளசியும் அரசமரமும் தான்.
© இலங்கையில் முதன்முதலாக உற்பத்தி செய்யப்பட்டு 2003 நவம்பரில் மோட்டார் வாகன ஆணையாளர் திணைக்களத்தில் பதிவாகி விற்பனைக்கு வந்த கார் மைக்கரோ ஆகும்.
© முதலையில் அடி வயிற்றுப் பகுதி தோலில் புல்லட் புரூவ் உடை தயாரிக்கிறார்களாம்.
© உலகில் அதிக எண்ணிக்கையில் முஸ்லிம்கள் உள்ள நாடு இந்தோனேசியா.
© பல பாடல்களைப் படைத்த பாரதியார் தாலாட்டுப் பாடல்களைப் பாடவே இல்லை.

## கண்டுபிடியுங்கள்

இந்த இரு படங்களுக்கு மிடையே 05 வித்தியா சங்கள் உள்ளன. கண்டு பிடியுங்கள்







**ஒருவன்:-** ஏன் சோகமாக இருக்கிறீங்கள்.
**மற்றவன்:-** நான் செல்லமாக வளர்த்த நாய் காணாமல் போய் விட்டது.
**ஒருவன்:-** பத்திரிகையில் விளம்பரம் கொடுக்க வேண்டி யது தானே?
**மற்றவன்:-** கொடுக்கலாம். ஆனால் என் நாய்க்கு எழதப்படிக்கத் தெரியாதே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- புலனாய்வி

# பிணத்தோடு வல்லுறவு 3

## பல்கலை மாணவியைக் கொன்ற காமுகன்



(கடந்த வாரத் தொடர்ச்சி)

சேர். அந்த நாள்களில் நான் எலஹெர பிரதேசத்தில் இருந்தேன். இதற்கு முன்னரும் நான் உங்களுக்கு அதனை கூறினேன். தானே ஏன் மீண்டும் மீண்டும் கேட் கின்றீர்கள் என டென்சில் தன்னை நியாயப்படுத்த முயற்சித்தான்.

இந்த நிலையில் டென்சிலை டீ.என்.ஏ. மற்றும் எலஹெர, வராப்பிட்டிய பிரதேச வாசிகளின் வாக்கு மூலங்களுக்கு அமையவும் கைது செய்த புலனாய்வு பிரிவு கொழும்பில் உள்ள தலைமையகத்துக்கு மேலதிக விசாரணைகளுக்காக அழைத்து வந்தது. தலைமையகத்தில் நடந்த நீண்ட நேர விசாரிப்பில் டென்சிலால் உண்மையை மறைக்க முடியவில்லை. ஆம் சேர் அந்த கொலை என் கையாலேயே நிகழ்ந்தது. எனினும் எனக்கு அவளை கொல்ல வேண்டியிருக்கவில்லை. மயக்கமடைய வைக்க வேண்டிய தேவை மட்டுமே இருந்தது என இழுக்கும் போதே புலனாய்வுப் பிரிவினர் அடுத்த கேள்வியை தொடுத்தனர்.

8 கிலோ நிறையுடைய இரும்புக் கட்டையால் அடித்ததால் இறப்பார் என தெரியாதா..? என புலனாய்வு விசாரணை அதிகாரி வினவியுள்ளார். இல்லை சேர் நான் அவ்வளவு பலமாக அடிக்கவில்லை. அவள் கத்தாமல் இருக்கும் நிலையை அடையவே அடித்தேன் என கூறியவாறே நடந்ததை கிளிப் பிள்ளையாக ஒப்புவித்தான்.

சேர். அந்த கல்யாண வீடு தொடர்பில் நான் அவதானமாக இருந்தேன். எனக்கு தெரிந்த வகையில் கல்யாண வீட்டில் பெறுமதியான பொருட்கள் இருக்கும். இரவில் அனைவரும் குடித்து விட்டு தூங்கி விடுவர். அதன்பின்னர் அதனை திருடுவதே எனது நோக்கமாக இருந்தது. நான் அந்த வீட்டினுள் நுழையும் போது அதிகாலை ஒரு மணி இருக்கும். வீட்டுக்கதவை எப்படி திறப்பது என சிந்தித்துக்கொண்டே கதவை தள்ளிய போது அது தானாகவே திறந்து கொண்டது. கதவு திறந்தே இருந்ததால் நான் மெதுவாக வீட்டுக்குள் புகுந்தேன். ஒரு அறையில் இரவு நேர விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அந்த அறையில் சிறு குழந்தை ஒன்று உறங்குவது தெரிந்தது. அந்த அறையின் வெளிச்சம் பிரதான அறைக்கும் விழுந்தது. அப்போது பிரதான அறையில் சிறிய மேசையில் (ரீப்போ) தொலைபேசி ஒன்று இருப்பதை கண்டேன். அந்த போனை நான் எடுத்துக்கொண்டு அதன் ஒளியில் வீடு முழுக்க பெறுமதியான பொருட்களை தேடினேன்.

அதன்போது புதுமண தம்பதியின் அறைக்கும் சென்றேன். அறை கதவு திறந்தே இருந்தது. அந்த அறைக்குள் நுழைந்து மணமகளின் கைப்பையை எடுத்துக்கொண்டு வீட்டுக்கு வெளியே வந்தேன். தொலைபேசி வெளிச்சத்தில் அந்த கைப்பையை சோதனை செய்ததில் 3000 ரூபா கிடைத்தது. அதனை எனது சட்டைப்பையில் போட்டுக்கொண்டு மீண்டும் வீட்டுக்குள் போய் கைப்பையை இருந்த இடத்திலேயே வைத்தேன். அதனை வைத்து விட்டு மேலும் பெறுமதியான பொருட்களை தேடினேன். இதன்போதுதான் அந்த யுவதி இருந்த அறைக்குள் போனேன். அந்த அறையில் ஓர் ஓரமாக உள்ள கட்டிலில் அம்மாவும் நடுவில் இருந்த கட்டிலில் அந்த யுவதியும் உறங்கிக்கொண்டிருந்தார்கள்.

அந்த அறையின் மேல் கூரையின் கண்ணாடி வழியே வீட்டினுள் விழுந்த நிலா வெளிச்சத்தில் அவளை நான் தெளிவாகப் பார்த்தேன். நிலா ஒளியில் அந்த யுவதி எனக்கு தேவதையாக தெரிந்தாள். அவள் உறங்கும் அழகில் நான் வந்த வேலையையே மறந்தேன். அந்த யுவதியை அடைய வேண்டும் என அடி மனது சொன்னது. அப்புறம் அவளை மயக்கமுற செய்து இச்சையை தீர்க்கலாம் என தீர்மானித்தேன். ஏனெனில் அவள் கூச்சல் இட்டால் நான் மாட்டிக்கொள்வேன் என்ற பயத்தினாலேயே அவ்வாறு தீர்மானித்தேன். மயக்கமுற செய்ய வழி தேடிக் கொண்டிருந்த போதுதான் வீட்டின் வராந்தாவில் இரும்பு கட்டையை கண்டேன். அது கல்யாணத்தில் கூடாரம் அடிக்க கொண்டு வரப்பட்டதாக இருக்க வேண்டும்.

அதனால் யுவதியின் தலையில் மெதுவாக அடித்தேன். அவள் முனங்கியவாறே மறுபக்கம் புரண்டாள். நான் பயந்து ஒதுங்கி அவதானித்தேன். அவளின் அந்த முனங்கலின் பின் எந்த சத்தத்தையும் காணவில்லை. அதனால் தைரியமடைந்தேன். பின்னர் அவளை கட்டியணைத்து தோளில் போட்டுக்கொண்டேன். அறையிலிருந்து வெளியேறி பிரதான வாயிலினால் வெளியே செல்ல முனைந்தேன். அப்போது அவளின் கை கதவில் பட்டு பாரிய சத்தம் கேட்டது.

அந்த சத்தத்தில் வீட்டார் எழும்பி விட்டனர் என நினைத்து அங்கேயே நான் நின்று விட்டேன். எனினும் எவரும் விழித்துக்கொள்ளவில்லை. பின்னர் அவளை அணைத்தவாறே சுமந்து கொண்டு தோட்டத்தின் கீழ் பகுதிக்கு சென்றேன். கீழிறங்கும் போது கால் வழுக்கியது. அதனால் அங்கிருந்த ஓடைக்குள் யுவதியுடன் விழுந்தேன். ஒருவாறு கஷ்டப்பட்டு அந்த யுவதியையும் தோளில் சுமந்து கொண்டு ஓடை நீரிலிருந்து விடுபட்டு கரை ஏறினேன்.

பின்னர் அதன் அருகிலுள்ள காட்டின் மரத்தின் அடியில் யுவதியை கொண்டு போய் சாய்த்தேன். அவள் உடைகளை களைந்தேன். எனது வேலையை முடித்தேன். அப்படியே விட்டுவிட்டு சென்றேன். அவள் இறந்து விட்டது எனக்கு மறுநாளேயே தெரிந்தது. எதுவும் தெரியாதது போல் இருந்தேன் என டென்சில் புலனாய்வு பிரிவினருக்கு ஒப்புதல் வாக்கு மூலம் அளித்துள்ளான்.

இதனையடுத்து கடந்த நவம்பர் 10ஆம் திகதி சந்தேக நபரை கொழும்பு பிரதான நீதிவான் கிஹான் பலப்பிட்டிய முன்னிலையில் புலனாய்வு பிரிவினர் ஆஜர்படுத்தினர். நீதிவான் கிஹான் பலப்பிட்டியவின் உத்தரவுக்கமைய மறுநாள் 11ஆம் திகதி மாத்தளை மேலதிக நீதிவான் சிறில் விமலசேன முன்னிலையில் சந்தேக நபர் ஆஜர்ப்படுத்தப்பட்டு எதிர்வரும் 25ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். ஆறு மாதங்கள் நீடித்த நதீசா கொலையின் மர்ம முடிச்சுகள் அவிழ்ந்துள்ளன.

(முற்றும்)




(08 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முதன்முறையாக நான் பார்த்த படம் ஒரு ஞாயிற்றுக் கிழமை மாலை ஒளிபரப் பான வேதம் புதிது. தொடர்ந்து நாயகன், தளபதி, மகாநதி, குணா, ரோஜா, பம்பாய், இந்திரா, சிவப்பு ரோஜாக்கள், உதிரிப் பூக்கள் படங்களெல்லாம் நான் தூர்தர்ஷனில்தான் முதன்முறை பார்த்தேன். ஞாயிறு மதியங்களில் விருது பெற்ற படங்கள் ஒளிபரப்புவார்கள். அவ்வப்போது தமிழ்ப்படங்களும் பார்க்கலாம். ஒருமுறை ஏதோ ஒரு படம் இசை ஏ.ஆர். ரஹ்மான் என்று தெரிந்தது. அதனாலேயே பார்த்துக் கொண்டிருந் தேன். மிக மெதுவாக நகரும் அந்தப்படத்தில் விஜயகுமாரை மட்டும் தெரிந்தது. இடைவேளையின்போது அது பாரதிராஜாவின் அந்திமந்தாரை எனத்தெரிந்தது. அப்போதுதான் கேள்விப்பட்டேன். அதுபோல ஒரு மதியக் காட்சியில்தான் கருத்தம்மா முதன்முதலாகப் பார்த்தேன்.

இரண்டாயிரத்தில் யாழ்ப்பாணத்தில் ஸ்ரார் மூவிஸ் சிலகாலம் மிகப்பிரபலமாக இருந்தது. ராம்போ, ரொக்கி படங்கள், டெர்மினேட்டர் 22 எல்லாம் எத்தனை முறை ஒளிபரப்பினார்கள் என்று அவர்களுக்கே தெரிந்திருக்காது. மிலேனியம் பிறக்கும்போது தொடர்ந்து டைட்டானிக் ஏழெட்டுத் தடவைகளுக்கு மேலாக! ஸ்ரார் மூவிஸ் மோசமான படங்களை ஒளிபரப்பி, யாழ்ப்பாணத்தில் கலாசாரத்தைச் சீரழிக்கும் நடவடிக்கையில் ஈடுபடுகிறது என்று காவலர்கள், பத்திரிகைகள் அவ்வப்போது பொங்குவது வழக்கம். அப்படியென்ன மோசமான படங்கள் என்று கண்விழித்துப் பார்த்து ஏமாந்துபோன நண்பர்கள் ஏராளம். டைட்டானிக்கையே அவர்கள் தணிக்கை செய்துதான் ஒளிபரப்பினார்கள்.

சமாதான உடன்படிக்கையுடன் ஏ -9 வீதி திறக்கப்பட்டபோது சக்தி ரீவி யாழ்ப்பாணத்துக்கு அறிமுகமாகிறது. அதற்கு ஒருவருடம் முன்னரே சன்ரீவியை யாரோ பரீட்சார்த்தமாக ஒளிபரப்பினார்கள் என்று நினைவு. பின்னர் கேபிள் தொலைக்காட்சிகள் வருகையுடன் தூர்தர்ஷன் முற்றாக மறக்கப்பட்டது.

இப்போதெல்லாம் தொலைக்காட்சி பார்க்கும் வழக்கமே என்னிடம் இல்லாமப் போய்விட்டது. இணையமே எல்லாவற்றுக்கும் என்றாகிவிட்டது. சினிமா பார்ப்பதற்கும் கணினி மட்டுமே பாவிப்பதால் ரீவி தேவையில்லாமல் போய்விட்டது. உலக நடப்பைத் தெரிந்து கொள்ள ஃபேஸ்புக் போதும் என ஒரு நம்பிக்கை. இப்போதெல்லாம் சமயங்களில் ஃபேஸ்புக் இல்லாமல் வாழவே முடியாது என்பதைப் போல நானும், சக நண்பர்களும் நடந்துகொள்வதைப் பார்க்கும்போது, ஒரு காலத்தில் ரீவி இல்லாமல் வாழவே முடியாது என்று நம்பியது நினைவுக்கு வருகிறது. ரீவி என்றதுமே தூர்தர்ஷனை மறக்க முடியவில்லை. அது நாம் கடந்துவந்த வாழ்க்கையின் ஒரு அடையாளம். இப்போது யாழ்ப்பாணத்தில் யாராவது பார்க்கிறார்களா?!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியில வந்தால் 'அவுட்'

● **எதிரி**



இலங்கை தீவு அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் எதிர்கொள்ளவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் அடுத்தடுத்து பல திருப்பங்கள் நிகழ்ந்தபடியே உள்ளன. சிலவாரங்களுக்கு முன்னர் வரை இலங்கைஅரசியலில்யாராலும் வெல்லப் பட முடியாத, தனிக் காட்டு ராஜாவாக இருந்த ராஜபக் ஷவின் வெற்றி மெல்ல மெல்லக் கேள்விக்குறியாகிக் கொண்டு வருகின்றது. மஹிந்தவின் குடும்ப அரசியல் சதுரங்க அரங்கிலிருந்து வெளியேறிய மைத்திரிபால சிறிசேன, எதிரணியின் பொது வேட்பாளராக களமிறங்கியுள்ளதனால் பலவீன மாக இருந்த எதிர் கட்சிகளின் நிலையில் மாற்றமடைந்து அரசியல் சமநிலை தோன்றியிருக்கின்றது.

இதைவிட ஆளும்கட்சியிலிருந்த இன்னும் சில அமைச்சர்களும், பிரதி அமைச்சர்களும் எதிர்வரும் நாள் களில் கட்சி தாவக் காத்திருப் பதாக எதிர்க்கட்சியினரும், அதே போன்று எதிர் கட்சியிலிருந்தும் அரசதரப்புக்குப் பாய்வதற்கும் சில நாடாளு மன்ற உறுப்பினர்கள் வேட்டியை மடித்துக் கட்டிக்கொண்டு தயாராக உள்ளதாக ஆளுங்கட்சியினரும் சொல்லி வருகின்றனர்.

மஹிந்த ராஜபக்ஷ ஓர் இரும்பு சங் கிலி வலையமைப்புக் கொண்ட அரசை யே இதுவரைகாலமும் நடத்தினார். இந்த வலையில் இனியும் சிக்கிச் சீரழியமுடியாது என்ற நிலையிலேயே இன்று மஹிந்த அரசில் முக்கிய பங்கு வகித்த அமைச்சர்கள், பிரதி அமைச் சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவிகளைத் தூக்கி எறிந்துவிட்டு எதிரணியுடன் இணைந்து நின்று மஹிந்தரின் குடும்ப அரசியலை ஒழிக்க களத்தில் நேரடியாகவே குதித்து விட்டனர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராகவும், சுகாதார அமைச்சருமாக அந்த கட்சியில் முக்கிய பங்கினை வகித்தவர் மைத்திரி. ஆனால் இன்று அவரே அந்தக் கட்சியை தூக்கி எறிந்து விட்டு வெளியேறியுள்ளார். இதற்கு ஜனாதிபதி வேட்பாளராக அவர் அறிவிக்கப்பட்டது தான் காரணம் எனப் பல தரப்பட்டவர் கள் விமர்சிக்கின்றனர். எனினும் ஒரு குடும்பத்தின் கையில் இந்த நாடு அகப்பட்டு ஊழல் மிகுந்த ஆட்சியில் சிக்கி த்தவிப்பதனால் அதிலிருந்து இந்த நாட்டை மீட்பதற்காக தான் அமைச்சர் பதவியைத் தூக்கி எறிந்த தாக மைத்திரி கூறியுள்ளார்.

இந்த திருப்புமுனை மிக்க கட்சித் தாவலின் போது, சேர்ந்து 5 முக்கிய அமைச்சர்களும் தமது பதவியினைத் துறந்து எதிரணியில் இணைந்துள்ளார்கள். இதன் மூலம் மஹிந்தவின் ஆட்சிக்கு முண்டு கொடுத்தவர்கள் கூட இப்போது அரசின் மீது நம்பிக்கையிழந்துள்ளார் கள் என்பதை உணரமுடிந்தது. அது மட்டுமல்லாது தாம் செய்த தவறுகளுக்கு பிராயச்சித்தம் தேடவும் அவர்கள் முன்வந்துள்ளனர்.

ஆனாலும்தமிழ்மக்களின்நலனுக்காகவே தாம் ஆளும் கட்சியுடன் இணைந்து செயற்படுவதாகக் கூறிக் கொள்ளும் ஈ.பி.டி.பி கட்சியின் செயலாளர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் தனது பதவியை தூக்கி எறிந்துவிட்டுவெளியேவரமுடியுமா? என்றுகேட்டால்பதில்இல்லைஎன்பதாகவே இருக்கும். மஹிந்த தோற்றால் கூட அவரை விட்டு டக்ளஸால்வெளியே வர முடியாத ளவுக்கு அரசின் வலையில் அவர் சிக்குண்டுள் ளார். இதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன.



புலிகளுக்கு ஆதரவு கொடுத்தார்கள் என்று கூறி அப்பாவி தமிழர்களை சுட்டு படுகொலை செய்வதிலும், கடத்துவ திலும் சிங்கள படைகளுடன் இணைந்து செயற்பட்டவர்கள் ஈ.பி.டி.பியினரே என்பது பொதுமக்களின் அசைக்க முடி யாத கருத்து. அதனையே பொது மக்கள் அண்மையில் பல்வேறு இடங்களிலும் நடைபெற்ற ஜனாதிபதி ஆணைக்குழு அமர்வுகளில் பட்டவர்த்தனமாக வெளிப்படுத்தியிருந்தனர்.

தலைநகர் கொழும்பில் நாடாளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரனைச் சுட்டுப் படுகொலை செய்தது ஈ.பி.டி.பியே என்று ஐக்கிய தேசியக் கட்சியும், மகேஸ்வர னின் மனைவி விஜயகலாவும் உறுதியாகக் கூறிவருகின்றனர். இது ஈ.பி.டி.பியின் நடத்தை என்ற ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் மட்டுமே. இது போன்று ஏராளமான படுகொலைகளுக்கு ஈ.பி.டி.பியே காரணம் என்று குற்றம் சாட்டப்படுகின்றது. இது தவிர சூளைமேட்டுப் படுகொலை ஒன்று தொடர்பாக டக்ளஸ் தேவானந்தா வுக்கு இந்திய நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் கிட்டத் தட்ட இரண்டு தசாப்தங்களாக ஈ.பி.டி.பி அமைப்புக்கு ஆயுதம், நிதி என்பவற்றையும் பாதுகாப்பையும் அரச தரப்பே வழங்கி வந்தது. எனவே இப்போது



ஈ.பி.டி.பியினரின் உடலில் ஓடுவது அரசின் குருதியே. இதையெல்லாம் கூட்டிக் கழித்துப் பார்த்தே வீணை யை உதறிவிட்டு, வெற்றிலைக்குள் ஈ.பி.டி.பியைச் சங்கமிக்கச் செய்தார் மஹிந்த. அப்படி மஹிந்த சொன்னபடி வெற்றிலைக்குள் வீணையைக் கரைக்கா விட்டால், டக்ளஸின் திருகு தாளங்களை வெளியிட்டு, அவரை மீளமுடியாத சிக்கலில் மாட்டி விடவும் மஹிந்த தயங்கி இருக்க மாட்டார். இப்போது அரசில் இருந்து வெளியேறிவர்களைப் பார்த்து 'உங்களின் தில்லு முல்லுகள் தொடர்பான 'பைல்கள்' என்னிடமுண்டு' என்று வெருட்டியதைப் போல, டக்ளஸையும் ஜனாதிபதி மிரட்டி அடக்கி வைத்திருக்கிறார் போலும். அதனால் தான் அரசில் இருந்து வெளியேறமுடியாது தவிக்கின்றார் டக்ளஸ். அதையும் மீறி வீர வசனம் பேசிக்கொண்டு வெளியேறினால் நாளை சிறைக்கம்பிகளுக்குள் வாழ்நாள் முழுதையும் கழிக்க வேண்டிய நிலை ஏற்பட்டு விடுமோ என்ற அச்சம் அமைச்சர் டக்ளஸுக்கு இருப்பது நியாயமான ஒன்று தானே.

எப்போதும் இணக்க அரசியல் மட்டுமே செய்யத் தெரிந்த டக்ளஸ், ஒருவேளை மஹிந்த தோற்றுவிட்டால் எப்படியும் மைத்திரி பக்கம் சாயவே ஓடித்திரிவார். இதற்கு தன்னுடைய முன்னைநாள் எஜமானி சந்திரிகா உதவக்கூடும் என்றும் அவர் கணக்குப் போட்டிருக்கலாம்.

ஆனால் அதற்கு ரணிலோ, பொன்சேகாவோ உடன்படுவார்களா என்பது சந்தேகமே. இருப்பினும் எதிர்க்கட்சிகளின் சூத்திரக் கயிற்றை தன் இஷ்டப்படி ஆட்டுவிப்பவர் சந்திரிகா என்பதால், டக்ளஸை தங்கள் கூட்டுக்குள் இணைக்க அவர் நினைத்துவிட்டால் அது நடந்துவிடும். இந்த நம்பிக்கையும் பொய்த்து, மஹிந்தவும் தோற்று, எதிர்க்கட்சிகளும் எட்டி உதைத்துவிட்டால், டக்ளஸினதும் அவரது கட்சியினதும் எதிர்காலம் அவ்வளவுதான். கடையை இழுத்துப் பூட்ட வேண்டியதுதான். அதனால் இந்த முறை ஜனாதிபதித் தேர்தல் மஹிந்தவின் எதிர்காலத்தை மட்டுமல்ல அமைச்சர் டக்ளஸின் எதிர்காலத்தையும் சேர்த்தே தீர்மானிக்கப் போகின்றது.

> **இந்த திருப்புமுனை மிக்க கட்சித் தாவ லின் போது, சேர்ந்து 5 முக்கிய அமைச்சர் களும் தமது பதவி யினைத் துறந்து எதிரணியில் இணைந்துள்ளார்கள். இதன் மூலம் மஹிந்தவின் ஆட்சிக்கு முண்டு கொடுத்தவர்கள் கூட இப்போது அரசின் மீது நம்பிக்கை யிழந்துள்ளார்கள் என்பதை உணர முடிந்தது**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரைதேடும் இணைய வலை

■ சூடுதண்ணி

ஊடக உலகில் மைக் கெல்லின் மரணத்தின் ரணம் ஆறுவதற்கு முன்பாகவே அடுத்த மாதமே மீண்டும் ஒரு மர்ம மரணம் நிகழ்ந்தது. இந்தமுறை அதிர்ந்தது இணைய பாதுகாப்பு வல்லுநர்களும், ஹக்கர்களும்.

எம்.ஜி.ஆரும், பி.எஸ்.வீரப் பாவும் அண்டாகா கசம், அபுகா குசம், திறந்திடு சீசேம் என்றவுடன் திறந்த குகைக்கதவு களைப் பார்த்து வாய்பிளந்த தமிழ்ச்சமூகம் இன்று மனிதக்குரல்களைக் கிரகிக்கும் மென்பொருள்கள் மூலம் தங்கள் கணினி, செல்பேசி போன்ற இலத்திரனியல் சாதனங்களை பூட்டிவைப்பது சர்வசாதரணமாகிவிட்டது.சிவாஜி திரைப்படத்தில் ரஜினி மடிக் கணினியைத் திறக்கும் உத்தி யைப் பார்த்துக் கொண்டிருக் கும் போதே குரல்கிரகிக்கும் தொழில்நுட்பத்தினைக் குறித்தான குரல்களைத் திரையரங்குக்குள் கேட்க முடிகிற அளவுக்கு தொழில்நுட் பம் முன்னேறியிருக்கிறது. இப்படிக் கற்பனைக் கதைகளில் கண்டதையும், கேட்டதையும் விஞ்சுமளவுக்கு ஹக்கிங்கில் உலகையே கலக்கிய அசத்தல் மன்ன்ன் தான் பர்னபி ஜக்.

நியுஸிலாந்தில் பிறந்து பின்பு அமெரிக்கவாசியாகிப் போன பர்னபியின் ஹக்கிங் சாதனை களுக்கு வானமே எல்லை. மற்றவர்களுக்கும் பர்னபிக்கும் இருந்த வித்தியாசம், அவர் தேர்ந்தெடுத்த களம். பொது மக்கள் தினசரி வாழ்வில் பயன் படுத்தும், அதே சமயம் முக்கிய மான இலத்திரனியல் சாதனங் களை ஹக்கிங் செய்து அவற் றில் உள்ள குறைபாடுகளை அம்பலப்படுத்தி, சம்பந்தப் பட்ட நிறுவனங்களுக்கு அவற்றை எப்படி சரி செய்வது என்று உதவி செய்து சுபம் போடுவது தான் பர்னபியின் பாணி.

2010 இல் நடந்த ஹக்கர் களின் கருத்தரங்கில் இரண்டு ஏ.டி.எம் இயந்திரங்களை மேடையில் வைத்து, அனைவ ரின் கண் முன்னே சில நிமிடங் களில் அவற்றிலிருந்து தானாகப் பணத்தினைக் கொட்ட வைத்து கிளுகிளுப்பான பீதியை கிளப் பியவர் பர்னபி. அதற்கு பர்னபி வைத்த பெயர் ஜக்பொட்டிங் (Jackpotting). பர்னபி நிரல்கள் எழுதுவதில் புலி. கணினியில் ஏதேனும் ஒரு பாதுகாப்புக் குறைபாட்டைக் கண்டால் உடனே அதனைப் பயன்படுத்தி கணினியைத் தன் கட்டுப்பாட் டுக்குள் கொண்டுவரும் தந்திரங் களைச் செய்யும் நிரல்கள் எழுது வதில் நிபுணர். அடுத்த இரண்டு வருடத்தில் பர்னபியின் அடுத்த அதிரடி வெளியீடாக வந்தது இன்சுலின் பம்ப்.


கணினித் தொழில்நுட்பம் வளர, வளரத் தங்களையும் ஒரு சேர நவீனப் படுத்திக் கொண்ட துறைகளில் மிக முக்கியமானது மருத்துவத்துறை. மருத்துவ உப கரணங்கள் அனைத்து கணினிம யமாகின. நோயாளிகள் பயன் படுத்து இன்சுலின் பம்ப், பேஸ்மேக்கர் போன்ற கருவிகள் வடமில்லா வலையமைப்பு வசதிகளோடு சந்தைப்படுத்தப் பட்டு பெரும் வரவேற்பைப் பெற்றிருந்தன. சுமார் 30 அடி தூரத்தில் இருக்கும் நோயாளி யின் இன்சுலின் பம்பினை ஹக் செய்து தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து தான் விரும்பும் கால இடைவெளி மற்றும் அள வில் இன்சுலின் மருந்தினை நோயாளியின் உடம்பில் செலுத் திக் காண்பித்து திகிலேற்படுத்தி னார் பர்னபி. அளவுக்கு மீறிய இன்சுலின் மருந்து மரணத்தினை விளைவிக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

'அடுத்து என்னத்தைச் செய்ய போறானோ?' என்று அகில உலகத்தையும் அண்ணாந்து பார்க்க வைத்து விட்டு பர்னபி செய்த அடுத்த சாதனை தான் நோயாளிகள் இதயத்துடிப்பை சீராக வைத்திருக்க உதவும் பேஸ்மேக்கர் கருவியினை ஹக் செய்து கட்டுக்குள் கொண்டு வருவது. உலகில் கொளுத்த பணபலம், அதிகார பலமிக்க பெரும்பாலான முதலைகள் பேஸ்மேக்கர்களில் தான் உயிர்வாழ்கின்றன என்பதால் இது குறித்த செய்திகளை பர்னபி வெளியிட்ட போது மிகுந்த பரபரப்பு ஏற்பட்டது.

பேஸ்மேக்கர் கருவியைக் கட்டுக்குள் கொண்டுவந்து இதயத்துடிப்பினை அதிரடியாக அதிகரித்து ஆளைத் தீர்த்துக்கட்டு வது வரை சுமார் 50 அடி தூரத் தில் இருந்து தன்னால் செய்ய முடியும் என்று அறிவித்து 2013 இல் நடக்க விருந்த சர்வதேச ஹக்கர்ஸ் கருத்தரங்கில் செயல் முறை விளக்கத்தோடு செய்து காட்டுவதாக அறிவித்து பரபரப்பினை ஏற்படுத்திய பர்னபிக்கு கருத்தரங்கில் ஒரு மணி நேரம் ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் பர்னபியை யாராலும் ஈடு செய்ய முடியாது என்று கூறி அந்த ஒரு மணி நேரத்தை பர்னபியின் நினைவஞ்சலிக்கென ஒதுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது தான் பெருஞ்சோகம்.



கருத்தரங்குக்கு மிகச் சில நாள்களுக்கு முன்பு பர்னபி தன் அடுக்குமாடிக் குடியிருப்பில் இறந்து கிடந்தார். சம்பவ தினத்தன்று காலை பர்னபியைக் காணச் சென்ற அவரது காதலி கொடுத்தத் தகவலின் பேரில் பொலிஸ் அங்கு குவிந்தது. உலகில் மிகமிக உன்னிப்பாகக் கவனிக்கப்பட்ட, வெறும் 35 வயதே ஆன பர்னபியின் மரணம் இணையச்சமூகத்தில் மிகப்பெரும் அதிர்வை ஏற்படுத்தியது. மைக்கெல் ஹோஸ்டிங்கின் மரணத்துக்கும், பர்னபியின் மரணத்துக்கும் தொடர்பு உள்ளதாக ஒரு பிரிவும், மருத்துவ உபகரணங்கள் தயாரிக்கும் தொழிலதிபர்களின் குண்டர்கள் கைங்கரியம் என்று ஒரு பிரிவும் கூறி வந்தாலும், சம்பவ இடத்துக்கு சென்ற சில மணித்துளிகளிலேயே இந்த மரணத்தில் எந்த சந்தேகமோ, சர்ச்சையோ இல்லை என்று பொலிஸ் முற்றுப்புள்ளி வைத்ததும், பர்னபியின் பிரேதப் பரிசோதனை அறிக்கை பல மாதங்களுக்குப் பின்பே வெளியிடப்பட்டதும், அதில் விபரீதமான போதை மருந்துக் கலவையினை உட்கொண்டதால் மரணம் சம்பவித்தது என்று கூறியதும் பெரிதும் சர்ச்சைக்குள்ளாக்கப்பட்டது. முக்கியமாக பிரேதப் பரிசோதனை தகவல்கள் ஏதும் இல்லாமலேயே இந்த மரணத்தில் கொலைக்கான எந்த முகாந்திரமும் இல்லை எனப் பொலிஸ் கூறியது மென்மேலும் சந்தேகங்களைக் கிளறி விட்டது. என்ன தான் சர்ச்சைகள் கிளம்பினாலும், பர்னபியின் மரணம் ஒரு போதை மருந்து விபத்தென சட்டப்படி காலாவதியாக்கப்பட்டது.



(வலை விரியும்)

## கிட்டு....

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிறந்த ஓவியனாகவும்,மிகச்சிறந்த புகைப்படம் பிடிப்பவனாகவும், ஊடகங்களை நடத்தும் தனித்திறமை மிக்கவனாகவும், மிகமிக இலகுவாகப் பயிற்சிகளில் விளக்கம் தரக்கூடிய பயிற்சியாளனாகவும் என்று அத்தனை ஆளுமைகளையும் பெற்றுக்கொள்ள முடிந்தது. அவன் விடுதலைக்காகவே இவை அனைத்தையும் செய்தான்.

ஒரு இரவில் கிட்டு வீட்டை விட்டு வெளியேறிய 1978 இல் இருந்து அவன் வீரச்சாவடைந்த 1993வரை தாயகத்தின்பரப்பு எங்கும், அதன் பின்னர் தமிழகத்திலும், இந்தியாவிலும், அதற்கு பின்னர் இங்கிலாந்திலும் அங்கிருந்து புறப்பட்டு ஐரோப்பிய நாடெங்கும் திரிந்த போதிலும் ஒரு பொழுதில் விடுதலைக்காக உலகின் இன்னொரு முனையில் மெக்சிகோவில் போய்நின்றபோதிலும் அவன் விடுதலைக்காகவே வாழ்ந்தான் போரிட்டான் அலைந்தான் கற்றான் பயிற்றுவித்தான். இறுதியில் விடுதலையின்மீது கொண்ட அதி உச்சமான விருப்பை வெளிக்காட்டவும் விடுதலைப்புலிகள் என்ற அமைப்பின் விடுதலைமீதான இலட்சிய உறுதியைச் சொல்லவும் தன்னை நெருப்புக்குள் சங்கமித்தான். என்றும் அமைதி கொள்ளாது அலைகளால் ஆர்ப்பரிக்கும் வங்கக்கடல் போலவே கிட்டுவின் நினைவுகளும் விடுதலையை விரும்பும் தமிழ் மக்கள் மத்தியில் எப்போதும் பொங்கி எழுந்தபடியேதான் இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வார

# இராசி பலன்

10.12.2014 ~16.12.2014

**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

**மேஷம்**



விடாமுயற்சியுடன் செயல்பட்டு, முன்னேற்றம் காண்பீர்கள். வருமானம் அதிகரிக்கும். சேமிக்க வாய்ப்புண்டு. உறவினர் ஒத்துழைப்போடு சுபநிகழ்ச்சி நடந்தேறும். அலைச்சலால் உடல் அசதி ஏற்பட வாய்ப்புண்டு. தொழிலதிபர், அரசாங்க வகையில் நற்பலன் பெறுவர். வியாபாரிகள், வாடிக்கையாளரைக் கவரும் விதத்தில் செயல்படுவர். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகைப்பயன் கிடைக்கப் பெறுவர்.

**கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்**

**ரிஷபம்**



வருமானம் திருப்தி அளிக்கும். பற்றாக்குறை நீங்கும். மனம் போல சுப நிகழ்ச்சி சிறப்பாக நடந்தேறும். உடல்நலக்குறைவு நீங்கி சுகம் பெறுவீர்கள். தொழிலதிபர்கள், வெளிநாட்டு ஒப்பந்தம் மூலம் ஆதாயம் காண்பர். வியாபாரிகள், விற்பனையைப் பெருக்கும் முயற்சியில் ஈடுபடுவர். விவசாயிகள், விளைபொருளை நல்ல விலைக்கு விற்று மகிழ்வர். பெண்கள், குழந்தைகளின் முன்னேற்றம் கண்டு சந்தோஷம் அடைவர்.

**மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

**மிதுனம்**



இயன்ற உதவிகளை பிறருக்குச் செய்வீர்கள். புதிய வழிகளில் வருமானம் கிடைக்க வாய்ப்புண்டு. சுபவிஷயத்தில் எதிர்பார்த்த நல்ல செய்தி தேடி வரும். அலர்ஜி பிரச்னையால் அவதிப்பட நேரிடலாம் உஷார். பவிவசாயிகள், மாற்றுப்பயிர் சாகுபடியால் நல்ல மகசூல் காண்பர். பெண்கள், புகுந்தவீட்டினரின் ஆதரவைப் பெற்று மகிழ்வர். மாணவர்கள், படிப்போடு விளையாட்டிலும் ஆர்வம் கொள்வர்.

**புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

**கடகம்**



சமூகத்தில் செல்வாக்கு மிக்கவராகத் திகழ்வீர்கள். வருமானம் படிப்படியாக அதிகரிக்கும். திருமண முயற்சியில் நல்லமுடிவு கிடைக்கப் பெறுவீர்கள். உடல்நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். தொழிலதிபர்கள், புதிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு லாபம் காண்பர். வியாபாரிகள், புதிய கிளை தொடங்கும் முயற்சியில் ஈடுபடுவர். பணியாளர்கள், சகபணியாளர்களுடன் நட்புடன் பழகுவர்.

**மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்**

**சிம்மம்**



உடல்நிலை சிறப்பாக இருக்கும். தொழிலதிபர்கள், தொழிலாளர் ஒத்துழைப்பால் வளர்ச்சி பெறுவர். பஅரசியல்வாதிகள், மாறி வரும் அரசியல் சூழலில் ஆர்வம் கொள்வர். விவசாயிகள், திட்டமிட்டபடி நவீன உழவுக்கருவி வாங்குவர். பெண்கள், குடும்பத்தினரின் ஆதரவைக் கண்டு மகிழ்வர். மாணவர்கள், நன்கு படித்து, முதல் மாணவராகத் திகழ்வர்.

**உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்**

**கன்னி**



திட்டமிட்டபடி சுபநிகழ்ச்சியை நடத்தி மகிழ்வீர்கள். உடல்நலனில் கவனம் செலுத்துவது நல்லது. தொழிலதிபர்கள், வெளியூர் பயணத்தால் வருமானம் காண்பர். வியாபாரிகள், சகவியபாரிகள் மத்தியில் கவுரவத்துடன் திகழ்வர். பெண்கள், கணவர்வழி உறவினர்களின் பாராட்டு பெறுவர். மாணவர்கள், கலைத்துறையில் விருப்பத்துடன் ஈடுபடுவர்.

**சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

**துலாம்**



நிதானத்துடன் இருந்தால் சிரமம் குறையும். செலவு அதிகரிக்கும். சிக்கனம் அவசியம் தேவை. சுபவிஷயங்களில் தடை உண்டாகி விலகும். அஜீரண பிரச்னை ஏற்பட வாய்ப்புண்டு, கவனம். தொழிலதிபர்கள், தொழிலாளர் எதிர்ப்பால் சிரமப்படுவர். விவசாயிகள், செலவுக்கு பணமில்லாமல் திண்டாடுவர். பெண்கள், பிள்ளைகளின் செயல் கண்டு வருத்தம் கொள்வர். மாணவர்கள், அக்கறையுடன் படிப்பது அவசியம்.

**விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

**விருச்சிகம்**



உடல் நலத்தோடு மனமும் புத்துணர்ச்சியுடன் திகழும். தொழிலதிபர்கள், உற்பத்தியை அதிகப்படுத்தி வருமானம் காண்பர். பணியாளர்கள், விரும்பியபடி பணிமாற்றம் கிடைக்கப் பெறுவர். அரசியல்வாதிகள், எதிர்க்கட்சியினரிடமும் பாராட்டு காண்பர். விவசாயிகளுக்கு, அரசாங்க வகையில் ஆதாயம் கிடைக்கும். பெண்கள், பிறந்த வீட்டின் பெருமையை நிலைநாட்டுவர். மாணவர்கள், அக்கறையுடன் படித்து முன்னேறுவர்.

**மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்**

**தனுசு**



தொழிலதிபர்கள், எதிர்கால வளர்ச்சி குறித்து ஆலோசிப்பர். வியாபாரிகள், விற்பனை பெருக்கத்தால் நல்ல லாபம் காண்பர். பணியாளர்கள், அதிகாரிகளின் மத்தியில் நற்பெயர் பெறுவர். அரசியல்வாதிகள், மக்கள் நலப்பணிகளில் ஆர்வம் செலுத்துவர். விவசாயிகள், நவீன கருவிகளால் பணியை மேம்படுத்துவர். பெண்கள், விருப்பம் போல ஆடை, ஆபரணம் வாங்கி மகிழ்வர். மாணவர்கள், பெற்றோர் மகிழும் விதத்தில் சிறப்பாகப் படிப்பர்.

**உத்தராடம் 2,3,4ஆம்பாதங்கள்,திருவோணம்,அவிட்டம்1,2ஆம்பாதங்கள்**

**மகரம்**



தொழிலதிபர்கள், திட்டமிட்டுச் செயல்பட்டு லாபமடைவர். வியாபாரிகள், விற்பனைப் பெருக்கத்தால் வருமானம் காண்பர். பணியாளர்களுக்கு, பணிச்சுமையில் இருந்து விடுதலை கிடைக்கும். அரசியல்வாதிகள், தலைமையின் ஆதரவைப் பெற்று மகிழ்வர். விவசாயிகள், நிலம் வாங்கும் முயற்சியில் ஈடுபடுவர். பெண்களுக்கு, தாய் வீட்டினரின் ஆதரவு கிடைக்கும். மாணவர்கள், ஆசிரியர்கள் பாராட்டும் விதத்தில் படிப்பர்.

**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம் 1, 2, 3ஆம் பாதங்கள்**

**கும்பம்**



சுப நிகழ்ச்சிகளில் இருந்த தடங்கல் நீங்கும். உடல் நலத்தோடு மனநிலையும் சிறப்பாக இருக்கும். தொழிலதிபர்களுக்கு, புதிய ஒப்பந்தம் மூலம் லாபம் கூடும். வியாபாரிகள், விற்பனை அதிகரிப்பால் பணத்தைக் குவிப்பர். பணியாளர்கள், எதிர்பார்த்த சலுகை கிடைக்கப் பெறுவர். அரசியல்வாதிகள், நீண்டதூரப் பயணம் மேற்கொள்வர். விவசாயிகளுக்கு, வழக்கில் சாதகமான தீர்ப்பு கிடைக்கும். பெண்கள், மனம் போல நகை, புத்தாடை வாங்குவர்.

**பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

**மீனம்**



உடல்நிலை நன்றாக இருக்கும். வியாபாரிகள், வாடிக்கையாளரைக் கவரும் விதத்தில் செயல்படுவர். பணியாளர்கள், நிர்வாகத்தினரின் பாராட்டைப் பெற்று மகிழ்வர். அரசியல்வாதிகள், மக்கள் நலப்பணிகளில் ஆர்வம் காட்டுவர். விவசாயிகள், விளைபொருட்களை நல்ல விலைக்கு விற்பர். பெண்களுக்கு, குழந்தைகளின் செயல்பாடு கண்டு மகிழ்வர். மாணவர்கள், பெற்றோர் பாராட்டும் விதத்தில் படிப்பர்.

# சுதந்திர வேட்கை

அடேல் பாலசிங்கம்

## விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு பதிவு

64



மனித வாழ்வின் விசித்திரமே இதுதான்! கூட்டாக வாழுமாறு சூழ்நிலை மக்களைப் பொது இடத்தில் தள்ளிய போதும் மக்கள் தங்கள் அடிப்படைச் சமூக அலகை, அதாவது குடும்பத்தை நாடவே முற்படுகிறார்கள். தனிமை காக்க வேண்டும் என்ற பிடிவாதத்தோடு ஒவ்வொரு குடும்பமும்,சில அடி நீளம் சில அடி அகலமானதாக இருந்தாலும்,தனக்கென ஒரு சிறு பகுதியைப் பிரித்து முடிச்சுப் போட்ட சேலைகளால் வேலிகளாகவும் மேலிருந்து தொங்கும் சேலைகளால் சுவர்களையும் அடைத்து , மற்றவர்களிடமிருந்து தன்னை வேறுபடுத்தியிருந்தது. இந்தத் துணிச் சுவர்களுக்கு உள்ளே ஐந்து,ஆறு,ஏழு,எட்டுப்பேர் , இனி முதியவர்கள்,புதிதாக திருமணமானவர்கள்,பிறந்த குழந்தை இப்படி குடும்பத்தினர் வாழத் துடித்துக் கொண்டிருந்தார்கள். மண்ணெண்ணய் அடுப்பிலிருந்தும்,விறகு அடுப்பிலிருந்தும், புகையையும், தீச்சுவாலையையும் அந்த இடத்தைச் சுற்றிப் பார்க்க முற்பட்டதும் அங்கே இருப்பவர்களுக்குப் போதுமான உணவு கிடைக்கவில்லை என்று கண்டு கொண்டேன். குழந்தைகள், உப்பியவயிறோடு,எலும்பும் தோலுமான கைகாலோடு, செம்பட்டை பற்றிய கருங்கூந்தலோடு ,எங்கும் காணப்பட்டார்கள். அதுவே பொது நியதியாக இருந்தது. காரணம் பாலோ, பால்மாவோ அங்கு கிடைப்பது அரிது. பால் இல்லாத தேனீரில் சிறிது சீனி கலந்து அல்லது சோறு வடித்த கஞ்சியையோ தாய்மார் பாலர்க்கு ஊட்டினார்கள்.



இருமல், தடிமல்,ஒகும் நாசி ,காய்ச்சல், சொறி, வயிற்றோட்டம், ஆகியவை உடல் நலப் பிரச்சினைகளாகப் இருந்தன. ஆனால் அங்கே மருந்து இருக்கவில்லை.

இந்த மனித அவலத்தைப் பார்க்கும் போது குற்ற உணர்வும் ஆற்றாமையும் என்னைப் பற்றிக் கொண்டன. நானும் அவர்களோடு ஒருவராக இல்லையே என்ற குற்றவுணர்வு. அவர்களுக்கு கொடுக்க என்னிடம் எதுவும் இல்லையே என்ற ஆற்றாமை உணர்வு. அதே நேரம் அடக்க உணர்வும் என்னை ஆட்கொண்டது. இந்த உணர்வை இந்தியாவிலும், இலங்கையிலும் நான் வாழ்ந்த அந்த நீண்ட காலப்பகுதியில் ,பல தடவை அனுபவித்திருக்கிறேன். இவ்வளவு வறுமைக்கும் துயரத்துக்கும் மத்தியில் கூட , இந்த மக்கள் எப்படித் தமது மனிதத்துவத்தைப் பேணுகிறார்கள் என்பதும்,தங்கள் கண்ணியத்தையும் மரியாதை காட்டும் பண்பையும் காப்பாற்றுவதில் எவ்வளவு கருத்தாக இருக்கிறார்கள். என்பதும் என்னை மலைக்க வைத்திருக்கிறது. இந்தத் தடவை ,பொருட் தட்டுப்பாட்டையே எங்கும் காணமுடிந்தது. என்றாலும்,தமிழ் விருந்தோம்பலும் தாராள மனப்பான்மையும் அவர்களிடமிருந்து பீரிட்டு வெளியே வந்தன. சீனித் தட்டுப்பாடு நிலவிய போதிலும் தித்திப்பான தேனீரோடு எம்மை உபசரித்தார்கள். யாரோ,அன்று தமது பங்கை எமக்கு மனம் உவந்து கொடை புரிந்து விட்டு ,தாம் வயிறு காய்ந்து இருப்பார்.

(பதிவு தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுகதை

> போதையற்ற சாதாரணநிலையிலிருக்கும் வேளைகளில் மனைவி மனோன்மணி இப்படிப் புத்தி மதிகள் சொல்வதுண்டு. இந்த வேளைகளில் எதுவுமே தெரியாத ஒரு அப்பாவிக் குழந்தையைப் போலப் பரிதாபமாகக் கட்சி கொடுப்பார் ஏகாம்பரம்.

நீண்ட நாள்களுக்குப் பின்பு ஏகாம்பரத்தார் இன்று வீதியிலே நின்று சன்னதமாடிக் கொண்டிருந்தார். அக்கம் பக்கத்தவர் அயலவர்கள், வீதியில் போவோர் வருவோருக்கெல்லாம் இந்தக் காட்சி மிகுந்த அசௌகரியமாகப் பட்டது. எனினும் சிலருக்கு வேடிக்கையாகவும் மகிழ்ச்சியா கவுமிருந்தது. என்பதையும் மறுக்க முடியாது.

ஏகாம்பரத்தாருக்கு வயது எப்படியும் அறுபதுக்கு குறையாது. போதிய நில புலங்கள் சொத்து சுகம் என்று மனிதர் சகல ஐஸ்வரியங்களுடனும் வாழ்கின்றார். பொதுவாக யாருடனும் வளவளப் பேச்சுக்களோ தேவையற்ற தொடர்புகளே எவையுமின்றித் தானுண்டு தன் சோலியுண்டு என்று வாழும் ஏகாம்பரத்தார் மாத மொரு தடவையோ இரண்டு தடவைகளோ இப்படியொரு விசித்திரமான நிலமைக்கு ஆளாகுவது வழக்கமாகி விட்டது. அவரிடம் போதிய பண வசதியிருந்தும் தானாக விரும்பி மதுபான சாலைக்குப் போய் மது அருந்தியிருப்பார் என்று யாரும் விரல் நீட்டிச் சொல்ல முடியாது. ஆனால் சில விஷமிகளின் சதிவலைக்குள் அகப்பட்டு அவர்களின் அன்புத் தொல்லைக்குள்ளாகித் தான் இப்படியொரு பயங்கரமான போதைக்கடிமைப்பட்டுக் கொள்வார். மதுவை அவர் அதிகமாக அருந்த வேண்டிய தேவை இருக்காது. மிகச் சொற்ப அளவில் அதைப் பருகி விட்டார். எனில் அவருக்கு உலகமே தெரிவிதில்லை. தான் பேசும் வார்த்தைகள் புரிவதில்லை. அந்த வார்த்தைகளின் அர்த்தமோ அல்லது அதனால் ஏற்படும் விபரீதங்களோ அவரால் உணர முடியாதவைகளாகவே இருந்தன. மொத்தத்தில் அவரைப் பார்த்தால் பரித்தாபகமாகவே இருக்கும்.

டேய் சரவணை! உனக்கு எத்தனை முறை சொல்லிப் போட்டன். உன்ரை காணியின்ரை எல்லை வேலியை உடனடியாய்த் தள்ளிப் போட்டிட வேணும். என்ரை காணியுக்கை நிண்ட வேம்பு, இப்ப உன்ரை காணியுக்கை நிக்குது. மரியாதையாய் காலமை பத்து மணிக்கிடையில வேலியைச் சரியாக அடைச்சுப் போட வேணும். இல்லையெண்டால் மருமோன் எண்டும் பாராமல் சிவனானனை வெட்டிப் போடுவன். ஓ.. வெட்டுவன் வெட்டுவன் எண்டால் வெட்டுவன். வேற கதையில்லை..

போதையில் சற்றுத் தள்ளாடிய படி அடிக்கடி எச்சில் துப்பிக் கொண்டிருந்த ஏகாம்பரத்தாரைச் சுற்றி நின்று அயலவர்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றனர். சிவசம்பு, சிற்றம்பலம் ஓவசியர் மனேச்சர் மகேந்திரநாதன் என்று ஏராளமானவர்களுடன் பெண்கள் குழந்தைகள் அனைவரும் சேர்ந்து நின்று வேடிக்கை பார்த்தபடி நின்றனர். இதை ஒரு கௌரவம் என நினைத்தாரோ என்னவோ மீண்டும் மீண்டும் வீண் வார்த்தைகளை உளறிக் கொண்டிருந்தார். என்ன தானிருந்தாலும் போதை ஏறிய பின்பு அவருடைய வாயிலிருந்து வரும் வார்த்தைகளைச் சகிக்கவே முடியாது. அத்தனை கர்ண கொடூரமாயிருக்கும். ஏகாம்பரத்தாரின் அக்கா மகன் தான் சரவணமுத்து. அவனைச் செல்லமாகவும் சுருக்கமாகவும் "சரவணை" என்றே அழைத்துக் கொள்வார். வயிற்றில் மது இறங்கிய பின்பு வீட்டில் மனைவி,பிள்ளைகள் ,வீதியில் போவோர் வருவோர் அனைவருடனும் தர்க்கப்பட்ட பின்பு அவரின் மனத்தில் வரும் கடைசி ஆள் தான் மருமகன் சரவணமுத்து. அக்கா மகன் என்று அவன் மீது அலாதிப் பிரியம் கொண்டவர். மது போதையில் அவனையும் வந்து திட்டித் தீர்த்துச் சச்சரவுப்படுவது அவருக்கு ஒரு வாடிக்கையான சங்கதியே!

முன்பு ஒரு காலத்தில் மிகவும் ஏழ்மையில் உழன்றவன். தான் சரவணமுத்து. ஆனால் இப் போது பிள்ளைகள் மூவரின் வெளிநாட்டுச் சம்பாத்தியத்தால் அவனும் கொஞ்சம் முன்னுக்கு வந்து விட்டான். ஊரிலுள்ள பரம்பரைப் பணக்காரர்களுடன் போட்டி போடும் தகுதிக்கு வந்து விட்டான். இது பலருக்குப் பெருமையாகவிருந்தது.சிலருக்குப் பெறாமையாகவும் இருந்தது என்பதையும் மறுப்பதற்கில்லை.

உண்மையைச் சொல்லப் போனால் ஏகாம்பரத்தார் இயல்பாகவே ஒரு சுத்த பயந்தாங்கொள்ளி. எங்கேயாவது சண்டை சச்சரெவன்றால் மனிதர் காத தூரம் பாய்ந்தோடி விடுவார். அத்தனை பயந்த சுபாவம் கொண்டவர். மது போதையில் தான் பயன்படுத்தும் வேண்டாத மூர்க்கத்தனமான வார்த்தைகளின் தீவிரத்தை அவர் இதுவரை உணராமலிருந்தது உண்மையிலேயே துர் அதிஷ்டமானதே!

"சும்மா ஏனப்பா வாயிலைவந்தபடி இப்படிக் கதைக்கிறியள். தண்ணி போட்டால் உங்கடை வாயிலையிருந்து வாற கதையளாலை எவ்வளவு கரைச்சலுகள் வருமெண்டு யோசிச்சுப் பாருங்கோ. எழுந்தவுடனை வெட்டுறன் , கொத்துறன் எண்டு கிளப்பிக் கொண்டு வெளிக்கிட்டிடுவார். இனி யெண்டாலும் புத்தியைப் பாவிச்சுக் கதைங்கோ!"

போதையற்ற சாதாரண நிலையிலிருக்கும் வேளைகளில் மனைவி மனோன்மணி இப்படிப் புத்தி மதிகள் சொல்வதுண்டு. இந்த வேளைகளில் எதுவுமே தெரியாத ஒரு அப்பாவிக் குழந்தையைப் போலப் பரிதாபமாகக் கட்சி கொடுப்பார் ஏகாம்பரம்.

அன்று விடிந்ததும் விடியாத வைகறைப் பொழுது. ஊரெங்கும் ஒரு விசித்திரமான பரபரப்பான நிலைமையில் காணப்பட்டது. ஏதோ ஒரு வித பயப்பீதியில் அக்கம்பக்கதவர்கள் பேசிக் கெண்டார்கள். இன்னும் சிலர் கலக்கத்துடன் சரவணமுத்துவின் வீட்டை நோக்கி ஓட்டமும் நடையுமாக விரைந்து கொண்டிருந்தனர்.

"சரவணமுத்துவை இராத்திரி ஆரோ வெட்டிப்போட்டாங்களாம்"


யாரோ கத்திக் கொண்டு ஓடுவது ஏகாம்பரத்தாரின் செவிகளிலும் விழத் தவறவில்லை. ஒரு கணம் நாடி நரம்புகளின் இயக்கம் ஸ்தம்பிக்க ஓவென்று கத்த வேண்டும் போலி ருந்தது. அதற்கும் குரல் ஒத்துழைக் கவில்லை.

"ஒரு நேரச் சோத்துக்கு வழியில்லாமலிருந்ததுக ளெல்லாம் வெளிநாட்டுப் பணத்தைக் கண்டிட்டுக் கெப்பர் காட்டுகினம். எத்தனை நாளைக்குக் காட்டுகினம் பாப்பம். அவர் ஏகாம்பரத்தார் எண்டாப் போலை என்ன குறைஞ்ச ஆளோ! என்ரை பெடியன் ஒரு ரவுடியாம். அவனுக்குத் தன்ரை பெட்டையை உயிர் போனாலும் கட்டிக் கொடுக்க மாட்டானாம். என்ரை பெடியன் ரவுடியாம். அவற்றை பெட்டை தங்கக் கட்டியாம். உவற்றை திமிருக்கு...."

வஞ்சம் தீர்ப்பதற்காக தோட்ட வேலைகளுக்கெல்லாம் கூலியாள்களைப் பிடிக்க முடியாத இந்தக் காலத்தில் வெட்டுக் கொத்துக் கொலைகளுக்கெல்லாம் கூலியாள்களைப் பிடித்துக் கொள்வது மிகவும் இலகுவானது என்பது சரவண முத்துவின் கொல்லையினால் நிரூபணமாகி விட்டது.

ஏகாம்பரம் படலை திறந்து வீதியிலிறங்கவும் பொலிஸ் ஜீப் அங்கே வந்து நிற்கவும் சரியாக இருந்தது. கைவிலங்குடன் தள்ளி ஏற்றப்பட்ட ஏகாம்பரத்தாரைப் பார்த்து நமுட்டுச் சரிப்பொன்றை உதிர்த்தான் சிவசம்பு."ஒரு எறியில் இரண்டு மாங்காய்" அவனுடைய மனம் திருப்திப் பட்டுக் கொண்ட அதவேளை வாயில் வந்த வார்த்தைகளைக் கண்ட படி அள்ளிக் கொட்டியதால் இப்போது ஒரு சூழ்நிலைக் கைதியாகிக் கொண்டதை ஏகாம்பரமும் உணராமலில்லை.

மிருசுவில் தமிழ்தாசன்



# சூழ்நிலைக் கைதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்று தணியும் எழுத்துத் திருட்டு?

- மு. இராமநாதன்



**எ**ன் வீட்டின் வாசிப்பறையில் அமர்ந்தபடி இந்தக் கட்டுரையைத் தட்டச்சு செய்கிறேன். இந்த வீடு, இன்னும் வங்கிக் கடன் கட்டி முடிக்கவில்லை என்றாலும், என் பெயரில்தான் இருக்கிறது. ஆகவே, என்னுடைய சொத்து. யாரும் மறுக்க மாட்டார்கள். இந்த மேசை, நாற்காலி, கணினி போன்றவையும், ஹொங்காங்கில் பழைய சாமான்களை யாரும் வாங்க மாட்டார்கள் என்றாலும், என் சொத்துக்கள்தாம். யாரும் அபகரித்தால் புகார் கொடுக்கலாம். ஆனால், இப்போது நான் கணினியில் உள்ளிடுகிற இந்த எழுத்துக்கள் என்னுடைய சொத்தா?

இப்படியொரு கேள்வி எழக் காரணம், சமீபத்தில் படித்த கட்டுரை. கடந்த ஜூலை மாதம் மொரிஷியஸில் வெளிநாட்டுத் தமிழர்களுக்காக ஒரு மாநாடு நடத்தி, அந்தச் சமயத்தில் ஒரு மலரையும் வெளியிட்டிருக்கிறார்கள். அது எனக்கு வாசிக்கக் கிடைத்தது. அயலில் வசிக்கும் தமிழர்கள் எழுதியிருக்கிறார்கள். ஓர் அமெரிக்க அன்பர் அமெரிக்கத் தமிழர்களை மட்டுமல்லாமல், உலகெங்கும் வாழ்கிற தமிழர்களை உள்ளடக்கி ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அதில் ஹொங்காங் குறித்த பகுதி எனக்கு மிகவும் பரிச்சயமாக இருந்தது. அது ஹொங்காங்கைப் பற்றியது என்பதனால் அல்ல, அதில் இரண்டு பத்திகள் நான் 10 ஆண்டுகளுக்கு முன்பு இணையப் பத்திரிகை ஒன்றில் எழுதிய கட்டுரையிலிருந்து எடுக்கப்பட்டிருந்தன. அன்பர் ஒன்றிரண்டு மாற்றங்களைச் செய்திருந்தார். 'ஹொங்காங்' என்பதை 'ஆங்காங்' என்றும், '70 இலட்சம் மக்கள்தொகை' என்று நான் எழுதியிருந்ததை '72,35,043 மக்கள்தொகை' என்றும் மாற்றியிருந்தார். மற்றபடி, நான் எழுதியிருந்த இரண்டு பத்திகள் கிட்டத்தட்ட அப்படியே இடம்பெறுகின்றன.

இப்படியான சம்பவத்தை இதற்கு முன்னரும் எதிர்கொண்டிருக்கிறேன். அப்போது நான் செய்யக்கூடியது ஒன்றுதானிருந்தது. எழுதுவதை ஏறக்கட்டிவிட்டுப் பாடங்களைப் படிப்பது.

## சந்தை மதிப்பும் சன்மானமும்

30 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது இன்னொரு சம்பவம். இதை இப்படியே விட்டுவிடலாகாது. யாரோ சொல்லியிருக்கிறார்கள். எதையும் வீட்டிலிருந்து தொடங்க வேண்டும். நான் மனைவியிடம் ஆலோசனை கேட்டேன். அவர் அந்தப் பென்னம் பெரிய மலரை இரண்டு கைகளாலும் ஏந்தி, பிரஸ்தாபக் கட்டுரையை நிதானமாகப் புரட்டினார். மொத்தம் 20 பக்கங்கள். கூண்டில் நிற்கும் என்னைப் பார்த்து, இவ்வளவு பெரிய கட்டுரையில் இரண்டு பத்திகள்தானே, போகட்டும், விட்டுவிடலாம் என்று தீர்ப்பு வழங்கினார்.

நீதிபதி சிலவற்றைக் கருத்தில் கொள்ளவில்லை. ஒரு படைப்பாளிக்குத் தனது படைப்பின்மீது இரண்டு உரிமைகள் உள்ளன. முதலாவது, சந்தை மதிப்பு அல்லது சன்மானம். இரண்டாவது, சமூக மதிப்பு அல்லது தார்மிக உரிமை.

எனது கட்டுரையை இணையத்தில் வெளியிட்ட பத்திரிகை லாப நோக்கமற்றது. வாசகர்களிடம் சந்தா வசூலிப்பதில்லை. எழுத்தாளர்களுக்குச் சன்மானமும் தருவதில்லை. இதில் பொருளாதாரரீதியில் எனக்கு இழப்புமில்லை, அந்த அன்பருக்கு லாபமுமில்லை.

ஆனால், தார்மிக உரிமை இருக்கிறதே. என்னுடைய கட்டுரைக்குக் காப்புரிமை இருக்கிறது. வழக்குப் போடலாம். ஆனால், அதற்கு நேரமும் பணமும் வேண்டும். தவிர, ஒரு படைப்பின் மீதுள்ள உரிமையை நீதிமன்றமல்ல, சமூகத்தில் நிலவும் சட்டத்தின் மாட்சிமை பெற்றுத்தர வேண்டும். எழுத்தை மதிக்கும் சமூகங்களில் அப்படித்தான் நடக்கிறது.

## நகலெடுப்பின் விளைவு

பரீத் சக்காரியா இந்திய - அமெரிக்கர். 'நியூஸ் வீக்' பத்திரிகையின் ஆசிரியராக இருந்தவர்., தற்போது 'டைம்' இதழில் தொடர்ந்து எழுதினார். 2012 இல் துப்பாக்கிக் கட்டுப்பாட்டைப் பற்றி இவர் எழுதிய கட்டுரையின் ஒரு பத்தி, அதற்குச் சில காலம் முன்பு ஜில் லேப்போர் என்பவர் எழுதிய கட்டுரையிலிருந்து எடுக்கப்பட்டது என்பதைச் சில வலைஞர்கள் கண்டுபிடித்தார்கள். சக்காரியா மன்னிப்புக் கேட்டார். 'டைம்' இதழ் அவரைப் பணியிலிருந்து இடைநீக்கம் செய்தது.

காவ்யா விஸ்வநாதன் இன்னொரு இந்திய - அமெரிக்கர். ஹாவார்ட் மாணவி. 2006 இல் ஒரு நாவல் எழுதினார். லிட்டில் பிரவுன் பதிப்பகம் வெளியிட்டது. காவ்யா எழுதிய நாவலின் பல பத்திகளுக்கும் மெகன் மெக்காபர்டி என்பவர் முன்னதாக எழுதியிருந்த இரண்டு நாவல்களின் பத்திகளுக்கும் நெருங்கிய ஒற்றுமை இருந்ததை மெக்காபர்டியின் வாசகர் ஒருவர் கண்டுபிடித்தார். சந்தையில் இருந்த காவ்யாவின் புத்தகப் பிரதிகள் அனைத்தையும் லிட்டில் பிரவுன் திரும்பப் பெற்று அழித்துவிட்டது. மேலும், பதிப்பகம் காவ்யாவின் அடுத்த புத்தகத்துக்கும் ஒப்பந்தம் செய்திருந்தது. இரண்டு புத்தகங்களுக்குமாகச் சேர்த்து 5 லட்சம் டொலர், அதாவது மூன்று கோடி ரூபாய், இந்த ஒப்பந்தத்தையும் பதிப்பகம் ரத்துசெய்தது. இவையெல்லாம் அமெரிக்காவில் எழுத்துக்கு உள்ள சந்தை மதிப்பையும் எழுத்துத் திருட்டு, அறிவுலகத்தில் உண்டாக்குகிற அதிர்வுகளையும் புலப்படுத்துகின்றன.

## எழுத்தின் சந்தை மதிப்பு

தமிழ் எழுத்தாளர்களின் சந்தை மதிப்பு எப்படி உள்ளது? கடந்த 50 ஆண்டுகளில் தமிழின் முழு நேர எழுத்தாளர்கள் என்று ஒரு பட்டியல் தயாரித்தால், பத்துப் பேராவது தேறுவார்களா என்று தெரியவில்லை. தி. ஜானகிராமன் வானொலியில் வேலை பார்த்தார். அசோகமித்திரன் ஜெமினி ஸ்டுடியோவில் பணியாற்றினார். இந்திரா பார்த்தசாரதி டெல்லி பல்கலைக்கழகத்திலும் ஜி. நாகராஜன் மதுரைத் தனிப் பயிற்சிக் கல்லூரிகளிலும் பயிற்றுவித்தார்கள். வண்ணநிலவனுக்குப் பத்திரிகைத் தொழில், வண்ணதாசனுக்கு வங்கிப் பணி. பி.ஏ. கிருஷ்ணனும் தியடோர் பாஸ்கரனும் நல்ல உத்தியோகங்களிலிருந்து ஓய்வு பெற்றபின்புதான் தீவிரமாக எழுதுகிறார்கள். எழுத்து இங்கே ஒரு தொழிலில்லை.

## சமூக மதிப்பு எப்படி?

சுந்தர ராமசாமி ஒரு முறை இப்படிச் சொன்னார். ஒரு பெட்டிக் கடைக்காரர் எழுத்தாளராகவும் இருக்கிறார் என்று வைத்துக்கொள்வோம். நான்கு பேர் சந்திக்கிற இடத்தில் யாரேனும் 'நீங்கள் என்ன செய்கிறீர்கள்?' என்று கேட்டால், அவர் ஒருபோதும் 'நான் ஒரு எழுத்தாளன்' என்று சொல்ல மாட்டார். அது சமூகத்தில் அவருக்கு மரியாதையை ஈட்டித்தருவதில்லை.

எட்டு ஆண்டுகள் இருக்கும். அ.முத்துலிங்கத்தின் கதை ஒன்றைப் படித்துப் பிரமித்துப்போய் அவருக்கு ஒரு மின்னஞ்சல் அனுப்பினேன். உடன் பதில் எழுதினார். அதுவே, ஓர் இலக்கியப் படைப்பைப் போல இருந்தது. அன்றிரவே சாப்பாட்டு மேசையில் அதைப் பகிர்ந்துகொண்டேன். ஹொங்காங்கில் வளர்ந்த என் மகனுக்கு அவரது மறுமொழியின் உள்ளடக்கத்தைவிட, ஓர் எழுத்தாளர் தனது விசிறிகளுக்குப் பதில் எழுதுகிறார் என்பதுதான் வியப்பாக இருந்தது. எழுத்தை மதிக்கும் சமூகங்களில் எழுத்தாளர்களை எளிதில் தொடர்புகொண்டுவிட முடியாது. இங்கே நாஞ்சில் நாடன் தனது செல்பேசி, இல்பேசி எல்லாவற்றையும் அவரது இணையத்தளத்தில் போட்டுவைத்திருக்கிறார். ஒரு தமிழ் வாசகர் எழுத்தாளரைத் தொலைபேசியில் அழைப்பதற்கு எங்கே மெனக்கெடப்போகிறார் என்கிற தைரியம்தான் காரணமாக இருக்க வேண்டும்.

30 ஆண்டுகளுக்கு முன்பு எனது எழுத்துக்களை யாரோ எடுத்துக்கொண்டபோது ஒன்றும் செய்ய முடியவில்லை.

இப்போது ஆவலாதியை எழுத முடிகிறது. அவ்வளவுதான் நாம் மேம்பட்டிருக்கிறோம்.

**கடந்த 50 ஆண்டுகளில் தமிழின் முழு நேர எழுத்தாளர்கள் என்று ஒரு பட்டியல் தயாரித்தால், பத்துப் பேராவது தேறுவார்களா என்று தெரியவில்லை. தி. ஜானகிராமன் வானொலியில் வேலை பார்த்தார். அசோகமித்திரன் ஜெமினி ஸ்டுடியோவில் பணியாற்றினார். இந்திரா பார்த்தசாரதி டெல்லி பல்கலைக் கழகத்திலும் ஜி. நாகராஜன் மதுரைத் தனிப் பயிற்சிக் கல்லூரிகளிலும் பயிற்றுவித்தார்கள். வண்ணநிலவனுக்குப் பத்திரிகைத் தொழில், வண்ணதாசனுக்கு வங்கிப் பணி. பி.ஏ. கிருஷ்ணனும் தியடோர் பாஸ்கரனும் நல்ல உத்தியோகங்களிலிருந்து ஓய்வு பெற்றபின்புதான் தீவிரமாக எழுதுகிறார்கள். எழுத்து இங்கே ஒரு தொழிலில்லை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## இரகசியத்தன்மை

எச்.ஐ.வியால் பாதிக்கப்பட்டுள்ளதாக இனங்காணப்படுபவர்கள் எந்தச்சந்தர்ப்பத்திலும் காட்டிக் கொடுக்கப்படமாட்டார்கள். இரகசியத் தன்மை மிகவும் இறுக்கமாகப் பேணப்படும் என வைத்திய சாலை வட்டாரங்கள் அடித்துக் கூறுகின்றன . அதாவது ஒருவருக்கு எச்.ஐ.வி தொற்று என இனங்காணப்பட்டால் குறித்த நபர் தவிர்ந்த ஏனையவர்களுக்கு அவர் எய்ட் ஸ் நோயாளர் என்று அறிய வாய்ப்பில்லை. அவரது குடும்பத்துக்கோ மனைவிக்கோ கூட குறித்த விடயம் எந்தக் காரணம் கொண்டும் தெரியப்படுத்தப்படாது. வைத்தியசாலையிலும் அவரது ஆவணங்கள் பரிசோதனை பதிவேடுகள், அறிக்கைகள் எவற்றிலும் அவரது பெயர் எழுதப்பட்டிருக்காது. அவருக்கு என ஒரு இலக்கமே போடப்பட்டு அடையாளப் படுத்தப்பட்டிருப்பார். எந்தவொரு தேவைக்கும் அவ ரது பெயர் பயன்படுத்தப்பட மாட் டாது.

எனினும் முழுமையாக குணப்படுத்துவதற்கான மருந்துகள் இதுவரை கண்டறியப்படாத நிலையிலும் தொற்றினைக் கட்டுப்படுத்தும் வகையில் கண்டறியப்பட்ட மருந்துகளை தினமும் அவர் உட்கொண்டு வரவேண்டும். இவ்வாறு எய்ட்ஸால் பாதிப்புற்றோர் சிகிச்சை பெற வருவார்களானால் ஏனையவர்கள் போல அவர்களும் எதுவித வித்தியாசமும் இன்றி வாழ முடியும். இவர்களுக்கான மரணமும் இயற்கையானதாகவே இருக்குமே தவிர நோய்த்தாக்கத்தால் இருக்காது. யாழ்ப்பாணத்தில் இதுவரை 4 ற்கு மேற்பட்டவர்கள் தவறான மருந்துப் பாவனையால் மரணத்தையும் தழுவிக் கொண்டுள்ளனர்.

## அறிகுறிகள்

எச்.ஐ.வி தொற்றுக்கு ஒருவர் உட்பட்டிருந்தால் அவரது நோய் எதிர்ப்பு சக்திகள் குறைவடைய சுமார் 30 வயதுக்கு மேல் பல அறிகுறிகளை காட்டிக் கொடுக்கும். அப்போது மூச்சு விடுவதற்கு கடினமாக இருக்கும், தொடர் காய்ச்சல் ஏற்படும், பசியிருக்காது , உடலின் எடை குறையும்




இவ்வாறான அறிகுறிகளே ஆரம்பத்தில் தெரிந்தாலும் சரியான சிகிச்சை இல்லாவிடில் அவர் இறக்க நேரிடும். எச்.ஐ.வி தொற்று இருப்பவர்களுக்கு காசநோய் தாக்கம் ஏற்படுவதற்கான வாய்ப்பு நிறையவே உண்டு. எனவே இவ்வாறான அறிகுறிகள் உள்ளவர்கள் தங்களுடைய உடல் ஆரோக்கியத்தை உறுதிப்படுத்திக் கொள்வது மிகவும் நல்லது.

## மக்களே விழிப்படையுங்கள்

ஆரம்ப காலத்தில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வு , பாலியல் ரீதியான அறிவு மற்றும் பொது நோக்குடனான அறிவு இல்லாத போதும் கட்டுக் கோப்பான கலாசாரம் இருந்தமையால் நோய்களற்ற ஒரு சமுதாயம் இருந்து வந்தது . ஆனால் தற்போது அவ்வாறில்லை. கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று வாழும் சமுதாயமாக மாறி விட்டோம். இந்த நிலையில் கட்டாயம் ஒவ்வொரு மனிதனும் விழிப்புணர்வுடன் வாழப் பழகிக் கொள்ள வேண்டும்.

அரச சார்பற்ற நிறுவனங்கள், பெண்கள் , சிறுவர் அமைப்புக்கள் மற்றும் சமூக நிறுவனங்களும் தற்போது கிராமங்கள் , நகரங்கள், பாடசாலைகள் தோறும் மருத் துவ வட்டாரங்கள் பல்வேறு வகைகளில் விழிப்புணர்வினை ஏற்படுத்தி வருகின்றன. ஊர்லங்கள்.துண்டுப்பிரசுரங்கள், வீதி நாடகங்கள் என்பன இந்த விழிப்புணர்வுக்கு பயன்படுகின்றன.

அனைத்துக்கும் மேலாக பெற்றோர் , ஆசிரியர்கள் தங்களுடைய பிள்ளைகளுக்கு இவ்வாறான விடயங்களை தெளிவான முறையில் சொல்லிக் கொடுப் பார்களானால் எதிர்கால சந்ததியையே னும் எச்.ஐ.வி தொற்றில் இருந்து பாதுகாக்க முடியும்.

இவ்வாறு எச்.ஐ.வி தொற்று இருக்கலாம் என்ற சந்தேகம் கொள்கின்றவர்கள் எவ்விதமான பயமும் இன்றி தங்களது பகுதியில் உள்ள வைத்தியரை நாடி தாங்களாகவே பரிசோதனைக்கு முன் வரவேண்டும். இவ்வாறான செயன் முறைகள் ஆரம்பிக்கப்பட்டால் மட்டுமே ஆரோக்கியமான சமுதாயத்தை கட்டியெழுப்ப முடியும்.

**“ வடக்கிலும் தற்போது எய்ட்ஸ் பரம்பல் அதிகரித்துள்ளது. இதுவரைக்கும் யாழ்ப்பாணத்தில் 13 பேரும் வவுனியாவில் 2 பேரும் இனங் காணப் பட்ட அதேவேளை முல் லைத் தீவு மற்றும் கிளி நொச்சி மாவட்டத் தில் இதுவரை எச்.ஐ.வி தொற்றுள்ள எவரும் கண்டறியப்படவில்லை என மருத்துவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதற்காக அங்கு எய்ட்ஸ் நோய் உள்ளவர்கள் இல்லை என்று உறுதி படக் கூறி விட முடியாது.**

---

## சொற்சிலம்பம் போட்டி இல. 650

### மேலிருந்து கீழ்

1-ஐந்தாம் திதி.
2-போர்.
3-காலை அல்ல.
4-உணவின் பின்னர் வழங்கப்படும் உப உணவு.
5-களம்.
6-கண்ணீரோடு கவலையாக இருப்பதை இப்படிக் கூறுவது.
9- சாப்பிடக் கூடிய தீனி.
11- முகவரி.
13- பெரிய விருட்சமாக வளரும் ஒரு தரு.
16-எரிச்சல் தன்மை.
17-பேராசை.
18- எனவே.
19- தங்குமிடம்.

### இடமிருந்து வலம்

1-களவு.கள்ளுண்ணல்.குருநிந்தை.பொய். கொலை ஆகியவை
7-இந்தியாவின் கேரள மாநிலத்தை இப்படியும் அழைப்பர்.
8-ஓர் ஆட்ட வகை.
12-தொட்டால் தாக்கும்.
13-இணக்கச் சொல்.
14-மஷ்ணுவின் மனம் கவர்ந்தவள்.
15-இரவு வேளை அல்ல.
18-வருடம்.
19-திருமணம்.
21-ஆற்ற வேண்டிய கடமை.
22- இதுவும் ஒரு மூலிகை மரம்.
23-இந்திய மாநிலங்களில் ஒன்று.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | | |
| | | 7 | | | | | |
| 8 | 9 | | | 10 | | | 11 |
| 12 | | | 13 | | | 14 | |
| | 15 | 16 | | | 17 | | |
| 18 | | | | 19 | | 20 | |
| 21 | | | | | | | |
| 22 | | | | 23 | | | |

அனுப்புபவர் பெயர்:-------------------------------------

விலாசம்:---------------------------------------------

-----------------------------------------------------

அனுப்ப வேண்டிய முகவரி:

**சுடர் ஒளி யாழ்.அலுவலகம்;**

### போட்டி இல. 650

■ சொற்சிலம்பம் போட்டி 650க்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2014 ஆம் ஆண்டு டிசெம்பர் 24ஆம் திகதி ஆகும்.

■ விடைகள் மற்றும் வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் முறையே டிசெம்பர் 31ஆம் மற்றும் ஜனவரி 07ஆம் திகதிய சுடர்ஒளியில் பிரசுரமாகும். தபா லட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்

■ 1ஆம் பரிசு ரூபா 250 உம் 2ஆம் பரிசு ரூபா 150 உம் 3ஆம் பரிசு ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக்

### போட்டி இல 647இல் பரிசு பெற்றோர்

1 செ.விக்ரர்ஜெயபாலன்- -பானுகாந்து, 2ஆம் வட்டாரம்.

2 பாலசந்திரன் மதிவினி. சோதீவாசம்,தையிட்டிப்புலம். வித்தகபுலம்.

3 ஞா.துரை, இல;-85/4,கார்மல் வீதி,

பரிசுக்குரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2.00மணி வரை தமக்குரிய பணப்பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி யாழ். உதயன் அலுவலகத்திலும்,நெல்லியடி,சாவகச்சேரி,கிளிநொச்சி,கொழும்பு. வவுனியா ஆகிய இடங்களில் உள்ள உதயன்-சுடரொளி பிராந்திய அலுவலகங்களிலும் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம். மேலதிக தொடர்புகளுக்கு 021 567 7609

### பாராட்டுப் பெறுவோர்

திருமதி,ம.வளர்மதி, 3ஆம் வட்டாரம்,

கா.பொ.இ.குலசிங்கம். 5ஆம் வட்டாரம்,

பொன்.கயிலாயபிள்ளை, இல;-77,2ஆம் பகுதி, விசுவமடு மேற்கு,

வ.ஆ.அதிரூபசிங்கம், அம்மன் கோவிலடி, வல்வெட்டித்துறை.

எஸ்.விக்டர் உமெல், இல;-04,ஓடக்கரை வீதி,

### சொற்சிலம்பப் போட்டி 648இன் விடைகள்

**மேலிருந்து கீழ்**

1.அஞ்சாமை
2.மகரம்
3.தினம்
4.துன்பம்
5.புரளி
8.கயவன்
10.சமிபாடு
12.அடி
13.சென்னி
15.சிம்மம்
16.அம்பு
17.பகல்
18.கல்வி
20.தகா

**இடமிருந்து வலம்**

1.அனுமதி
4.தும்பு
6.கனவான்
7.சாகரம்
9.பசளி
11.மையம்
12.அம்மி
13.செடி
14.பாசி
16.அன்பன்
18.கரும்
19.கனிதல்
21.புயல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1986 இல் ஃபைஸாபாத்தில் இறந்த அந்த ஏழைச்சாதுவிடம் 23 ட்ரங்குப் பெட்டிகள் இருந்தன. அவற்றில் பல பொருள்கள் இருந்தன. (அவற்றைப் பிறகு பார்ப்போம் ) அவை அந்தச் சாது நேதாஜியாகத்தான் இருந்திருக்கவேண்டும் என்று சான்றுகள் காட்டினாலும் அதை விசாரிக்க 1999 ஆம் ஆண்டு முழுமனதுடன் அல்லாமல் நேதாஜியின் மீது பக்தி கொண்டவர்களின் பல போராட்டங்களின் அழுத்தத்தால் ஜஸ்டிஸ் எம் கே முகர்ஜியின் தலைமையில் தீவிர நேதாஜி ரகசியத் தேடல் குழு அமைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டது.**

# நேதாஜியும் நேருவின் துரோகமும்...






1985 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 16 ஆம் திகதி அயோத்யாவுக்கு அருகில் இருக்கும் ஃபைஸாபாத் என்னும் நகரில் ஒரு பாழடைந்த வீட்டில் ஒரு சாது சுமார் 90 வயதில் தனது இறுதி மூச்சை விடுத்தார். அங்கிருந்த அக்கம்பக்கத்தினர் அந்தச் சாது வேறு யாரும் இல்லை, நேதாஜி என இந்திய மக்கள் அனைவராலும் அன்புடன் அழைக்கப்பட்ட சுபாஷ் சந்திரபோஸ் தான் என்று அழுத்தம் திருத்தமாகக் கூறினர்.

ஆனால் உலகம் முழுக்க பரப்பப்பட்ட செய்திகளின் மூலம் 1945 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 23 ஆம் திகதி ஜப்பானில் இருந்து சோவியத் யூனியனுக்கு விமானத்தில் செய்த பயணத்தின் போது விமானவிபத்தில் நேதாஜி இறந்துவிட்டதாக ஜப்பானின் செய்தி நிறுவனம் அறிவித்தது.

சோவியத் யூனியனுக்கு எதிராக ஹிட்லருடன் சேர்ந்து சதி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு சோவியத் யூனியனில் சிறைபிடிக்கப்பட்டு வைத்திருந்ததாகவும் அங்கே தான் நேதாஜி மரித்ததாகவும் ஆதாரம் இல்லாத செய்திகள் கூட உண்டு.

ஜப்பானின் செய்தி நிறுவனத்தின் மூலம் இந்தமாதிரி விமானவிபத்து செய்தியைப் பரவவிட்டுவிட்டு நேதாஜி தப்பித்துப் போய் எங்கோ மறைந்திருந்ததாகவும் பின்னர் இந்தியா சுதந்திரம் பெற்றபின்னர் இந்தியாவுக்கு வந்து ஒரு கர்ம யோகிபோல் மறைந்து வாழ்ந்து இறந்தார் என்பதாகவும் அவர்தான் ஃபைஸாபாதில் உயிர் நீத்த சாது என்பதையும் பலர் அடித்துக் கூறினாலும் உண்மை என்ன என்பது தெரிந்தவர் யார்.?

இந்தியாவுக்கு நல்லது செய்வதாக நடித்து துரோகத் தையே செய்துவந்த நேருவும் அவரது பரம்பரையினரும் தான்,.

**ஆதாரங்கள்?**

1954 ஆம் ஆண்டு நேதாஜி விமான விபத்தில் இறந்துவிட் டதாக அறிவிக்கப்பட்டபின்னர் சுதந்திரம் பெற்ற இந்தியாவில் முடிசூட்டிக்கொண்ட நேரு அப்போதும் சரி அதற்கும் முன்னரும் சரி.. எந்தவிதமான துயர அறிக்கையும் வெளியிடவில்லை. மாறாக இந்திய தேசிய காங்கிரஸ் நேதாஜியின் இறப்பை ஒரு சிறிய தீர்மானத்தின் மூலம் காட்டிக்கொண்டுவிட்டு அமைதியானது. காரணம் நேரு காந்தி கூட்டணிக்கு நேதாஜியின் வளர்ச்சியும் வழிமுறைகளும் பிடிக்காமல் போனதுதான். இந்திய தேசிய காங்கிரஸில் இருந்தே நேதாஜியை விரட்டியவர்கள் இந்த மனிதப்புனிதர்கள். அதன் பின்னர் தான் நேதாஜி ஃபார்வேர்ட் ப்ளாக் என்ற இயக்கத்தைத் தொடங்கினார் என்பது வேறு தகவல்.

நேரு இந்தியாவின் பிரதமர் பதவியைக் கைப்பற்றிக்கொண்டபின்னர். தேசபக்தி இயக்கத்தினர் பலரின் மிகுந்த போராட்டத்துக்குப் பிறகு 1956 ஆம் ஆண்டில் நவாஸ் கான் விசாரணைக்குழு என்னும் ஒரு கண் துடைப்புக் குழுவை நேதாஜியின் மறைவு குறித்து விசாரிக்க அமைத்தது. ஆனால் பொய்யான நோக்கத்தில் அமைந்த அந்தக் குழுவோ எந்த ஆணியையும் பிடுங்காமல் ஒதுங்கிக்கொண்டது. அதாவது ஜப்பானின் செய்தி நிறுவன அறிக்கையையே தனது முடிவாக அறிவித்து இந்தியர்களை முட்டாள்களாக்கிச் சென்றது, நேருவும் விரும்பியது அதைத்தானே..?

பிறகு இந்திரா காந்தியின் ஆட்சியில் 1970 74 ஆண்டுகளில் ஜி டி கோஸ்லா கொமிஷன் (G.D. Khosla Commission) அமைக்கப்பட்டு மீண்டும் ஒரு கண் துடைப்பு நாடகம் நடந்தது. இந்த விசாரணைக் குழுவும் முந்தைய குழுவைப் போலவே நேதாஜி விமான விபத்தில்தான் இறந்தார் என்று ஆவணங்களை மூடிவிட்டு சிலகோடிகள் செலவுக் கணக்கைக் காட்டியது.

1986 இல் ஃபைஸாபாத்தில் இறந்த அந்த ஏழைச்சாதுவிடம் 23 ட்ரங்குப் பெட்டிகள் இருந்தன. அவற்றில் பல பொருள்கள் இருந்தன. (அவற்றைப் பிறகு பார்ப்போம்) அவை அந்தச் சாது நேதாஜியாகத்தான் இருந்திருக்கவேண்டும் என்று சான்றுகள் காட்டினாலும் அதை விசாரிக்க 1999 ஆம் ஆண்டு முழுமனதுடன் அல்லாமல் நேதாஜியின் மீது பக்தி கொண்டவர்களின் பல போராட்டங்களின் அழுத்தத்தால் ஜஸ்டிஸ் எம் கே முகர்ஜியின் தலைமையில் தீவிர நேதாஜி ரகசியத் தேடல் குழு அமைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டது.

இரண்டாண்டுகளின் தீவிர வீணடிப்பு காலத்துக்குப் பிறகு 2001 ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் திகதி தமது வெள்ளை அம்பாசடர் காரில் சென்று எம் கே முகர்ஜி குழு அந்த முகம் தெரியா சாதுவின் உடமைகளை ஆராயச் சென்றது. (கால இடை வெளியைக் கணக்கிட்டுக்கொள்ளவும்)

இதற்கிடையில் நேதாஜியின் மருமகள் லலிதா போஸ் ஓர் உயர்நீதிமன்றத்தில் தொடுத்த தேடுதல் வழக்கின் கீழ் அந்த சாதுவிடம் இருந்த 23 ட்ரங்குப்பெட்டிகளின் உடைமைகளைப் பார்வையிட அனுமதிபெற்று பார்வை யிட்டபோது அந்தப்பெட்டிகளில் மொத்தம் 2673 பொருள்கள் இருந்தமை கண்டறியப் பட்டது. லலிதா போஸ் அந்த உடைமைகளில் இருந்த கடிதங்களில் இருந்த எழுத்துகளைக் கண்டு அது தனது மாமாவின் கையெழுத்துகள் என்றும் அங்கிருந்த புகைப்படங்கள் சிலவற்றில் குடும்பப் படங்களும் இருப்பதாகவும் கூறியபோது. அவை ஏற்கப்படாமல் அந்த 2673 பொருள்களும் மீண்டும் 23 பெட்டிகளில் அடைக்கப்பட்டு மாவட்ட ஆவணக்காப்பகத்தில் பாதுகாக்கப்பட்டது.

(மர்மம் தொடரும்)

**“1954 ஆம் ஆண்டு நேதாஜி விமான விபத்தில் இறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டபின்னர் சுதந்திரம் பெற்ற இந்தியாவில் முடிசூட்டிக் கொண்ட நேரு அப்போதும் சரி அதற்கும் முன்னரும் சரி.. எந்தவிதமான துயர அறிக்கையும் வெளியிடவில்லை. மாறாக இந்திய தேசிய காங்கிரஸ் நேதாஜியின் இறப்பை ஒரு சிறிய தீர்மானத்தின் மூலம் காட்டிக்கொண்டுவிட்டு அமைதியானது. காரணம் நேரு காந்தி கூட்டணிக்கு நேதாஜியின் வளர்ச்சியும் வழிமுறைகளும் பிடிக்காமல் போனதுதான்.”**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 6, வெள்ளவத்தை, பெரும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட் மார்க் எண்டர் பிறைஸ் ஸ்தாபனத்தால், 2014 டிசெம்பர் 10ஆம் திகதி வெளியிடப்பட்டது.